23

# உதயன்

www.onlineuthayan.com

30 பக்கங்கள் சுடர் 27 கதிர் 363 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (23/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# அவசரமாக அமெரிக்கா விரைந்தார் ஜனாதிபதி

## கஸகஸ்தானிலிருந்து அதிரடி வியூகம்; வோஷிங்டனில் முக்கிய சந்திப்புகள்

கொழும்பு, நவம்பர்23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவசரமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

தனது கஸகஸ்தான் பயணம் முடிந்த கையோடு அங்கிருந்தே அவர் அமெரிக்கா பறந்தார்.

கஸகஸ்தான் பயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நாடு திரும்பவே முன்னர் திட்டமிருந்தது. எனினும், இறுதி நொடியில் அவரின் பயண நிகழ்ச்சி நிரல் மாற்றியமைக்கப்பட்டது.

ஒருவார காலம் அமெரிக்காவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி அங்கு முக்கிய சந்திப்புகளை நடத்துவார் என்று அறிய முடிகின்றது.

ஜெனிவாத் தீர்மானம், நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை, தீர்வுத்திட்டப் பேச்சு, மாகாணசபைத் தேர்தல், ஐ.நா.உள்ளக அறிக்கை ஆகிய விடயங்கள் உட்பட முக்கிய பல விவகாரங்கள் தொடர்பில் இச்சந்திப்புகளின்போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவில் தனி

பார்க்க பக்கம் 4

## வெள்ளத்தால் நிரம்பிய குழியுள் வீழ்ந்து குழந்தை பரிதாபச் சாவு

### மிருசுவில் வடக்கில் நேற்று சோகம்

தென்மராட்சி, நவ. 23

மிருசுவில் வடக்கில் உள்ள வீடு ஒன்றின் முன்பாகக் காணப்பட்ட வெள்ள நீர் நிறைந்த குழிக்குள் இருந்து ஆண் குழந்தையின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

ஒன்றரை வயதான ஜெயசுதன் மதுசனே உயிரிழந்த குழந்தை ஆகும். அவனது வீட்டு வளவில் இருந்த வெள்ள நீர் நிறைந்த குழிக்குள் இருந்தே சடலம் மீட்கப்பட்டது. குழந்தை தவறுதலாக குழிக்குள் விழுந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தென்மராட்சிப் பகுதியில் நேற்று கடும் மழை பெய்தது. அப்போது மதுசன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்துள்ளான். திடீரென அவனைக் காணாது பெற்றோர் தேடினர். எங்கு தேடியும் அவன் கிடைக்கவில்லை.

வீட்டு வளவுக்குள் வெட்டப்பட்ட குழி ஒன்று இருக்கிறது. கடைசியில் பெற்றோர் அதற்குள் எட்டிப் பார்த்தனர். அங்கே மயங்கிய நிலையில் குழந்தை கிடந்தான்.

உடனடியாக அவனைத் தூக்கிக் கொண்டு மிருசுவில் வைத்தியசாலைக்கு விரைந்தனர். ஆனால் குழந்தை ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக

பார்க்க பக்கம் 4

## கோத்தாவுக்கு நட்டஈடு 25 கோடி

கொழும்பு, நவ.23

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ரூபா 25 கோடி நட்டஈடு வழங்குமாறு 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு கல்கிஸை நீதிவான் நிதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளருக்கு அபகீர்த்தி ஏற்படுத்

பார்க்க பக்கம் 4

## அமெரிக்காவின் கைப்பாவை ஐ.நா. நேற்று ஈழம் நாசம்; இன்று காஸா

### விக்கிரமபாகு காட்டம்

கொழும்பு, நவ.23

காஸா மீது கொடூரத் தாக்குதலை மேற்கொள்ளும் இஸ்ரேலுக்கு இன்று உதவுவதுபோல்தான் அன்று ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுக்கு அமெரிக்காவும் அதன் கைப்பாவையாகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவிகளை வாரி இறைத்தன என்று நவசமசமாஜக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இறுதிக்கட்ட போர் தொடர்பில் பல பரபரப்பான தகவல்களை வெளியிட்டுள்ள ஐ.நாவின் உள்ளக விசாரணை அறிக்கை தொடர்பில் கருத்துவெளியிடும்போதே கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன இப்படிக் கூறினார்.

"செய்வதையெல்லாம் சரிவரச் செய்து முடித்துவிட்டு இன்று தமிழர் தொடர்பில் ஐ.நா. நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. ஐ.நா. தற்போது கற்பிக்கும் நியாயத்தை எம்மால் ஒருபோதும் ஏற்க முடியாது. பான் கீ - மூனுக்கு

பார்க்க பக்கம் 4

## தெரிவுக்குழு அமர்வை ஒத்திவைக்க பரிந்துரை

### ஷிராணிக்கு எதிரான

கொழும்பு, நவ.23

மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரிய அரசமைப்புத் தொடர்பான விளக்கம் வழங்கப்படும் வரை பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணையை விசாரணை செய்யவுள்ள நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் இன்றைய அமர்வை ஒத்திவைப்பது உகந்தது என உயர் நீதிமன்றம் நேற்று பரிந்துரை செய்தது.

நிறைவேற்று அதிகாரம் - நாடாளுமன்றம் - நீதிமன்றம் ஆகியவற்றுக்கு இடையிலான இந்தப் பிரச்சினை சுமுகமான முறையில் கையாளப்பட வேண்டும் என்பதால் இன்றைய அமர்வு ஒத்திவைக்கப்படுவது உகந்தது என உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒன்பது மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்டபோதே இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான நிமல் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் மற்றும் பிரியசாத் டெப் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு நீதிமன்ற அதிகாரம் இல்லை என தெரிவித்து குறித்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அரசமைப்புத் தொடர்பான விளக்கத்துக்காக அவை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. இலங்கை அரசமைப்பின்படி அரசமைப்புத்

பார்க்க பக்கம் 4

## இலங்கை செய்மதிக்கு சீன உதவி; தனது பாதுகாப்பில் இந்தியா தீவிரம்

கொழும்பு, நவ.23

இலங்கை தனது முதலாவது செய்மதியை விண்ணுக்கு அனுப்புவதற்கு சீனாவின் ஒத்துழைப்பைப் பெற்றிருப்பதால் ஏற்படக் கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து இந்தியா ஆராயத் தொடங்கியுள்ளது.

சுப்ரீம் செட் - 1 என்ற இலங்கையின் முதல் செய்மதியை விண்ணுக்கு அனுப்புவதற்கு இலங்கை சீனாவின் உதவியைப் பெற்றிருப்பதால் பாதுகாப்பு ரீதியில் ஏற்படும் தாக்கங்கள் குறித்து இந்தியப் பாதுகாப்புத்துறை உடனடிக் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய இராஜதந்திரி ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

முன்னதாக இந்தச் செய்மதி நேற்றுமாலை விண்வெளிக்கு அனுப்பப்படவிருந்தது. ஆனால் காலநிலை மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்

பார்க்க பக்கம் 4

## யாழ்.பல்கலை நியமனங்கள் மீண்டும் கிளம்பியது சர்ச்சை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு கணினிப் பிரயோக உதவியாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்களை நியமிப்பது தொடர்பில் மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த 3 பதவிகளுக்கும் 41 பேர் நியமனம் செய்யப்பட உள்ளனர். இவர்களுக்கான எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்

பார்க்க பக்கம் 4

## வல்வை கடலில் நேற்று முறுகல்

### விசைப்படகு – சிறுதொழில் மீனவர்கள் இடையில்

வடமராட்சி, நவ.23

வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள சிறுதொழில் புரிவோருக்கும் பெரும் தொழிலில் ஈடுபடுவோருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனால்ஏற்பட்ட கைகலப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் காயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிறுதொழிலில் ஈடுபட்ட ஆதிகோயிலடியைச் சேர்ந்த சிவகுரு செல்லத்துரை (வயது-68), அவரது பிள்ளைகளான சித்திவிநாயகம் (வயது-42), செல்லக்கணபதி (வயது-40) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் அவர்கள் சிகிச்சை பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுமரங்களில் சென்று தொழில் புரியும்

பார்க்க பக்கம் 4

## கிணற்றில் தவறி விழுந்து எட்டு வயதுச் சிறுமி சாவு

### ஒட்டுசுட்டானில் சம்பவம்

முல்லைத்தீவு,நவ.23

கிணற்றில் தவறி விழுந்த எட்டு வயதுச் சிறுமி உயிரிழந்தார். இந்தச் சோகச் சம்பவம் ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

உதயகுமார் கிருசனா நேற்று முன்தினம் கிணற்றில் தவறி வீழ்ந்தார்.

இவரது தந்தையார் சுகவீனம் காரணமாக முள்ளியவளை மாஞ்சோலை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்

பார்க்க பக்கம் 4

## தமிழ் அரசியல் கைதி சிறையில் புதனன்று சாவு

கொழும்பு, நவ.23

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் திடீரென உயிரிழந்தார்.

சிலாபம் யூனியன் தோட்டத்தைச் சேர்ந்த அன்ரனி ஜோஸப் (வயது - 55) என்ற கைதியே உயிரிழந்தவராவார். இவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், போதுமான மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் நோய் கடுமையாகி சிறைச்சாலை வைத்தியசாலையில் இறப்பு சம்பவித்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தில் 2008 மே 29 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார். கைதானபோதே நீரிழிவு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகி இருந்த இவர் படையினரின் பல்வேறு துன்புறுத்தல்கள் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இவரைப்

பார்க்க பக்கம் 4

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.

நாளை சனிக்கிழமை முதல் பஸ் போக்குவரத்துள்ள, இலகுவில் எம்மை வந்தடையக்கூடிய மேற்படி முகவரிக்கு இடமாற்றம் காண்கின்றோம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
0212219016, 0778418344

(26898)(3.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்துக்கு எதிரான ராஜபக்ஷ அரசை வீழ்த்த 'மக்கள் பேரவை' உருவாக்கம்

## கொழும்பில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் ரணில் உரை

கொழும்பு, நவ.23

நாட்டின் அரசமைப்புக்கும், சட்டத்துக்கும் எதிராகச் செயற்பட்டுவரும் ராஜபக்ஷ ரெஜிமென்ட் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கும் மாபெரும் சக்தியான மக்கள் பேரவையை தாம் உருவாக்கியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அமெரிக்கப் பிரதிநிதிகள் சுயாதீனமாக முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையே இன்றைய ஐக்கிய அமெரிக்க இராச்சியம் உருவாக வழிவகுத்தது என்று தமது செயலுக்கு உதாரணங்காட்டினார்.

''மக்களுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் இந்த வரவு -செலவுத்திட்டம் தொடர்பில் மக்கள் தமது கருத்துகளைச் சுதந்திரமாகத் தெரிவிக்கவேண்டும். இதனை அடிப்படையாகக்கொண்டு நாம் அடுத்த வருடம் ஆரம்பம் முதல் வீதிக்கு இறங்கி நாடு முழுவதும் அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற 'மக்கள் பேரவை' ஆரம்ப நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களை அடக்கும் ராஜபக்ஷ 'ரெஜிமென்டுக்கு' எதிராகக் குரல் எழுப்பவே நாம் இந்த மக்கள் பேரவையை உருவாக்கியுள்ளோம். வேறு பல நாடுகளிலும் அரசுக்கு எதிராகப் பல அமைப்புகள் உருவாகி அந்த அரசுகளை வீழ்த்தியுள்ளன. ஆயுத பலத்தைப் பிரயோகிக்காமல் ஜனநாயக முறையில் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு இந்த அரசை எதிர்க்கும் நடவடிக்கைகளில் நாம் இறங்கவுள்ளோம்.

பிரிட்டனில் சார்ள்ஸ் மன்னர் முன்னொரு காலத்தில் நாடாளுமன்றத்தை மூடச் சென்றபோது மக்கள் சபையாக நாடாளுமன்றம் கூடியது. அத்துடன், பிரிட்டன் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அமெரிக்க பிரதிநிதிகள் சுயாதீனமாக ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கைகள்தான் இன்று ஐக்கிய அமெரிக்க இராச்சியம் உருவாக வழிவகுத்தது.

சீனாவில் தற்போதுள்ள நாடாளுமன்றத்திற்கு ஒரே ஒரு ஆலோசகர் சபையாகச் செயற்படுவது மக்கள் சபைதான்.

ராஜபக்ஷ ரெஜிமன்ட் நாட்டின் அரசமைப்புக்கும், சட்டத்துக்கும் அடிபணிந்து செயற்படுமாயின் மக்கள் பேரவை அமைத்து அதனூடாக அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டிருக்காது.

மக்களின் நலன்களுக்கமைய நாடாளுமன்றம் செயற்படவேண்டும். ஆனால், நமது நாடாளுமன்றம் அவ்வாறு செயற்படுவதில்லை.

1952ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தபோதும் அரசில் இருந்த பல மாறுபட்ட கருத்துகளால் டட்லி சேனாநாயக்க, ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவா ஆகியோருக்கிடையில் பேதம் ஏற்பட்டது.

இதுபோலவே வரலாற்றில் சில சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் நாடாளுமன்றத்திற்கும், நீதித்துறைக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றும் வாய்ப்புள்ளது.

மக்களது பிரச்சினைகள் குறித்து ஆளுந்தரப்பினர் நாடாளுமன்றத்தில் கதைப்பதில்லை. எதிர்க்கட்சியிலுள்ள 63 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இதுபற்றிக் கதைக்கின்றனர்.

அரபு நாடுகளில் அரசு மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை எதிர்க்க அரபு வசந்தம் தோற்றம் பெற்றது. அதனால் நாம் இன்று வரவு-செலவுத்திட்டம் குறித்து சுதந்திரமாகக் கருத்து வெளியிடவேண்டும்.

மக்கள் பேரவையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க அடுத்த வருடம் ஆரம்பம் முதல் வீதிக்கு இறங்கி தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளோம். பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் அன்று நடந்ததைப்போலவே இலங்கையில் இந்த அரசின் ஆட்சியில் ஜனநாயக கட்டமைப்பு அப்படியே சீர்குலைந்துள்ளது. எனவே, ஜனநாயக் கட்டமைப்பை மறுபடியும் கட்டியெழுப்ப இந்த மக்கள் பேரவையூடாக நடவடிக்கை எடுத்து மஹிந்த ரெஜிமன்ட் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவோம் - என்றார். (உ-சி)

### அஸ்வரின் செயல் அருவருக்கத்தக்கது –பிரபாகணேசன்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் அஸ்வர் நடந்துகொள்ளும் விதம் கேவலமாகவும் அருவருக்கத்தக்க விதத்திலும் உள்ளது. இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

ஈ.சரவணபவன் நாடாளுமன்றில் உரை நிகழ்த்தும்போது அஸ்வர், அவரின் உரையைக் குழப்ப முயன்ற சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரபா கணேசன் மேலும் தெரிவித்ததாவது :-

நாடாளுமன்றில் கருத்துக்களைக் கூறுவதற்கு சகல உறுப்பினர்களுக்கும் உரிமை உள்ளது. அவர்களின் கருத்துச் சுதந்திரத்தைத் தடுக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது. வடபகுதி மக்களின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமையுள்ளது.

இதைவிடுத்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அஸ்வர் இடைநடுவில் மூக்கை நுளைப்பது கேவலத்துக்குரியதாகும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு சபாநாயகர் இனியும் இடமளிக்கக்கூடாது - என்றார். (ங-16)

### கடனைத் திருப்பிக் கேட்டவர் மீது கல்லால் குத்தித் தாக்குதல்

தென்மராட்சி, நவ.23

கொடுத்த கடனைக் கேட்டவரை கல்லால் குத்திக் காயப்படுத்தினார்கள் என்று கூறப்படும் சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியா நம்பைக்குளத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் அரியாலையைச் சேர்ந்த குடும்பத்தினருக்குப் கடன் வழங்கியுள்ளார். கடனைத் திருப்பித் தருவதற்கான காலம் முடிவடைந்ததால் பல தடவைகள் இங்கு கடனைத் திருப்பிக் கேட்டுள்ளார். ஆனால் கிடைக்கவில்லை.

கடன்கொடுத்த பெண் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சாவு வீட்டில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பும் போது கடன் கொடுத்தவரிடம் அதனைத் திருப்பிக் கேட்டார். அப்போது கடன்வாங்கியவர் பெண்ணை கல்லால் அடித்துக் காயப் படுத்தினார் என்று கூறப்படுகிறது. அடிவாங்கிய பெண் வாகனத்தில் பயணித்தபோது சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் பிறிதொரு வாகனத்தில் துரத்தி வந்த இருவர் பெண்ணின் வாகனத்தை மறித்து அதிலிருந்தோரைத் தாக்க முயற்சித்தனர். அவ்வேளை அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாரும் படையினரும் இருவரையும் பிடித்துப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அதனைத் திருப்பிக் கேட்டார். அப்போது கடன் வாங்கியவர் பெண்ணை கல்லால் அடித்துக் காயப் படுத்தினார்

மேலும் கல்லால் அடித்ததில் காயமடைந்த வவுனியா நம்பைக்குளத்தைச் சேர்ந்த விஜயன் மேரி ஜீரீற்றா (வயது-48) சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (த-9)

### பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்பு

#### ஐ.தே.க. பெண் எம்.பி. விசனம்

மகளிர் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனங்கள் அனைத்திலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஆனால், இங்குதான் பாலியல் வன்முறைகளும் சிறுவர் துஸ்பிரயோகமும் பெருமளவு அதிகரித்துள்ளன; பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரோஸி சேனநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது- 2009, 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 9,482 பெண்கள் மீது பாலியல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. 8,431 சிறுவர் துஸ்பிரயோகங்களும், மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான 15,138 வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஒட்டுமொத்தமாக இக்காலப்பகுதியில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் சம்பவங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

நாட்டின் சனத்தொகையில் ஆறுசதவீதமான பெண்கள் இளம் வயதில் கர்ப்பம் அடைந்துள்ளனர்.

இவற்றைக் கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நாடாளுமன்றத்திலும் பல பெண் உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனால் மகளிர் விவகார அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் ஆண்களே இருக்கின்றனர் என்பதும் கவலைக்குரியது.

வடக்கு- கிழக்கில் 89 ஆயிரம் விதவைகளும் தென்பகுதியில் 30 ஆயிரம் விதவைகளும் இருக்கின்றனர். இந்த வரவு - செலவுத்திட்டத்தில் இவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவில்லை.

தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை வெளிநாடுகளில் பணிப்பெண்களாகத் தொழில் செய்யும் பெண்களும், பெருந்தோட்டப் பெண்களுமே பெற்றுத்தருகின்றனர். ஆனால், அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

பெண்களின் பாதுகாப்பு, பெண்களுக்கான அபிவிருத்தி, தீர்மானம் எடுக்கும் தன்மை, நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்ற அடிப்படையில் பெண்களுக்கான பாதுகாப்பு ஆகியன பரிசீலனை செய்யப்படவேண்டும்.

மஹிந்த சிந்தனையில் 25 சதவீதமான பங்களிப்பு பெண்களுக்கு வழங்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சபையில் கூட 13 பேர் மட்டுமே இருக்கின்றோம். நிர்வாக சேவையில் 8 சதவீதமான பெண்களே இருக்கின்றனர். மகளிர் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா. சாசனங்கள் அனைத்திலும் இலங்கை கையெழுத்திட்ட போதிலும் இங்கு அவை பேணப்பட்வில்லை என்றும் ரோஸி சேனாநாயக்க கூறினார். (உ-சி)

### வீதிக் கிடங்கில் விழுந்து இறந்தவரின் குடும்பத்துக்கு உதவித் தொகை

யாழ்ப்பாணம், நவ.23

கே.கே.எஸ். வீதியில் யாழ். நாச்சிமார் கோயிலுக்கு அருகாமையில் வீதி திருத்தத்துக்காக வெட்டப்பட்டிருந்த கிடங்கினுள் வீழ்ந்து உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு உதவித்தொகை வழங்குவதற்கு குறித்த ஒப்பந்த நிறுவனம் இணங்கியுள்ளது. வீதி அகலிப்புக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப்பணிப்பாளர் மோசஸ் மரியதாஸன் தெரிவித்தார்.

பிரதான வீதிகளில் அகலிப்பு வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனங்களுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது குறித்து மோசஸ் மரியதாஸன் மேலும் கூறியதாவது:

வீதி அகலிப்பு வேலைகளை மிகச் சிறப்பானதாக மேற்கொள்வதற்காக நாம் நடைமுறைகளை இயன்றவரை இறுக்கியுள்ளோம்.

மேலும் கே.கே.எஸ். வீதியில் நாச்சிமார் கோயிலுக்கு அருகில், வீதி அகலிப்புக்காக வெட்டப்பட்ட கிடங்கினுள் வீழ்ந்து பின்னர் உயிரிழந்தவருக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.

உயிரிழந்தவர் தொடர்பான பொலிஸ் மற்றும் வைத்தியசாலை அறிக்கைகள் அவருக்கு எதிராகவே உள்ளன. ஆனாலும் அவரது உயிரிழப்பை மனிதாபிமான ரீதியில் அணுகி, உதவி செய்வதற்கு மேற்படி திருத்த வேலைகளில் ஈடுபடும் ஒப்பந்த நிறுவனம் இணங்கியுள்ளது.

மேலும் வீதித் திருத்தக் குறியீடுகள், வீதித் திருத்தத்துக்காக வெட்டப்பட்ட குழிகள் தொடர்பான எச்சரிக்கைக் குறியீடுகள் என்பன உரிய முறையில் பேணப்பட வேண்டும் என்று ஒப்பந்த நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (த-5)

### உள்ளூராட்சி சபைகளின் ஆயுள் நீடிக்கப்படலாகாது

#### நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி.

கொழும்பு, நவ.23

உள்ளூராட்சி சபை வட்டாரங்களின் எல்லைகளை உடனடியாக மீள் நிர்ணயம் செய்வது அவசியம். இல்லாவிடில் இந்தச் சபைகளின் ஆயுள் காலத்தை நீடிக்க வேண்டியிருக்கும். ஆனால் அது ஜனநாயகத்துக்கு மாறான செயலாகும்- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றில் தெரிவித்தார். வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான எல்லை மீள் நிர்ணய தேசியக் குழுவொன்றும் நியமிக்கப்பட இருக்கின்றது. 2010 ஆம் ஆண்டு இதற்கான சட்டமுன் வரைவு சபையில் தாக்கல்செய்யப்பட்டபொழுது வட்டாரங்களின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

எதிர்வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சில உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவிருப்பதால் எல்லை நிர்ணயம் அவசரமாக செய்யப்படுவது அவசியம். எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படாவிட்டால் அந்தச் சபைகளின் ஆயுள் காலத்தை நீடிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும்.

ஆயினும் இந்தச் சபைகளின் ஆயுளை நீடிப்பதென்பது நிச்சயமாக ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகவே இருக்கும்.- என்றார். (ங-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.முஸ்லிம் வட்டாரம் காதி அபூபக்கர் வீதி, முதலாம் ஒழுங்கை 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் யாழ்.மாநகர சபையால் புனரமைக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் வைரவர் வீதி, கமால்வீதி ஆகியனவையும் புனரமைக்கப்பட உள்ளன. யாழ்.மாநகரசபை உறுப்பினர் எம்.சுபியான், மாநகர முதல்வரின் செயலாளர் எஸ்.பற்குணராஜா ஆகியோர் வீதிக்குத் தாரிடும் பணியை ஆரம்பித்து வைக்கின்றனர். (ம-7)

# மீளச் செலுத்த முடியும் என்றால் கடன் பெற்று தொழில் செய்யுங்கள்

## நெல்லியடி வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.23

கடன்களைப் பெற்றுத் தொழில் செய்யும் போது கடனுக்கு உரிய வட்டியும் செலுத்தி இலாபமும் கிடைக்குமாயின் கடன்பெற்று தொழில் செய்யலாம்.

கடனைப்பெற்று அதற்குரிய வட்டியையும் முதலையும் செலுத்த முடியாது என்று தெரிந்தும் கடனைப் பெற்று விட்டு தலைமறைவாகுவது ஒட்டு மொத்த வர்த்தக சமூகத்துக்கே அவமானத்தை ஏற்படுத்தும். எனவே வர்த்தகர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

நெல்லியடி வாணிபர் கழகத் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது வளர்ந்து வரும் வர்த்தக நகரமாக நெல்லியடி விளங்குகின்றது. நீண்ட காலமாக எமது வர்த்தகர்கள் நேர்மையாகச் செயற்பட்டு நிதி நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணி வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் வெளியாரின் ஊடுருவல்களால் வர்த்தக செயற்பாடுகளில் மந்தநிலை காணப்படுகின்றது. வர்த்தகர்கள் இதனால் நிதி நெருக்கடிக்கு ஆளாகின்றனர்.

இதனைச் சாதகமாக்கி சிலர் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கல் வங்கல் செய்கின்றனர். இவர்கள் தொடர்பில் யாரும் நடவடிக்கை எடுப்பதில்லை.

இதுவே நெல்லியடிப் பிரதேசத்தில் சில வர்த்தகர்கள் தலைமறைவாகக் காரணம். இதனை அடுத்து யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத்தால் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது. இதற்கு அமைவாக செயற்பட்டால் பிரச்சினைகளை தவிர்க்கலாம்.

ஒரு பொருளை கொள்முதல் செய்து அதற்காகப் பெறும் கடன்களை வட்டியுடன் இலாபமும் சேர்த்து கிடைக்கப் பெறுமாயின் அந்தக் கடனைப் பெற்று அந்தத் தொழிலை மேற்கொள்ளலாம். வட்டியையும் முதலையும் செலுத்த முடியாது என்று தெரிந்தும் கடனைப் பெற்று விட்டு வட்டியும் முதலும் செலுத்த முடியாமல் தலைமறைவாவதால் ஒட்டு மொத்த வர்த்தக சமூகத்தினருக்கே அவமானம் ஏற்படுகின்றது. எனவே சிந்தித்து வியாபாரம் மேற்கொள்ளவும்- என்றுள்ளது. (ம-5)

# திட்டமிடலுடன் செயற்படுத்தப்படாத யாழ்.நகர வீதி திருத்தப் பணிகள்

## கவலை தெரிவிக்கிறார் அரச அதிபர்

*யாழ்ப்பாணம்,நவ.23*

*யாழ்.நகரில் இடம்பெற்றுவரும் வீதிப் புனரமைப்புப் பணிகள் உரிய முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படவில்லை. வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறும்போது பொது மக்களின் போக்குவரத்துக் குறித்து மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.*

நேற்று புதன்கிழமை யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் தற்போது இடம்பெற்றுவரும் வீதி புனரமைப்புப் பணிகள் குறித்த கலந்துரையாடல் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

வீதி புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் உரிய முறையில் இடம்பெறவில்லை.

பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள் சிரமங்கள் குறித்து பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

சில வருத்தத்துக்குரிய சம்பவங்களும் இடம்பெற்று வந்துள்ளது. உரிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாமையால் இந்தச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன.

இதுபோன்றவை தொடர்ந்தும் ஏற்படும் பட்சத்தில் பொதுமக்கள் இதற்கு எதிராகவோ நேரடியாகவோ தமது எதிர்ப்புக்களைக் காட்டும் நிலை உருவாகலாம்.-என்றார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பன நடந்துகொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் இதில் விளக்கம் அளிக்கப்பட்டது. (ம-7)

## விழிப்புணர்வு ஆற்றுகை

வடமராட்சி, நவ.23

வடமராட்சி கிழக்குப் பிரதேச மட்ட கலைப் படைப்புக்களை வெளிக் கொண்டு வருமுகமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செம்பியன்பற்று பிலிப் நேரியார் தேவாலய முன்றிலில் விழிப்புணர்வு ஆற்றுகை நடைபெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் ஆற்றுகையில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றுவர். (ம-8)

## சங்கக் கிளைகளுக்கு மூடுவிழா

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்.குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில நஷ்டத்தில் செயற்படும் கிளை விற்பனை நிலையங்களை மூடி வருகின்றன.

சில சங்கங்கள் கிளை விற்பனை நிலையங்களை அதன் வருமான எல்லைக்கு அதிகமாகத் திறந்ததாலேயே சங்கங்கள் நஷ்டத்தில் செயற்படக் காரணம் என்று கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக போதிய வியாபார நடவடிக்கைகள் இன்றி நஷ்டத்தில் இயங்கும் கிளை விற்பனை நிலையங்களைத் தொடர்ந்து நடத்துவதில் எந்தவித பயனும் இல்லை என்பதால் அவை மூடப்படுகின்றன. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

பரிசளிப்பு விழா

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ந. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம-8)

கலந்துரையாடல்

முன்னேற்ற மீளாய்வு தொடர்பான யாழ்ப்பாண கல்வி வலயப்பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-14)

திருமண மண்டபத்திறப்புவிழா

கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய திருமண மண்டப திறப்பு விழா காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் பொ. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் கலந்து கொள்வார். (ம-253)

# கிளாலியில் இளைப்பாற்று மண்டபம்; ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் நிலை

## காணியை கடற்படை உரிமை கோருவதே காரணம்

வலி.தென்மேற்கு, நவ.23

கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி அந்தப் பிரதேசத்தில் இறங்குதுறைக்கு அருகில் இளைப்பாற்று மண்டபம் அமைப்பதற்குக் கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட்ட 21 லட்சம் ரூபா நிதியைத் திருப்பி அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**கடற்படையினர் குறித்த காணி கடற்படையினருக்குச் சொந்தமானது என்று தெரிவித்து மண்டபம் அமைப்பதற்குத் தடை விதித்துள்ளனர்.**

இந்த நிலை குறித்து விரக்தியும் கவலையும் அடைந்துள்ள மீனவர்கள் இந்த நிதி திரும்பிச் செல்லாத வகையில் இளைப்பாறும் மண்டபத்தை விரைவாக அமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பிரதேசத்தில் கிளாலிப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மீனவர்கள் தொழில் செய்வதற்கு வசதியாக அந்தப் பிரதேசத்தில் இறங்குதுறைக்கு அருகில் யாழ். ஆயரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரண்டு பரப்புக் காணியில் கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட்ட 21 லட்சம் ரூபா.செலவில் இளைப்பாறு மண்டபம் கட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மண்டபம் கட்டுவதற்கான நிதியும் கிளிநொச்சி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் குறித்த காணி கடற்படையினருக்குச் சொந்தமானது என்று தெரிவித்து மண்டபம் அமைப்பதற்குத் தடை விதித்துள்ளனர்.

கடற்படையினரின் இந்த அடாவடித்தனத்தால் கட்டடம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இதற்காக அனுப்பப்பட்டுள்ள நிதியும் திருப்பி அனுப்ப வேண்டிய நிலையிலுள்ளது. இது குறித்து கவலை தெரிவித்துள்ள மீனவர் மண்டபத்தை விரைவாக அமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று கேட்டுள்ளனர். (ம-115)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் கள் விற்பனை நிலையச் சூழல்

அளவெட்டி மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தின் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதால் தொற்று நோய்கள் பரவக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த கள் விற்பனை நிலையத்தின் சுற்றுப்புறச் சூழல் பற்றைக் காடாகக் காட்சியளிக்கிறது. பொலித்தீன் மற்றும் விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்டும் உள்ளன. இதன் காரணமாக அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

இந்தக் கள் விற்பனை நிலையத்தை அண்டிய பகுதிகளில் 3 சனசமூக நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சுற்றுப்புறச் சூழலின் சுகாதாரம் தொடர்பாக அந்தப் பகுதி கிராம சேவகரோ, சனசமூக நிலையங்களோ, பிரதேச சபையோ எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பாக அந்தப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கள் விற்பனை நிலையத்தின் சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக மக்களால் எந்த முறைப்பாடும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் அதனை அவதானித்துக் குறித்த பகுதியில் சுற்றுச் சூழலில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (ம-14-36)

## ஓய்வூதிய நிதிய உதவிகள்

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை, வடமராட்சி, வடக்குப் பிரதேச செயலர் பிரிவுச் சங்கம் இந்த ஆண்டில் கடந்த மாதம் வரை ஓய்வூதியர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது. இந்தச் சங்கம் 5 பேருக்கு இறப்பு மானியமும் 2 பேருக்கு கண் சிகிச்சை மானியமும் 2 பேருக்கு வைத்திய சிகிச்சை மானியமும் ஒருவருக்கு பல்கலைக்கழக மானியமும் வழங்கியுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோகேஸ்வரனின் கடத்தல்; ஜனநாயகத்துக்கு சவால்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவகப் பகுதி செயற்பாட்டாளரான சதாசிவம் யோகேஸ்வரன் கடத்தப்பட்ட சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் - இவ்வாறு யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தீவக இளைஞர் அமைப்பாளருமான அஸ்.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளதாவது:-

அரசுடன் சேர்ந்தியங்கும் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவர், கடத்தல் சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பு யோகேஸ்வரனைத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தியுள்ளார்.

தற்போது நாட்டில் அவசரகாலச் சட்டமோ அல்லது பயங்கரவாத சட்டமோ இல்லாத நிலையில், இது ஒரு கடத்தல் சம்பவமே என்பது உறுதியாகியுள்ளது.

தேர்தல் காலங்களில் ஜனநாயகம் பற்றிப் பேசும் அரசுடன் இயங்கும் குறித்த அரசியல் கட்சியினர் , ஒவ்வொரு வருடமும் ஓரிரண்டு பேரைக் கடத்துகின்றனர். சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துகின்றனர். பெண்களின் கற்பை சூறையாடுகின்றனர். இதுதான் இவர்களின் ஜனநாயகமா?

முடிந்தால் உங்களுக்கென ஒரு ஒழுங்கான கொள்கையுடன் செயற்பட்டுப்பாருங்கள். அதைவிடுத்து நாளுக்கு நாள் ஒவ்வொரு கொள்கைகளை கூறித் திரியாதீர்கள்.

இது போன்ற செயற்பாடுகள் தொடருமாயின் அந்த அரசியல் கட்சியை யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் ஓரங்கட்டியது போல தீவகத்தில் இருந்தும் விரட்டி அடிக்க வேண்டிய நிலை ஏற்படும் - என்றுள்ளது. (ந-16)

# ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் சர்வதேச திரைப்பட விழா இன்று

சர்வதேச திரைப்பட விழா இன்று யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் ஆரம்பமாகி தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

'நல்லிணக்கத்தை படமாக்குதல்' எனும் தொணிப்பொருளிலான இந்தத் திரைப்பட விழாவை கொழும்பு இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிறுவனம், யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம், மகளிர் அபிவிருத்தி நிலையம் என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. இந்தத் திரைப்பட விழாவில் படக்காட்சிகள் படமாக்கப்படுவதுடன் காட்சிகளின் பின்னர் படங்கள் பற்றிய விமர்சனங்களை துறைசார் நிறுவனங்கள் முன்வைக்கவுள்ளனர். எனவே ஆர்வலர்களை பங்குபற்றி பயனடையுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (ந-16)

## தமிழ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பிணையில் விடுவிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடமும் நீதிமன்றிலும் பல தடவைகள் முறையிட்டும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்று மனித உரிமைகள் குழுக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

அன்ரனி ஜோஸப்புக்கு 21 வயதிலும், 18 வயதிலும், 07 வயதிலும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். நீர்கொழும்புச் சிறைச்சாலையில் 18 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## அவசரமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யார்துறை வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் பிரதமர் டி.எம்.ஜயரட்ணவையும் இப்பயணத்தின்போது ஜனாதிபதி சந்தித்து சுகநலம் விசாரிக்கவுள்ளார்.

குறிப்பாக, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் இலங்கைக்கு வந்துள்ள நிலையிலேயே ஜனாதிபதியின் இந்தப் பயணமும் அமைந்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டே இவ்வாறு திடீர், இரகசிய பயண நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் பயணம் தொடர்பில் அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை. (உ-சி)

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தொடர்பான விளக்கம், அல்லது வியாக்கியானத்தை உயர் நீதிமன்றம் மட்டுமே வழங்க முடியும் இதேவேளை,தமக்கெதிரான குற்றப்பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க இன்று சமுகமளிக்கவுள்ளார்.

பிரபல சட்டத்தரணிகளான ரொமேஷ்டீ சில்வா, கந்தையா நீலகண்டன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாமுடன் பிரதம நீதியரசர் முற்படுவார் எனத் தெரிகிறது.

இதேவேளை, குற்றப் பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக இருக்கும் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எவ்வாறாயினும் இன்றைய விசாரணைகளுக்காக அவர் சமுகமளிப்பார் என்று அரச வட்டாரங்கள் கூறின.

## கிணற்றில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டிருந்தார். தாயார் அவருக்கு உணவு எடுத்துச் சென்றிருந்தார்.

வீட்டில் ஆள்கள் இல்லாததால் சிறுமி அருகிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது அந்த வீட்டுக்கு அருகில் உள்ள சுற்றுச் சுவர் அமைக்கப்படாத கிணற்றில் நீர் அள்ளினார். அப்போது தவறி உள்ளே வீழ்ந்து இறந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிற்பகல் வேளையில் சம்பவம் இடம்பெற்றபோதும் இரவு 8.30 மணியளவிலேயே சிறுமியின் உடல் கிணற்றினுள் கண்டு மீட்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனைகள் மாஞ்சோலை மருத்துவ மனையில் இடம்பெற்று விசாரணைகள் பூர்த்தியானதும் சிறுமியின் உடல் நேற்று அவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் இடம்பெற்றன . (த-500)

## வல்வை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மீனவர்களின் வலைகள் இழுவைப்படகுகளால் அறுக்கப்படும் சம்பவங்கள் வடமராட்சியில் அடிக்கடி ஏற்படுகின்றன. நேற்றும் இவ்வாறு இழுவைப்படகுகள் சென்றவேளை கட்டுமரத்தில் சென்ற மீனவர்கள் அவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்துள்ளனர்.

மீறிச் சென்ற இழுவைப்படகுகளால் கட்டுமரங்களின் வலைகள் அறுக்கப்பட்டன என்று சிறுதொழில் மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்புக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுச் சிறுதொழிலில் ஈடுபட்டோர் தாக்குதலுக்கு உள்ளாகினர் என மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது சமாதானமாகச் செல்லுமாறு பொலிஸார் பணித்தமையால் தாம் மீனவர் சங்க சமாசத்திடம் முறையிடவுள்ளனர் என்று அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி கடற்பரப்பில் இழுவைப் படகுத் தொழிலுக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ள போதும் சட்டவிரோதமாக சிலர் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். (த-8)




நாட்டின் அரசமைப்புக்கும் சட்டத்துக்கும் எதிராக செயற்பட்டு வரும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கும் வகையில் நேற்று மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

## வெள்ளத்தால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அங்கு தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் தரப்பட்டது. அவர்கள் இதனை சாவகச்சேரி நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். நீதிவானின் உத்தரவுப்படி, தென்மராட்சி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இ.தவமலர் வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை நடத்தினார். பின்னர் சடலத்தை உடல்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார். குழந்தையின் இறப்புக் குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (உ-த-9)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கள் காரணமாக அதனை அனுப்ப ஐந்து நாள்கள் தாமதமாகுமென்று நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

''சீனாவுடன் இலங்கை நெருக்கமாக செயற்பட்டு வருவதை இந்தியா நீண்ட காலம் அவதானித்து வருகிறது. அதனால் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் இந்தியாவுக்குத் தாக்கம் ஏற்படுத்துமா என்பது குறித்து புதுடில்லி கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இப்போது வந்திருக்கிறது'' என்று இந்தியாவின் அந்த மூத்த இராஜதந்திரி குறிப்பிட்டார்.

## அமெரிக்காவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
திடீரெனப் பிறந்துள்ள ஞானம், மடிந்த உயிர்களை மீண்டும் உயிர்ப்பிக்குமா?

ஐ.நா.சபையின் சுயாதீனம் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. பக்கச்சார்பின்றி செயற்படவேண்டிய அந்தச் சபையை அமெரிக்காதான் நிர்வகிக்கிறது. எனவே, இப்போது இயங்கும் ஐ.நா.சபையை ஒரு பொது அமைப்பாக ஏற்க முடியாது'' - என்றார் அவர்.

## கோத்தாவுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தும் வகையில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அந்தப் பத்திரிகை குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்தே கல்கிஸை நீதிவான் பிரியந்த பெர்னாண்டோ இந்த உத்தரவைப் பிறப்பித்தர்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஆக்கங்களை பிரசுரித்தல் மற்றும் செய்தி வெளியிடுதல் ஆகியவற்றைத் தடுக்கும் நிரந்தரத் தடையுத்தரவையும் நீதிமன்றம் பிறப்பித்தது.

போர்க் காலத்தின்போது 'மிக்' விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் சண்டே லீடர் பத்திரிகை வெளியிட்ட செய்தியின் மூலம் தனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டதாக பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பெட்ரிகா ஜோன்ஸ் மற்றும் பத்திரிகைக்கு எதிராக பாதுகாப்புச் செயலாளர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

பத்திரிகையின் ஆசிரியர் பிரட்றிகா ஜோன்ஸ் அண்மையில் 'சண்டே லீடரில்' இருந்து பதவி நீக்கப்பட்டிருந்தார். தன்னை வெளியேற்றியமைக்கு ராஜபக்ஷ குடும்பத்தின் அழுத்தமே காரணம் என்று அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். அவரது வெளியேற்றத்தின் பின்னரே பாதுகாப்புச் செயலரின் வழக்கில் 'சண்டே லீடர்' பின்வாங்கியது. (உ-சி)

## யாழ்.பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டுள்ளனர். தேர்வுக்குழு சமர்ப்பித்த பட்டியல் பேரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. ஆனால் கடந்த இரு மாதங்களாக நடைபெற்ற பேரவைக் கூட்டங்களில் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை.

அரசியல் தலையீடு காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில், தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை நாளை நடைபெற உள்ள பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும்படி பல்கலைக்கழகப் பதிவாளருக்கு தான் எழுத்து மூலம் உத்தரவு பிறப்பிப்பார் என்று துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தம்மிடம் உறுதியளித்திருந்தார் என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவிக்கிறது.

அதற்கிடையில் உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைநகல் ஒன்றில் இந்த நியமனங்களை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், இதற்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

''நியமனப் பட்டியலை பேரவைக்குச் சமர்ப்பிக்காது இடைநிறுத்தி வைக்கும் அதிகாரம் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இல்லை'' என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரம் இல்லாத நிலையில் அமைச்சு செயலாளர் இவ்வாறு செய்வது யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகளினதும் ஏனைய கல்விமான்களினதும் நேர்மைக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல் எனவும் சங்கத்தின் அறிக்கை கண்டித்துள்ளது.

''கடந்த இரு மாதங்களாக தகுந்த ஆதாரங்கள் இன்றி நியமனப் பட்டியலை பேரவைக்குச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் தங்களின் செயலை நியாயப்படுத்தும் நோக்குடன், எந்தவித ஆதாரமும் அற்ற கடிதம் ஒன்றை உயர் கல்வி அமைச்சின் செயலரிடம் இருந்து பெற்றுச் சமர்ப்பிக்கிறார்கள் என்றே நாம் கருதுகின்றோம்'' என்றும் சங்கம் கூறுகின்றது.

அரசில் பங்காளியாக உள்ள தமிழ் அமைச்சர் ஒருவரின் தலையீட்டினாலேயே இந்த நியமனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன என்று 'உதயன்' உறுதியாக அறிந்துள்ளான். தனது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படவில்லை என்பதால் இந்த நியமனப் பட்டியலை ஏற்க முடியாது என்று அந்த அமைச்சர் தனது 'தியேட்டர்' அலுவலகத்தில் வைத்து துணைவேந்தரிடமும் பீடாதிபதிகளிடமும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அவர் கொடுத்த அழுத்தத்தின் மூலமே உயர் கல்வி அமைச்சின் செயலர் இப்போது இப்படியொரு கடிதத்தை அனுப்பியிருக்கக் கூடும் என்று ஊழியர்கள் சந்தேகிக்கின்றனர்.

ஏற்கனவே ஒரு தடவை இந்த 3 பதவிகளுக்குமான நியமனத் தெரிவுகள் நிறுத்தப்பட்டிருந்தன. இது இரண்டாவது தடவையாகும்.

இதன் மூலம் அடுத்த தேர்வில் அந்த அமைச்சர் தனது கட்சிக்காரர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்க வழி வகை செய்வார் என்றும் ஊழியர்கள் அஞ்சுகின்றனர்.

''தமது சுயநலன்களுக்காக நேர்மையான நியமனங்களைத் தடுத்து நிறுத்தும் இத்தகைய கேவலமான அரசியல்வாதி குறித்து தாம் கவலையடைகின்றனர்'' என்றும் அவர்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தரகர்கள் பணம் தேடுவதற்கு வழி செய்யும் படகுப் பயணம்

"கப்பலோட்டிய தமிழன்" என்ற சினிமாப்படம் தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் உட்பட தமிழ்ப் பிரதேசங்களில் அறுபதுகளில் வெற்றிகரமாக ஓடியது. வ.உ.சிதம்பரனார் மேலைநாடு சென்று கப்பல் ஒன்றை வாங்கி வர்த்தகத் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் பயன்படுத்தினார் என்பது தரவுகள். அவற்றை அடிப்படையாக வைத்தே குறிப்பிட்ட திரைப்படம் ஆக்கப்பட்டது.

இந்திய உற்பத்திகளையும் இந்தியர்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றிச்செல்ல மேற்குலகத்தினர் மறுத்த போது, சிதம்பரனார் கப்பல் வாங்கினார் என்பது வரலாறு.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில், வல்வெட்டித்துறையில் அன்னபூரணி என்ற கப்பல் கட்டப்பட்டு வெளிநாட்டு வர்த்தகத்துக்குப் பயன்படுத்தப்பட்டது என்பது எமது பிரதேசத்தின் வரலாறு.

மேலும் தமிழகத்துக்கும் வடக்கு இலங்கைக்கும் இடையில் இலங்கை நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே உணவுப் பண்டங்களை மட்டுமன்றி பயணிகளையும் சிறுபடகுகளில் (வத்தைகளில்) ஏற்றி இறக்கி பயணங்கள் மற்றும் யாத்திரைகள் நடைபெற்றன.

ஆனால் இப்போது, ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் இலக்குடன் தரகர்கள் மூலம் பெரும் பணச் செலவில் படகுகளில் அந்நாட்டுக்குச் செல்வோர் அங்கிருந்து நவ்ரூவுக்கு அல்லது பப்புவா நியூகினியாவுக்கு அனுப்பப்படுகின்றனர்.

வீசா இல்லாமல் ஆஸ்திரேலியா செல்வோர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். மொத்தத்தில் படகுப் பயணம் பணத்தையும் வீணாக்கி, பல கஷ்டங்களை அனுபவிக்கவும் வழி செய்கிறது.

கடல்வழி ஆஸ்திரேலியப் பயணம் மிகவும் ஆபத்தானது. போய்ச் சேருமட்டும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. படகு காற்றினால் அலைக்கழிக்கப்படலாம், படகில் இயந்திரக் கோளாறு ஏற்படலாம் குறிப்பிட்ட நாள்களில் கரைசேர முடியாது. உணவு கிடையாது. பட்டினிச் சாவுகூட வரலாம். இத்தகைய துன்பங்களை அனுபவித்து ஆஸ்திரேலியா சென்றாலும் அங்கு வாழமுடியாது. அவர்கள் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படுகின்றனர். ஆஸ்திரேலியா செல்வோரின் இன்றைய நிலைமை இதுதான்.

நிறையச் சம்பாதிக்கலாம், வீட்டுக்குப் பணம் அனுப்பலாம், சொகுசாக வாழலாம் என்ற கனவுகளுடன் ஆஸ்திரேலியா செல்பவர்கள் நவ்ரூ மற்றும் பப்புவா தீவுகளில் வைக்கப்பட்டு விமானங்களில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

ஆசைவார்த்தை கூறி இவர்களைப் படகுகளில் அழைத்துச் செல்பவர்கள் சுளையாகப் பணத்தைக் கறந்துவிடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அங்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. அவர்கள் எதிர்பார்த்தவாறு தொழில் இல்லை. பணம் சம்பாதிக்க முடியாது. கூடாரங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். சில நாள்களில் பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இப்படிப் படகுகளில் சென்றோரில் 525 பேர் இதுவரை விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் நூறு பேர் ஆஸ்திரேலிய விமானப் படையின் ஏற்பாட்டில் 'கே.சி - 30' விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இன்னும் நவ்ரூ, பப்புவா தீவுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மேலும் பலர் அடுத்த சில தினங்களில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக வருவோரைத் தடுப்பதற்கும், அவர்களைக் கூட்டிச் செல்வோரின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் தனது சர்வதேச சட்டங்களை ஆஸ்திரேலியா கடுமையாக்கி உள்ளது.

தஞ்சம் கோருவோர் தொடர்பான நிபுணர் குழுவின் பரிந்துரைகளை ஆஸ்திரேலியா முழுமையாகச் செயற்படுத்தி வருகிறது. அதன் நேரடி விளைவுதான் படகுகளில் ஆஸ்திரேலியா செல்வோர் ஆள் நடமாட்டம் இல்லாத தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டு விமானங்களில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும் பரிதாபம்.

படகுகளில் சட்ட விரோதமாக ஆள்களைக் கொண்டு செல்வோர் இத்துறையில் கைதேர்ந்தவர்கள். அதனால் வெளிநாட்டுக் கனவில் மிதப்போருக்கு கடல் பயணம் மிகவும் சுலபமாகி வருகிறது. முதல் நாள் தெருவில் சந்திக்கும் ஒருவர் மறுநாள் எவருக்கும் சொல்லி விடாமல் படகில் சென்றுவிடுகிறார். இப்படிச் செல்வோரில் சிலர் இங்கிருந்து புறப்பட முன்னரே இலங்கைக் கடற்படையிடம் சிக்கி விடுகின்றனர். சிலர் குறிப்பிட்ட இலக்கை அடையாது கடலில் காணாமற் போய்விடுகின்றனர். இத்தனை ஆபத்துகள் மத்தியிலும் ஆஸ்திரேலியாவை அடைவோர் கூடாரங்களில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். அங்கு பொலிஸ் விசாரணை என்று பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து மன உளைச்சலுக்கு ஆளாகி மனநோயாளியாகி விடுகிறார்கள்.

படகுகளில் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா சென்றவர்கள் விமானம் மூலம் திருப்பி அனுப்பப்படுவது வழமையாகி விட்டது. இந்த மாதத்தில் மட்டும் ஒன்பது தடவைகள் இப்படியானோர் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஆஸ்திரேலியா தனது சர்வதேச சட்டங்களைக் கடுமையாக்கி உள்ள நிலையில், சட்ட விரோதப் படகுப் பயணங்கள் எதுவித பயனையும் அளிக்கப்போவதில்லை.

நொந்து போயிருக்கும் எமது மக்களுக்கு ஆசைவார்த்தை கூறி இப்படியானோரை அழைத்துச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாகச் செல்வோர் திருப்பி அனுப்பப்படும்போது ஆஸ்திரேலியாவுக்கான படகுப் பயணங்களை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத நிலையே பரிணமிக்கிறது. இது விடயத்தில் கையில் உள்ள பணத்தைக் கரியாக்கி, பல கஷ்டங்களை அனுபவித்து மேன்மேலும் ஓட்டாண்டியாக வேண்டுமா என்று சிந்திக்கக் கூடாதா?

# யாழ்.தபாலகத்துக்கு கூரியரால் 21 மில்லியன் ரூபா வருமானம்

## ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் வரை

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.பிரதம தபாலகம் யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகள், வெளிமாவட்டங்களுக்கு கூரியர் சேவை மேற்கொண்டதன் மூலம் இந்த வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் 21 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பிரதான தபால் திணைக் களத்தால் பதிவு செய்யப்பட்ட பொதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியதில் 21 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் ரூபாவையும் 2011 ஆம் ஆண்டு 11 மில்லியன் ரூபாவையும் பெற்றுள்ளது.

இந்த வருடம் 21 மில்லியனை வருமானமாக பெற்று உச்ச நிலையை அடைந்துள்ளது.

ஒரு மாதத்தில் 100 இற்கும் மேற்பட்ட பொதிகள் யாழ். மாவட்டத்திலிருந்து அனுப்பப் படுகின்றன.

இந்தச் சேவையில் பதிவு செய்யப்பட்ட பொதியை 5 தினங்களுக்குள் கிடைக்கக் கூடியதாக அனுப்புகிறது.

அதேவேளை, வெளிநாடுகளில் இருந்து வடமாகாணத்துக்கு பொதிகள் வந்து சேருகின்றன. அவற்றில் இந்த வருடம் ஜனவரி முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் 3 மில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இது வரையில் 500 பொதிகள் வந்து சேர்ந்துள்ளன. வடமாகாணத்துக்குரிய தபால் பொதிக்ள் யாழ். பிரதான தபால் நிலையத்துக்கே வந்து சேர்கின்றன. பின்னர் அவை வகைப்படுத்தி அனுப்பப் படுகின்றன.

தனியார் பொதி சேவையை விட தபாலகத்தின் ஊடாக அனுப்பப்படும் பொதிகள் மிகவும் சிக்கனமானவை.

பாதுகாப்பாக விரைவான சேவையைத் தபால் திணைக்களம் வழங்குகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.பிரதான தபால் திணைக்களத்தால் நான்கு மணி நேர கடுகதி பொதி சேவையின் மூலம் இதுவரையில் 10 ஆயிரத்து 610 ரூபா வரையே வருவாய் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் 4 மணி நேர கடுகதி சேவை கடந்த ஜூன் மாதம் ஆரம்பமானது.

கடந்த 5 மாத காலத்தில் 91 பொதிகளை மக்களிடையே கையளித்துள்ளது. ஜூன் மாதத்தில் 62 பொதிகளால் 7 ஆயிரத்து 10 ரூபாவும், ஜூலை மாதத்தில் 2 பொதிகளால் 370 ரூபாவும், ஓகஸ்ட் மாதத்தில் 10 பொதிகளால் ஆயிரத்து 10 ரூபாவும், செப்ரெம்பர் மாதத்தில் 5 பொதிகளால் 450 ரூபாவும், ஒக்ரோபர் மாதத்தில் 12 பொதிகளால் ஆயிரத்து 770 ரூபாவும் வருமானமாகக் கிடைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 4 மணி நேரத்திற்குள் இந்தப் பொதிகளை உரியவர்களிடம் கையளிக்க முடியும். ஏனைய மாவட்டங்கள், மாகாணங்களுக்கு 2 தினங்களுக்குள் கையளிக்க முடியும்.

இந்தச் சேவையானது மக்களிடையே போதிய விழிப்புணர்வைப் பெற்றிருக்கவில்லை. தபால் சேவையை மட்டுமே ஆற்றிவந்த திணைக்களம் தற்போது விரைவான பொதி சேவையையும் ஆற்றிவருகிறது என்று மேலும் கூறினார். (ம-13-122)

# பரிசுத் தேர்வில் தெரிவான வடமாகாண நூல்கள்

யாழ்ப்பாணம்,நவ.23

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் சிறந்த நூல்களுக்கான தேர்வுப் போட்டியில் 2011 ஆம் ஆண்டுக்கான பரிசுத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாண தமிழ் எழுத்தாளர்கள் பெயர்களும், நூல்களின் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் சிறுகதை இலக்கியத்துக்கு அல்வாய் தே.நந்தினி சேவியர் எழுதிய 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்', நாவல் இலக்கியத்துக்கு மன்னார் எஸ்.உதயன் எழுதிய 'சொடுதா', கவிதை இலக்கியத்துக்கு மட்டக் களப்பு சுந்தரம் பாண்டியன் எழுதிய 'கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள்', சிறுவர் இலக்கியத்துக்கு காரை நகர் திருமதி ஸ்ரீ.பேரின்பநாதன் எழுதிய 'கிண்கிணி நாதங்கள்', ஆய்வு விமர்சனத்துக்கு தெஹிவளை பி.பொன்னம்பலம் எழுதிய 'திறனாய்வின் புதிய திசைகள்', நாடக இலக்கியத்துக்கு கொழும்புத்துறை க.இ.கமலநாதன் எழுதிய 'ஆச்சி அச்சாப்பாட்டி', உயர் கல்வி நூலுக்கு நல்லூர் சோ.கிருஷ்ணராஜா எழுதிய 'மெய்யியல் ஓர் அறிமுகம்', பல்துறை இலக்கியம், சமய நூலுக்கு கோப்பாய் கே.வி. குணசேகரம் எழுதிய 'ஸ்ரீமத் பகவத்கீதை சுலோகம் உரை விளக்கம் கதைகள்', மொழி பெயர்ப்புக்கு கொக்குவில் சோ.பத்மநாதன் எழுதிய 'பர்மியப் பிக்கு சொன்ன கதைகள்', பொது விடய நூலாக நல்லூர் கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய 'எண்ணங்களும் வண்ணங்களும்' ஆகிய நூல்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. (ம-14)

# சாவகச்சேரி நகரசபையின் சிறுவர், முதியோர் தின நிகழ்வு

தென்மராட்சி,நவ.23

சாவகச்சேரி நகரசபையின் முதியோர் மற்றும் சிறுவர் தின விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நகரசபையில் இறுதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களும் நகரசபையின் மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளி சிறார்களும் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்கள மாவட்ட பிரதம விலை மதிப்பீட்டாளர் சு.ஜெகநாதன், கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் தெ.பிரஜீவ், யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவன உபதலைவர் டபிள்யு.விமலராஜன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நகர சபையின் துணைத் தலைவரும் உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.

விழாவில் கௌரவிக்கப்படவுள்ள முதியோர்களும், சிறுவர்களும் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-9)

# முள்ளியவளையில் கொமர்ஷல் வங்கி

தென்மராட்சி,நவ.23

கொமர்ஷல் வங்கியின் 226 ஆவது கிளை இன்று முல்லைத்தீவு முள்ளியவளையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் தலைவர் தினேஸ் வீரக்கொடி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவி டயஸ், வடமாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.பீ. ரஜீவன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொள்வர். (ம-9)

# அம்பாந்தோட்டை திட்டத்தில் 30 தொடர்மாடி வீடுகள்

கொழும்பு,நவ.23

அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அதிநவீன 30 தொடர்மாடி வீடுகளைக் கொண்ட கோபுரவடிவிலான ஐந்து கட்டடத் தொகுதிகளை அம்பாந்தோட்டை சிறிபோபுர பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக சிறிபோபுர பிரதேசத்தில் 24 ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்பை 99 வருட குத்தகை அடிப்படையின் கீழ் இந்தியாவின் கிறீஸ் குரூப் நிறுவனத்துக்கு வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நிலப்பரப்பில் அதிநவீன மாடிவீடுகளைக் கொண்டுள்ள ஐந்து கோபுரங்களுக்கு மேலதிகமாக சொகுசு வசதிகள் கொண்ட விடுதி ஒன்று அலுவலகங்களுக்கான இடவசதிகள், சில்லறை வியாபாரிகளுக்கான கட்டடத் தொகுதிகள் உள்ளடங்கும் 40 மாடிகளைக் கொண்டதான கோபுரம் ஒன்றையும் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்தும் கலந்த அபிவிருத்தித் திட்டம் ஒன்றாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தக் கட்டுமானப் பணிகளுக்காக 16 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்ட நெற்செய்கையில்

# கபில நிற தண்டு தத்தியின் தாக்கம் இம்முறை அதிகரிப்பு

## பயிர் காப்பு நடவடிக்கைக்கு அறிவுறுத்து

கிளிநொச்சி, நவ.23

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போக நெற்பயிர்களைக் கபில நிறத் தண்டுத் தத்தியின் தாக்கம் காணப்படுவதால் விவசாயிகள் உரிய பயிர்க் காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களம் கேட்டுள்ளது.

இது தொடர்பாகத் திணைக்களம் விடுத்த செய்திக் குறிப்பில், கபில நிறத் தண்டுத்தத்தி இம்முறை இளம் பருவத்திலேயே தாக்குவதை அவதானிக்க முடிகிறது. இதனை அவதானித்துக் கட்டுப்படுத்தாதுவிடின் பயிர் அழிவுகள் ஏற்படுவதற்கான சாத்தியம்அதிகரித்து விடும்.

மழையின் பின்னரான அதிகரித்த வெப்பம், பனி காரணமாக நோயின் தாக்கமும் பரவுகையும் அதிகமாக உணரப்படுகிறது.

இந்த நோய்க்கான அறிகுறிகளாக தும்பிகள் வயலில் அதிகமாகப் பறத்தல், உழவாரக் குருவிகள் பயிரின் மேல் மட்டத்தில் வட்டமிடுதல், பயிர்கள் தொட்டம் தொட்டமாக மஞ்சளாகிப் பின் முழு வயலிலும் பரவுதல், நெற்பயிர்கள் பழுப்படைந்து நுனியில் இருந்து கருகுதல், நீர் உள்ள வயல்களில் நீரின் மேற்பரப்பில் தேங்காய்த் துருவல் போன்று தூசிகள் மிதத்தல், நெற்பயிரைத் தட்டும் போது தத்திகள் பறத்தல் போன்றன காணப்படும்.

இவற்றைக் கட்டுப்படுத்த, வயலில் உள்ள நீரை வடிகட்டல், நைதரசன் உரப் பாவனையை பரிந்துரைகளுக்கமைய பாவித்தல் இவை தவிர நோய்த்தாக்கம் அதிகரிக்கும் பட்சத்தில் பொருத்தமான பீடை நாசினியை விசிறுதல் போன்றவற்றின் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியும் எனக் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

விவசாயிகள் மேலதிக விவரங்களைப் பெற கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய போதனாசிரியர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 0212225726 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலும் இவ்வாறு கபிலநிறத்தண்டுத் தத்திதாக்கம் அதிகரித்துள்ளது என்று யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## காணியை அளந்து வழங்கக் கோரிக்கை

அக்கராயன், நவ. 23.

அக்கராயன் மகாவித்தியாலயச் சூழலில் குடியிருப்போருக்குக் காணி அளந்து வழங்கப்படும் செயற்பாடுகள் நிறைவு பெறவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

30 இக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலையைச் சூழக் குடியிருக்கும் நிலையில் 14 வரையான குடும்பங்களுக்கே இதுவரை காணி அளந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய குடும்பங்களுக்குக் காணி வழங்கவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அக்கராயன் ஆரம்ப வித்தியாலய பாடசாலைக் காணியில் உள்ள 5 குடும்பங்களுக்கு காணி வழங்கி காணியிலிருந்து வெளியேற்றுமாறு கரைச்சி பிரதேச செயலர் மற்றும் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-18)

## சேதமடைந்த 62 வீடுகள் புனரமைப்பதற்குத் தெரிவு

முள்ளிவாய்க்காலில் போரால் சேத மடைந்த 62 வீடுகளைத் திருத்தி அமைக்க இந்திய அரசின் நிதியுதவியூடான திட்டத்தின் கீழ் தெரிவான பயனாளிகளின் விவரம் வெளியாகியுள்ளது.

இதன்படி முள்ளிவாய்க்காலின் சேதமடைந்த 37 வீடுகளைப் புனர மைக்கவும், முள்ளிவாய்க்கால் கிழக்கில் 25 வீடுகளைப் புனரமைக்கவும் முதற்கட்ட பயனாளிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் புனரமைப்புப் பணிகளை யு. என். கபிராற் நிறுவனம் விரைவில் மேற் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மீனவர் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி

கிளிநொச்சி, நவ. 23

பூநகரி, பளை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு திவிநெகும திட்டத்தின் கீழ் சிறுதொழிலில் ஈடுபடுவதற்கு இரு வருடங்களுக்கு வட்டியில்லாத கடனாக 60 பேருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மீனவக் குடும்பங்கள் தொழில் வசதியின்றி, வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகிறன.

இவர்களின் குடும்ப நிலைமையைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு உதவ முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு, வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன் இரு வருடங்களுக்கு வட்டியில்லாக் கடனாக 10 ஆயிரம் ரூபா வீதம் 60 பேருக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் கடனுதவி முன்னுரிமை அடிப்படையில் கருவாடு பதனிடும் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கு தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்காக வழங்கப்படவுள்ளது. (த-115)

# மருத்துவ வசதியின்றி அவதிப்படும் புதுமாத்தளன், வலைஞர்மடம் மக்கள்

## 460 குடும்பங்கள் அடிப்படை வசதியின்றி அவதி

யாழ்ப்பாணம், நவ. 23.

முல்லைத்தீவு, புதுமாத்தளன், வலைஞர்மடம் பகுதிகளில் மீள்குடியேறிய குடும்பங்கள் மருத்துவவசதி மற்றும் இதர வசதிகள் இன்மையால் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலவன்பொக்கணை, புதுமாத்தளன், வலைஞர்மடம் உள்ளிட்ட இடங்களில் தற்போது 460 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன. இந்தப் பகுதி மக்களுக்கானமருத்துவச்சேவையை வழங்கும் புதுமாத்தளன் மருத்துவமனை இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

**இங்குள்ள மக்கள் தமக்கான மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் சுமார் முப்பது கிலோ மீற்றர் தூரத்துக்கு சென்றே சிகிச்சை பெறவேண்டியுள்ளது**

அத்துடன் இந்தப் பகுதிக்கான பிரதான வீதி முதல் ஏனைய எந்த வீதிகளும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

இதனால் இங்குள்ள மக்கள் தமக்கான மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் சுமார் முப்பது கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

புதுக்குடியிருப்புகைவேலி மருத்துமனை இயங்குகின்ற போதும், சரியான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான வசதிகள் அங்கு இல்லை.

இவ்வாறு எதுவித வசதி வாய்ப்புக்களும் இன்றி மீள் குடியேறி வசித்துவரும் சுமார் 460 வரையான குடும்பங்களும் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. (ஐ-5)




மல்லாவி ஆதார வைத்தியசாலையில் இரண்டு புதிய கட்டடங்களான மகப்பேற்று, சிறுவர் நோயாளர் விடுதிகள் கடந்த 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அயர்லாந்து கதல் நியன் குடும்ப நிதியத்தின் மூலம் யூனிசெப் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. கதல் நியன் குடும்பத்தின் பணியாளே நியன் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டித் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம். (த-415)

## புதிய பாலங்கள், மதகுகளும் கூட சேதம்

அக்கராயன், நவ.23

துணுக்காய் அக்கராயன் வீதியில் மழை காலத்துக்கு முன்பு புதிதாக அமைக்கப்பட்ட பாலங்கள், மதகுகள் மழையினால் பெரும் சேதமடைந்து காணப்படுகின்றன.

அம்பலப்பெருமாள் குளத்துக்கு அருகில் 6 மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட மதகு வீதியின் நடுவே பலத்த குழி ஏற்பட்டுள்ளது.

உரியதிட்டங்கள் இன்றியும், பாலத்தின் தன்மை, நீர் பாயும் அளவு அமையும் இடம் போன்ற எந்த காரணிகளும் கருத்தில் கொள்ளப்படாது இந்த மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கொங்கிறீட் இடப்படாது ஒப்பந்தகாரர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் இவை சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பல ஆண்டுகள் இருக்க வேண்டிய மதகுகள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-18)

## தடையின்றி மின்சாரம் மன்னாருக்கு எப்போது?

மன்னார் மாவட்டத்தில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் அலுவலக செயற்பாடுகளும் மாணவர்களது கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இரவு பகலாக மின்சாரம் குறுகிய இடைவெளியில் தடைப்படுவதால் மின்சார உபகரணங்களும் பழுதடைகின்றன என்று பாவனையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு தற்போது மூன்றாம் தவணைப் பரீட்சை ஆரம்பித்துள்ள நிலையில் பரீட்சைக்குத் தம்மை தயார்படுத்தும் பிள்ளைகள் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டால் கற்கமுடியாது சிரமப் படுகின்றனர் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் இரவு நேரங்களில் மின் தடங்கல் ஏற்படுவதால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக சீரற்ற மின்சாரமே கிடைப்பதாகவும் இதற்கான ஒரு நிரந்தர தீர்வைப் பெற்று மன்னார் மாவட்ட மக்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குமாறு மின் பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மின்சார சபையின் மன்னார் மாவட்ட பணிமனை அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு கேட்ட போது-

மன்னார்-உயிலங்குளம் பிரதான வீதியில் உள்ள மின் கம்பங்களில் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகிறது. இதனைச் சீர் செய்ய மின்சார சபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.- என்றார். (ஐ-12)

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற

## மன்னார் மாணவர் 124 பேருக்கு விருது வழங்கி கௌரவம்

மன்னார், நவ. 23

இந்த வருடம் இடம் பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஆளுநர் விருது வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலய நவோதய பாடசாலையில் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டில் சித்தியடைந்த 124 மாணவர்கள், வடமாகான ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டன.

அவ்வேளை ஒவ்வெரு மாணவர்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டது. மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



இம்முறை இடம் பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் கல்வி வலயத்தில் 114 மாணவர்களும், மடு கல்வி வலயத்தில் 10 மாணவர்களும் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலங்கேணி உவர் தடுப்பணையை புனரமைப்பதற்கு துரித நடவடிக்கை

அக்கராயன், நவ.23

பூநகரி ஆலங்கேணியில் உடைவுகள் ஏற்பட்ட நிலையில் காணப்படும் உவர் தடுப்பணையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்று பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஆலங்கேணியில் அண்மையில் நடைபெற்ற உவர்த் தடுப்பணை தொடர்பான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த மழையின்போது உவர் தடுப்பணை உடைப்பெடுத்ததால் நன்னீர் கடலில் சென்று கலந்துள்ளது. இதனால் நீர் போதாமையினாயில் பெருமளவு நெற்பயிர்கள் அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. நெற்பயிர்கள் அழிவடைவதால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த நிலையில் இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்று பூநகரிப் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் உவர்த் தடுப்பணையை உடனடியாகப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (க-18)



துரிதமாக இடம்பெற்று வரும் துணுக்காய் வெள்ளவால் பாலத்தின் புனரமைப்புப் பணிகள். (க-18)

# மல்லாவி மருத்துவமனையை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை

## முல்லை. சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

துணுக்காய், நவ.23

**மல்லாவிப் பிரதேச மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவகின்றன என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.**

மல்லாவி பிரதேச மருத்துவ மனையில் யுனிசெப் நிறுவனத்தால் அமைக்கப்பட்டமகப்பேற்று மற்றும் குழந்தைகள் விடுதிகளின் திறப்பு விழாவின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மல்லாவி பிரதேச மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவு எதிர்வரும் ஜனவரி மாதம் அமைக்கப்படவுள்ளது. மேலும் இந்த மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்வதற்கான முயற்சிகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சொந்த இடமாக கொண்ட 100க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பிற இடங்களில் பணிபுரிகின்றனர்.

இவர்கள் தாம் பிறந்து வளர்ந்து கல்வி கற்ற இந்த மாவட்டத்துக்குச் சேவை செய்ய முன்வர வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-18-415)



# ஜப்பானிய 'ஜென்' நிறுவனத்தால் மந்துவில் கிராமத்தில் 20 கிணறுகள்

முல்லைத்தீவு, நவ.23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மந்துவில் கிராமத்தில் ஜப்பானின் ஜென் நிறுவனத்தினால் இருபது கிணறுகளை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இறுதியாக புதுக்குடியிருப்பு மந்துவில் கிராம அலுவலர் பிரிவில் சுமார் 547 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. தற்போது முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் ஜென் நிறுவனத்தினால் 20 கிணறுகள் அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கு மீளக்குடியமர்ந்துள்ள 547 குடும்பங்களில் இருபது வரையான குடும்பங்களுக்கே நிரந்தர வீடுகள் உள்ள போதும், அவையும் சேதமடைந்து காணப்படுகின்றன. மேலும் இந்தக் கிராமத்தில் தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த கிராமத்தில் மீள்குடியமர்ந்த 85 வீதமான குடும்பங்கள் அதிக தேவைகளைக் கொண்ட குடும்பங்களாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# மழை நீரால் சேதம்

முல்லைத்தீவு பிரதான வீதியிலிருந்து வற்றாப்பளை செல்லும் வீதியிலுள்ள பள்ளவெளிப் பாலம் சிறிதாக அமைக்கப்பட்டமையால் மழை நீர் வீதிக்கு மேலாகப் பாய்ந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஏற்கனவே குன்றும் குழியுமாக இருந்த இந்த வீதி, தற்போது மேலும் மோசமான நிலையை எட்டியுள்ளது. மேலும் மழைவெள்ளம் ஏற்படும் போது இங்கு வாழும் 300இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மூன்று கிலோமீற்றர் தூரம் சுற்றி வர வேண்டிய நிலை ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. (க-500)

# கசிப்பு வைத்திருந்த மூவருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டம்

## கிளிநொச்சி நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி, நவ.23

கிளிநொச்சியில் கசிப்பைத் தம்முடன் வைத்திருந்த மூவருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி 12 ஆம் கட்டை, குமாரசாமிபுரத்தில் ஆயிரத்து 225 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் , தருமபுரம் பகுதியில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த வயோதிபர் ஒருவருக்கு இதே தொகையும் கிளிநொச்சி நீதிமன்றத்தினால் தண்டமாக விதிக்கப்பட்டது.

தண்டத்தைச் செலுத்தத் தவறினால் இரண்டு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தர விட்டது.

மேலும் கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் 6 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

**தண்டத்தைச் செலுத்தத் தவறினால் இரண்டு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தர விட்டது.**

இவர்கள் மூவரையும் கைது செய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிவான் எம்.வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தியபோது இந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. (க-6)

# கிளிநொச்சியில் கடைகளை வழங்க நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி, நவ.23

கிளிநொச்சி நகர எல்லைக்குட்பட்ட டிப்போ சந்தியில் அமைந்துள்ள சேவைச் சந்தையில் கடைகள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறுமென கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை நாளை முதல் அலுவலக நேரத்தில் கரைச்சிப் பிரதேச சபையின் கரைச்சி உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

தெரிவுப்பட்டியலுக்கு உட்படாதவர்களுக்கு மட்டுமே இந்த நேர்முகத் தேர்வு இடம்பெறுமென்றும், இதில் கலந்து கொள்வோர் விண்ணப்பப்படிவம் மற்றும் கிளிநொச்சி நகர சந்தையில் கடை வைத்திருந்தமைக்கான ஆவணம் என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (க-6)

# கலாசாரப் பண்புகளைப் பேணுவது நம் அனைவரதும் தலையாய கடமை

## கிளிநொச்சி அரச அதிபர் வலியுறுத்து

அக்கராயன், நவ.23

கலாசாரப் பண்புகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது இந்த மண்ணில் வாழ்கின்ற மக்களின் தலையாய கடமையாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன்.

கண்டாவளை மகா வித்தியாலயத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ஏனைய கலாசார விழாக்களைக் காட்டிலும், இந்த விழாவில் அதிகளவில் மக்கள் கலந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சி தருகின்றது.

மீளக்குடியமர்வு இடம்பெற்றதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கலாசார பண்புகளைப் பேண வேண்டிய பொறுப்பு இங்கு வாழ்கின்ற மக்களிடத்திலேயே உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.வைரமுத்து, இளைப்பாறிய கிராம அலுவலர் க.சின்னத்தம்பி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலாசார விழாவை முன்னிட்டு 'வளை ஓசை' நூல் வெளியீடும் இடம்பெற்றது. இதனை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வெளியிட்டு வைத்தார்.

மேலும் இந்தப் பிரதேசத்தில் கூத்துக் கலை வளர்ச்சிக்காகப் பாடுபட்ட கலைஞர்களாகிய நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த மு.செல்லத்துரை, தட்டுவன் கொட்டியைச் சேர்ந்த ஆ.பாலசுப்பிரமணியம், ஆகியோரும் எழுத்தாக்கத்துக்காக கரைவெட்டித் திடலைச் சேர்ந்த ம.வேலாயுதபிள்ளையும் ''கலை ஒளி'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வீதியில் விபத்து தாயும் குழந்தையும் காயம்



யாழ்ப்பாணம்,நவ.23

வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு அதன் சாரதி முன் ஆசனக் கதவைத் திறந்தபோது கதவு அதேபக்கத்தில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இதனால் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்த தாயும் இரண்டு மாதக் குழந்தையும் விழுந்து படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவமானது நேற்று வியாழக் கிழமை மாலை 3 மணியளவில் யாழ். நாவலர் வீதியில் இடம்பெற்றது.

வானின் சாரதி வீதியோரத்தில் வானை நிறுத்திவிட்டு முன்பக்கக் கதவைத் திறந்துள்ளார். இந்த நேரத்தில் அதே பக்கத்தில் இலுப்பையடிச் சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் வான் கதவு மோதுண்டது. இதனால் மோட்டார் சைக்கிளில் தனது கணவனுடன் பயணித்த தாயும் அவருடைய இருமாதக் குழந்தையும் விழுந்து படுகாயமடைந்துள்ளனர்.

தாயாரான ஆர்.அருள்வதனி, அவரது குழந்தையான விசானுஜன் ஆகியோரே காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்று சுமார் 45 நிமிடங்கள் கழித்து அந்த இடத்துக்கு விசாரணைகளை மேற்கொள்ளப் பொலிஸார் வந்தமையால் கோபமடைந்த அந்தப்பகுதி மக்கள் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் திறப்பைப் பறித்தெடுத்ததுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

விபத்து தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டு சுமார் 45 நிமிடங்கள் கழித்தே விசாரணைகளை மேற்கொள்ளச் சம்பவ இடத்துக்கு இரு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்தனர்.

இதனால் கோபமடைந்த அந்தப்பகுதி மக்கள் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவர்கள் வந்த மோட்டார் சைக்கிளின் திறப்பையும் பறித்தெடுத்துள்ளனர்.

இதனால் பொலிஸார் தமது மோட்டார் சைக்கிளை அதே இடத்திலேயே விட்டு விட்டுப் பொலிஸ் நிலையம் சென்றனர். பின்னர் அவர்களால் அந்த மோட்டார் சைக்கிள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

(த-14)

## பகவான் சாயி ஜனன தினத்தில் பயன்தரு மரங்களின் நடுகை

யாழ்ப்பாணம், நவ. 23.

மகாசமாதியடைந்த சத்ய சாயி பாபாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று 2,000 பயன்தரு மரங்களை நட ஏற்பாடாகியுள்ளது.

மானிப்பாய் சத்ய சாயி நிலையத்தில் வைத்து சாயி ஆன்மீக ஆலோசகரும் மானியூர் பசுமைப் புரட்சியாளர் வைத்திலிங்கம் செகரராஜசிங்கம் இந்த பயன்தரு மரங்களை வழங்கவுள்ளார்.

இவர் கடந்த முப்பது வருடங்களாக பயன்தரு மரங்களை தனது சொந்தச் செலவில் உருவாக்கி பாபாவின் பிறந்த தினமன்று பொது மக்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்ளுக்கு அன்றைய தினம் வழங்கி வருகிறார்.

கடந்த முப்பது ஆண்டுகால வரலாறில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயன்தரு மரங்களான தேசி, மா, பலா, கொய்யா, மகோக்கனி, சமண்டை, தென்னை போன்ற மரங்களை உருவாக்கி வழங்கி வந்துள்ளார்.

இன்றையதினம் இவரதும் மற்றும் சாயி தொண்டர்களாலும் உருவாக்கப்பட்ட பயன்தரு மரங்களை வழங்கி உதவவுள்ளதாகவும் மானியூர் சத்ய சாயி நிலைய தலைவர் அறிவித்துள்ளார்.

(த-50)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


**வீடு வாடகைக்கு**

யாழ். நகரில் சிறிய வீடு ஒன்று வாடகைக்குண்டு
தொடர்புகளுக்கு-0789406385

**சிறுநீரகம் தேவை**

ஆண் ஒருவருக்கு ஓ பொசிட்டிவ் (O Positive) சிறுநீரகம் (கிட்னி) அவசரமாகத் தேவை.
தொடர்பு: பவானி தயாபரன்
(25719)(3.14) தொலைபேசி : 0775599807

**ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 20 ★ 08 ★ 1963 — விண்ணில் 23 ★ 11 ★ 2005



அமரர்
*கதிரமலை செலஸ்ரீனா*

ஏழு ஆண்டுகளல்ல எழுபது ஆண்டுகள்
ஆனாலும் ஆறிடுமோ எம் துயரம்
பாசமான உன் குடும்பத்தாரை தவிக்க விட்டு
பாதியினில் உன் பயணம் முடிந்ததுவோ
நீ எங்களோடு வாழ்ந்த நாள்கள்
மீண்டும் ஒரு முறை வந்திடாதோ என
ஏங்கி நிற்கும் எம் உணர்வை அறிவாயோ நீயும்
ஆண்டவன் அருளினில் வாடா மலராய் நிலைத்திருக்க
திருக்குடும்ப மாதாவழியாக வேண்டுகின்றோம்.

மல்வம், உடுவில். (25724)(3.14) கணவன், பிள்ளைகள்.

## கோண்டாவில் ஐயப்பனின் மஹோற்சவ பெருவிழா

யாழ்ப்பாணம், நவ. 23.

யாழ். சபரீச ஐயப்பன் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா நாளை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழத்துச் சபரிமலையெனப் போற்றப்படும் ஐயப்பனின் ஸ்ரீ நந்தன வருட மகாஜோதி மண்டல விரத மஹோற்சவப் பெருவிழாவில் விசேட பூசைகள், வில்வ அர்ச்சனைகள், திருவிளக்குப் பூசைகள் என்பன சிறப்பாக நடைபெறவுள்ளன.

எனவே ஐயப்பன் அடியார்களை இதில் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (16)

## கொலைச் சந்தேகநபர் கைது

கொழும்பு,நவ.23

கொழும்பு மெரினா கடற்கரை வீதியில் இடம்பெற்ற கொலை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிரபல கப்பல் நிறுவன முகாமையாளர் ஒருவர் அண்மையில் கடற்கரை வீதியில் கழுத்து வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்ட நிலையில் காரின் சாரதி ஆசனத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாமன் கடைப் பகுதியைச் சேர்ந்த அப்துல் காதர் (வயது 44) என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(16)

## மரண அறிவித்தல்



திருமதி *சின்னத்தம்பி இந்திராணி*

மண்டான் கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இந்திராணி நேற்று முன்தினம் (21.11.2012) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் -சிவப்பி தம்பதியரின் மூத்தமகளும், காலஞ் சென்றவர்களான நாகர் -பார்பதி தம்பதியரின் மருமகளும், சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், உதயகுமார், உதயராணி, சாந்தன், ராஜா, காந்தராஜா (லண்டன்), கோபிகா (ஜேர்மனி) ஆகியோரின் தாயும், சந்திரமோகன், குலவதனி (லண்டன்), ஆனந்தஈஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (24.11.2012) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மண்டான் பூவரசம்திட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டி. (25509)(9.14) தகவல்: குடும்பத்தினர்.

## துணைநீயே இறைவா!



தோற்றம் 03 ★ 11 ★ 1941 — தோற்றம் 18 ★ 08 ★ 1983

மறைவு:-23★11★1995

அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
ஸ்தாபகர்:-
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்.

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
மாணவன்:-
யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி.

பதியைப் பாசமுடை புத்திரனைப் பறிகொடுத்து
மதியில்லா வானாய் பதினேழு ஆண்டுகள்
விதியதன் வழியென வீழாது வாழ்ந்து
துதிக்கின்றோம் இறைவா துணை நீயே நமக்கென்று

"துர்க்கா இல்லம்"
No.29, வட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியதால் சபையை விட்டு வெளியேறிய தலைவர்

## கரவெட்டி பிரதேச சபைக் கூட்டத்தில் அமளிதுமளி

வடமராட்சி, நவ.22

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தலைவர் மீது தெரு மின் விளக்கு தொடர்பாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்ததில் சபைத் தலைவர் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

சபைத்தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது. கூட்டத்தின் இடைநடுவில் '' இதுவரை 700 மின் குமிழ்கள் தெரு விளக்காகப் பொருத்தப்பட்டுள்ளன'' எனச் சபையில் தெரிவிக்கப்பட்டபோது சபையில் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் '' 700 மின் குமிழ்களும் எங்கே பொருத்தப்பட்டன? எனச் சர்ச்சையைக் கிளப்பினார்கள்.

**ஆளும் கட்சி மற்றொரு உறுப்பினரான ந.கந்தசாமி, தலைவரின் அறைக்குச் சென்று அவரைச் சாந்தப்படுத்தி சபைக்கு அழைத்து வந்தார்.**

இந்தச் சர்ச்சைக்குத் தலைவர் விளக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கையில் குற்றஞ் சுமத்திய உறுப்பினர்கள், தலைவரின் பதில் கூற்றை ஏற்காமல் தொடர்ந்து பலத்த சத்தத்துடன் சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டே இருந்தனர்.

இந்த நிலையில் தலைவர் கூட்டத்தை விட்டு வெளியேறித் தனது அலுவலக அறைக்குள் போய் அமர்ந்து கொண்டார்.

இவ்வேளை உப தலைவர் இ.சாந்தசொரூபன் எழுந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எமது நோக்கத்தை மறந்து வேறுபாதைக்கு செல்கிறோம்.தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானவை எனக் கூறிச் சபையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

இதேநேரம், ஆளும்கட்சி உறுப்பினர்களான மு.ஜெகநாதன், ஆ.மதியரசன் , போ.கணேஸ் ஆகியோர் உட்பட மற்றும் சில உறுப்பினர்களும் தலைவரிடம் ஊழல் இல்லை எனப் பலமாக வாதிட்டதுடன் உறுப்பினர் மு.ஜெகநாதன் ஊழல் குற்றச்சாட்டை வாபஸ் பெற வேண்டும் என வாதிட்டார்.

உறுப்பினர் மு.மதியரசன் பேசுகையில் தலைவரிடம் ஊழல் இல்லை. அவர் ஊழல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் மிகுந்த நேர்மையாகத் தான் செயல்படுகின்றார். யாரிடமும் 5 சதம் வாங்கமாட்டார். வாங்க வேண்டிய நிலையிலும் அவர் இல்லை என்று ஊழல் குற்றச்சாட்டுக்கு முற்றுப் புள்ளி வைத்துப் பழையதை எல்லாம் மறப்போம். எதிர்காலத்தைப் பற்றி புதிதாகச் சிந்திப்போம் எனக் கூறியதுடன் சபை அமைதிக்குத் திரும்பியது.

இதற்கிடையில் ஆளும் கட்சி மற்றொரு உறுப்பினரான ந.கந்தசாமி தலைவரின் அறைக்குச் சென்று சாந்தப்படுத்தி அவரை சபைக்கு அழைத்து வந்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டம் சுமுகமாக நடைபெற்று வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (த-8)

## பூசை நடக்கும் இடத்தில் நகை அணிந்திருக்கக்கூடாது

### செம்பில் போடுங்கள் என்ற சாமியார் நகைகளுடன் மாயம்

யாழ்ப்பாணம், நவ. 23

நகைகள் எவையும் பூசை நடக்கும் இடத்தில் அணிந்திருக்கக்கூடாது. நகைகளைக் கழற்றி செம்பு ஒன்றில் போட்டு மூடி சுவாமி அறைத்தட்டில் வையுங்கள். பத்து நாள்களின் பின் தான் செம்பைத் திறந்து பார்க்க வேண்டும். இவ்வாறு கூறிய சாமியார் வேடமிட்ட ஆசாமி ஆறரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் தலைமறைவானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவந்துள்ளதாவது:

சுன்னாகத்தில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சாமியார் மக்களது கஷ்டங்களை நீக்கப்பிராயச்சித்தம் செய்து வருகிறார் என்ற தகவலை அறிந்த குடும்பம் ஒன்று குறித்த ஆசாமியிடம் சென்றுள்ளது.

சாமியாரும் உங்களுக்கு தோஷம் உள்ளது. அதனை நீக்க வீட்டில் சாந்தி செய்ய வேண்டும். அதற்கு 20 ஆயிரம் ரூபா பணம் தரவேண்டும் என்று கூறியுள்ளார். கஷ்டங்கள் நீங்கினால் போதும் என்று சாமியாரை வீட்டுக்கு அழைத்துச் சாந்தி செய்துள்ளனர்.

இதனையடுத்து நகைகளைச் செம்பினுள் வைத்து மூடிவிட்டு வீட்டைச்சுற்றி வருமாறு அனைவரையும் அனுப்பியுள்ளார்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய ஆசாமி செம்பில் இருந்த நகைகளைத் திருடி விட்டு அதற்குள் கற்களைப் போட்டு மூடி வைத்துள்ளார். வீட்டைச்சுற்றி வந்தவர்களிடம் அந்த செம்பைக்கொடுத்து சுவாமி அறையில் வைக்குமாறும் பத்து நாள்கள் கழித்து வருவதாகவும் கூறிச்சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நாள்கள் கழிந்ததும் சாமியார் வராததை அவதானித்த குறித்த குடும்பத்தினர் சுவாமி அறையில் செம்பைத் திறந்து பார்த்தபோது அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

சாமியார் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று விசாரித்தபோது இது குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது என்று விடுதி உரிமையாளர் கைவிரித்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## பாஷையூர் பகுதிக்கு ஓட்டோவில் வரும் ஆட்டுத் திருடர்கள்

பாஷையூர் பகுதியில் வளர்ப்பு ஆடுகள் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வெளியிடங்களில் இருந்து ஒட்டோக்களில் வருவோரே நடு இரவில் ஆடுகளைப் பிடித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள வளர்ப்பு ஆடுகள் வீதிகளிலும், பொது இடங்களிலும் இரவு வேளைகளில் படுத்திருப்பது வழமையாகும். இதனைப் பயன்படுத்தியே திடீரென வந்து ஆடுகளைப் பிடித்து செல்கின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர். கடந்த வாரம் இவ்வாறு 3 ஆடுகள் காணாமற் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட நாள்களாக நடைபெற்று வரும் இவ்வாறான திருட்டு நடவடிக்கைகளால் முன்பு கூட்டம் கூட்டமாக திரியும் ஆடுகளின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைவடைந்துள்ளன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-135)



வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 'திவிநெகும' திட்டத்தின் கீழ் 30 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 பயனாளிகளுக்குத் தென்னம்பிள்ளைகள் பகிர்ந்து வழங்கப்பட்டன. வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தென்னம்பிள்ளைகளைப் பயனாளிகளுக்கு வழங்குகிறார். அருகில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் உள்ளார். (ம-50)

## பிரதேச மக்களின் நலன் கருதி கொழும்புத்துறையில் தண்ணீர்த்தாங்கி

கொழும்புத்துறை, நவ.23

கொழும்புத்துறை வதிரி பீட விநாயகர் ஆலயப் பகுதியில் குடிதண்ணீர்த் தாங்கி ஒன்றை அமைத்து மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள பழைமை வாய்ந்த நன்னீர் கிணற்றின் அருகே தண்ணீர்த் தாங் கியை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் பிறவுண்ஸ் நிறுவனம் சுமார் 5 லட்சம் ரூபா செலவிலான தண்ணீர்த் தாங்கியை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா அடிக்கல்லை நட்டு வைத்தார். ஆலய பரிபாலன சபையினர், இந்து மகாவித்தியாலய ஆசிரியர், மாணவர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், பொது மக்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நன்னீர்க் கிணற்றில் இருந்து பல இடங்களிலுள்ள மக்கள் குடிதண்ணீர் எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-135)

## தீவகம், வடமராட்சிப் பகுதிகளில் பரீட்சார்த்தமாக உ.கிழக்கு செய்கை

அச்சவேலி, நவ.23

இந்த வருடம் தீவகம், வடமராட்சி கிழக்குப்பகுதியில் பரீட்சார்த்தமாக உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் உருளைக்கிழங்குச் செய்கை நடைபெறும் பகுதிகளுக்கு மேலதிகமாக தீவுப் பகுதியிலும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப்பகுதியிலும் பரீட்சார்த்த அடிப்படையில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பரீட்சார்த்த உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளைத் தெரிவு செய்து, அவர்களுக்குத் தலா 25 கிலோ விதை உருளைக் கிழங்கு இலவசமாக வழங்கப் படவுள்ளது. அத்துடன் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டலையும் விவசாயத்திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

தீவகம், வடமராட்சிப்பகுதியில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் கொண்டிருப்பதோடு பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான மண்வளமும் பொருத்தமாக இருப்பதால் உருளைக்கிழங்குப் பயிர் செய்கையை அங்கு அறிமுகம் செய்யும் வகையில் பரீட்சார்த்த பயிர்ச்செய்கைக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி இ. செளந்தரராஜன் தெரிவித்தார். (ம-11)

### குடாநாட்டில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வரும்

## 'ஸீரா' ஊழியர்களின் போராட்டம் பொலிஸார் தலையீட்டால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 23

தமக்கான இரண்டு மாதச் சம்பளத்தை வழங்குமாறு கோரி வீதி புனரமைப்பு நிறுவனமான 'ஸீரா' ஊழியர்கள் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் போராட்டம் நடத்தினர். எனினும் கோப்பாய் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

யாழ். குடாநாட்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளில் 'ஸீரா' நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இதன் அலுவலகம் திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ளது.

இந்த அலுவலகத்துக்கு முன்பாகவே நேற்று முன் தினம் காலையும், கடந்த செவ்வாய்க்கிழமை மாலையும் இருபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர்.

தமக்கான சம்பளம் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஒக்ரோபர் மாதச் சம்பளமும், நவம்பர் மாதச் சம்பளமும் இதுவரை வழங்கப்படவில்லை.

சம்பளத்தை வழங்குமாறு கோரியே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை 'ஸீரா' அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது, அதன் நிர்வாகம் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தது. இதனையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை தமது அலுவலகத்துக்கு உள்ளே அழைத்துச் சென்று 'ஸீரா' நிறுவன அதிகாரிகள் அவருடன் கலந்துரையாடினர்.

இதன்பின்னர் வெளியே வந்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உங்களுக்கு இந்த மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் ஒக்ரோபர் மாதச் சம்பளம் வழங்கப்படும். அவ்வாறு வழங்காவிட்டால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று தெரிவித்துவிட்டுச் சென்றுவிட்டார். இதனையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட தம்மை வேலைநீக்கம் செய்யப் போவதாக அதிகாரிகள் தெரிவித்ததாக, போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் திருநெல்வேலி 'ஸீரா' நிறுவனத்துக்கு நேரடியாகச் சென்றபோது, தாம் தகவல் வழங்க முடியாது நாவலர் வீதியில் உள்ள அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவித்தனர்.

இதன்பின்னர் நாவலர் வீதியில் உள்ள அலுவலக அதிகாரியின் கைத்தொலைபேசிக்குப் பலமுறை அழைப்பு எடுத்த போதும் அவர் பதிலளிக்கவில்லை. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணு உலைக் கழிவுகளை கோலார் தங்கவயலில் சேமிக்க முடிவு

## உச்ச நீதிமன்றில் மத்திய அரசு தெரிவிப்பு

கூடங்குளம் அணு உலையிலிருந்து கிடைக்கும் அணுக் கழிவுகள், கோலார் தங்க வயலில் சேமிக்கப் படும் என்று உச்ச நீதிமன்றத் தில் மத்திய அரசு தெரி வித்தது.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடை பெற்று வரும் நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணையின் போது, மத்திய அரசின் சார்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் ரோஹிங்டன் நாரிமன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கோலார் தங்கவயலில் உள்ள தங்கச் சுரங்கங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டுவிட்ட நிலையில், அந்தச் சுரங்கங்கள் தற் போது பயன்பாட்டில் இல்லை என்றும், அணுக் கழிவுகளை சேமித்து வைக்க அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள அரசு முடிவு செய்திருப்பதாகவும் ரோஹிங்டன் நாரிமன் தெரிவித்தார்.

அணு உலையில் இருந்து வெளியாகும் கழிவுகளில் 97 வீதத்தை மறு சுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிரசாந்த் பூஷண், அணுக்கழிவுகளை எப்படி சுத்திகரிக்கப் போகிறார்கள், எப்படிச் சேமிக்கப் போகின்றனர் என்பது தொடர்பில் அரசிடம் தெளிவான திட்டம் இல்லை என்று குற்றம் சாட்டினார்.

42 ஆயிரம் கோடி லீற்றர் தண்ணீரை கடலில் இருந்து எடுத்து, பயன்படுத்திவிட்டு, அதை மீண்டும் கடலில் விடுவதாக அரசுத் தரப்புக் கூறுகிறது. அவ்வாறு விடப்பட்டால் கடல் வளங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் பிரசாந்த் பூஷண் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பாதுகாப்புத் தொடர்பாக நிபுணர் குழு பரிந்துரைத்த 17 அம்சங்கள் தொடர்பில், அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன, அடுத்து எடுக்கப்போகும் நடவடிக்கைகள் என்ன என்பதை மனுவாகத் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டார்கள்.

## நானும் அரசியல் பேசத்தான் வந்தேன்...



மேற்கு வங்க மாநிலம் ஹூக்ளி பொதுக்கூட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசிக்கொண்டிருந்த வேளையில் திடீரென லாங்கூர் குரங்கு ஒன்று மேடைக்கு வந்து அமர்ந்துவிட்டது. இதனால் மம்தாவின் பேச்சு சிறிது நேரம் தடைப்பட்டது. பின்னர் பேச்சு தொடர்ந்தது.

### சில்லறை வணிகத்தில் வெளிநாட்டு முதலீடா?

# மீண்டும் அடிமையாகும் இந்தியா ஆங்கிலேயருக்கு

## தமிழக பா. ஜ. க மாநிலத் தலைவர் ஆர்ப்பாட்டத்தில் கருத்து

சென்னை, நவ.23

சில்லறை வணிகத்தில் வெளிநாட்டு முதலீட்டை அனுமதித்தால் இந்தியா மீண்டும் ஆங்கிலேயருக்கு அடிமையாகும் என்று சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது தமிழக பாரதீய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்தும், சில்லறை வணி கத்தில் வெளிநாட்டு முத லீட்டுக்கு அனுமதியளித்த மத்திய காங்கிரஸ் அரசை கண்டித்தும், தமிழக பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் மெமோரியல் மண்டபம் அருகே நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநிலத் தலைவர் ராதாகிருஷ்ணன், துணைத்தலைவர் தமிழிசை சவுந்திரராசன், வானதி சீனிவாசன், பிரகாஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது இராதாகிருஷ்ணன் தெரிவித்ததாவது:-



இந்திய வியாபாரிகளை நசுக்கி, வெளிநாட்டு வியாபாரிகளை வளர்த்துவிடும் வகையில், மத்திய காங்கிரஸ் அரசு சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதித்துள்ளது. இது மிகவும் கண்டிக்கத் தக்கது. பல நூறு ஆண்டுகளாக ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியா, பல கட்ட போராட்டத்தின் பின்னர் சுதந்திரம் பெற்றது. தற்போது பெற்ற சுதந்திரத்தை காங்கிரஸ் அரசு, மீண்டும் ஆங்கிலே யருக்கு தாரை வார்க்கப் பார்க்கிறது.

அதை பாரதீய ஜனதா ஒரு போதும் அனுமதிக்காது. இவ்விடயத்தில் வெளிநாட்டவரை ஒழிக்க, வியாபாரிகள் ஒட்டு மொத்தமாக பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்து தாமரை கொடியை ஏந்திப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (வ)

## தாயின் கண்முன்னே குழந்தைகளை சுட்டுக் கொன்ற கொடிய தந்தை

உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் சிப்பாய் தனது மனைவி முன்னிலையிலேயே தன் 3 குழந்தைகளைச் சரமாரியாகச் சுட்டுக்கொலை செய்துள்ளார்.

மதுரா மாவட்டம் நாகலாதீபா கிராமத்தில் இந்த கொடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிப்பாய் மகேஷ் சந்திரா துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் குழந்தைகள் காஜல், வினீதா, சாந்தனி ஆகியோர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தனர்.

குழந்தைகளைக் காப்பாற்றப் போராடிய அவரது மனைவி சோனியாவையும் தோட்டாக்கள் துளைத்ததில் அவரும் படுகாயமடைந்தார். மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அவரது நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். குழந்தைகளைக் கொலை செய்த மகேஷ் சந்திரா, இதுபற்றி பொலிஸுக்கும் தகவல் தெரிவித்துள்ளார். உடனே விரைந்து வந்த பொலிஸார், அவரைக் கைது செய்தனர். மேலும் கொலைக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மகேஷின் 3 மாதக் குழந்தையும், அவரது தாயாரும் சம்பவம் நடந்தபோது அதே வீட்டில்தான் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் காயமின்றி உயிர் தப்பினர்.

## அப்சல் குருவின் கருணை மனு உள்துறை அமைச்சக பரிசீலனைக்கு

### அனுப்பி வைத்தார் ஜனாதிபதி

டில்லி, நவ.23

அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டதையடுத்து உடனடியாக அப்சல் குரு உட்பட 7 பேரின் கருணை மனுக்கள் குறித்த பரிசீலனைக்காக அவற்றை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அனுப்பியுள்ளார்.



இதுகுறித்து அதிகார மட்டத்தில் கூறுகையில், தன்னிடம் நிலுவையில் உள்ள கருணை மனுக்களை புதிய உள்துறை அமைச்சர் பதவியேற்றவுடன் அவரது பரிசீலனைக்கு அனுப்பி வைப்பது ஜனாதிபதியின் கடமையாகும். அதன் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி புதிய உள்துறை அமைச்சராகப் பதவியேற்ற சுஷில் குமார் ஷிண்டேவுக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார். அந்த ஏழு மனுக்களும் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவற்றுடன் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் கருத்துக்களும், உள்துறை அமைச்சக பரிந்துரைகளும் இணைக்கப்பட்டிருந்தன. (வ)

## ராஜீவ் கொலைக்குற்றவாளிகளின் தூக்கை நிறைவேற்ற வேண்டும்

### இளைஞர் காங்.ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.23

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் மூவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, சத்திய மூர்த்தி பவனில் மத்திய சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸார் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஜீவன் பிரசாத் குமார் தலைமையில் ராம் குமார், ஜெயக் குமார் உட்பட 50 பேர் திரண்டு வந்து முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும், தூக்கி லிட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்ற கோஷத்தையும், இளைஞர் காங்கிர ஸார் எழுப்பினர். குறித்த ஆர்ப்பாட்டத்தால் சத்திய மூர்த்தி பவனில் பரபரப்பு ஏற்பட்டது. (வ)

## திருவாவடுதுறை ஆதீனம் காலமானார்



நாகப்பட்டினம், நவ.23

திருவாவடுதுறை ஆதீனம் சிவபிரகாச தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள் (வயது 62) நேற்று அதிகாலை 2 மணியளவில் காலமானார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடல் நலக் குறைவு காரணமாக சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்த சிவபிரகாச தேசிக பரமாச்சாரியார் நேற்று அதிகாலையில் காலமானார்.

1981 ஆம் ஆண்டு மடத்தின் இளைய ஆதீனமாக பொறுப்பேற்றார். 1983 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 30 ஆண்டுகளாக திருவா வடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் பதவியை வகித்து வந்தார்.

அவர் மடத்தின் சார்பில் சைவசித்தாந்த பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து சிங்கப்பூர், மலேசியா உட்பட பல்வேறு நாடுகளில் சைவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.

மடத்தின் கீழ் செயற்பட்டு வரும் 20 பெரிய கோயில்கள் மற்றும் 50 சிறிய கோயில்களை நிர்வகித்து வந்தார். 550 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

## தாக்கரேயின் அஸ்தி இன்று கரைப்பு

உடல் நலக்குறைவால் கடந்த 17 ஆம் திகதி காலமான சிவசேனா தலைவர் பால் தாக்கரேயின் அஸ்தி இன்று கரைக்கப்படவுள்ளது. அவரது உடல் மும்பை சிவாஜி பூங்காவில் தகனம் செய்யப்பட்டன் பின்னர் அவரது அஸ்தி, அவரது மகன் உத்தவ் தாக்கரேயிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த அஸ்தி உள்ள கலசம் பொதுமக்கள் அஞ்சலிக்காக முக்கிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. இன்று வெள்ளிக்கிழமை அவரது அஸ்தி கோதாவரி ஆற்றில் கரைக்கப்படுகிறது. இந்துக்கள் தங்கள் அஸ்திகளை கங்கை நதியில் கரைப்பதையே வழக்கமாக கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கிறிஸ்மஸ் தாத்தாவை விமர்சித்தவர் கைது

கனடாவில் கிறிஸ்மஸ் தாத்தா ஊர்வலம் நடந்து கொண்டிருந்த போது, 24 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் இது வெறும் சோடிப்பே என்று கூறியதற்காக கைது செய்யப்பட்டார். கனடாவின் டொரன்டோ என்ற இடத்தில் கிறிஸ்மஸ் தாத்தா ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது.

அப்போது 24 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் உண்மையிலேயே கிடையாது, இது வெறும் சோடிப்பே என்று தெரிவித்தார். இதனையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டார். இதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

# சிதைந்தது இராணுவ விமானம்

## விமானி உட்பட 10 பேர் சாவு



ஏமனில் இராணுவ விமானம் தரையில் மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டின் தலைநகரான சனாவில் நேற்றுமுன்தினம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அருகே உள்ள விமானத் தளத்தில் அவசரமாக தரையிறங்க முயன்றது.

அப்போது இயந்திரம் பழுதானதால் அருகே உள்ள அல்-ஹசாபா பகுதியில் தரையில் மோதி விபத்துக்குள்ளானதாக ஏமன் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்த விசாரணைகள் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பாகிஸ்தானில் தொடர் குண்டு வெடிப்புகள்

## 14 பேர் சாவு; பலர் காயம்

பாகிஸ்தானில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளால் 14 பேர் கொல்லப்பட்டனர்.

கராச்சியின் ஓரங்கி நகரத்தில் நேற்றுமுன்தினம் ஷியா முஸ்லிம்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்த போது, அந்த மண்டபத்துக்கு வெளியே தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 2 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பு நடந்த சில நிமிடங்களில் அதே இடத்தில் இன்னொரு குண்டு வெடித்தது. இதிலும் 2 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பினால் அருகில் இருந்த கட்டடங்களும், கடைகளும் சேதம் அடைந்தன.

இதேபோல் தென்மேற்கு பாகிஸ்தானில் உள்ள குவெட்டா புறநகரான ஷாபாஸின் சாலையோரம் சக்திவாய்ந்த ஒரு குண்டு வெடித்தது. பாதுகாப்பு படையினர் வந்த வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், 3 பாதுகாப்பு படை வீரர்கள், ஒரு பெண் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல்களுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்

## பெரும் இழப்புக்களுக்குப் பின்னர்

இஸ்ரேலும் ஹமாஸ் இயக்கமும் காஸாவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவிலிருந்து போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டிருக்கின்றன.

இது குறித்த அறிவிப்பு ஒன்றை, அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் முன்னிலையில், கெய்ரோவில் எகிப்திய வெளியுறவு அமைச்சர் மொஹமத் கமெல் வெளியிட்டார்.

இஸ்ரேல் பாலஸ்தீனம், காஸா நகரத்தின் மீது தொடர்ந்து 8 நாள்களாக மிக மோசமான வான் தாக்குதலை நடத்தியது. இதில் 110 பேர் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடியாக பலஸ்தீன ஹமாஸ் அமைப்பும் தங்கள் பங்குக்கு இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதலை நடத்தின.

இந்தநிலையில் இந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர எகிப்து முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எகிப்து ஜனாதிபதி மொகமது மூர்சி இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடனும் பேசியிருந்தார். அதையடுத்து அமெரிக்க வெளிவிவகாரத்துறைச் செயலர் ஹிலாரி கிளின்டன் அவசரமாக இஸ்ரேலுக்குப் பயணமாகியிருந்தார். அங்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பேச்சு நடத்தினார்.

பேச்சுக்களின்போது, "போர் நிறுத்தத்துக்கு ஒரு வாய்ப்புத் தர இஸ்ரேல் தயாராக உள்ளது" என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

அமைதியை விரும்புவதாக ஹமாஸும் தெரிவித்துள்ளது. அதையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இஸ்ரேல் - பலஸ்தீனம் மோதல்கள் தற்காலிகமாக முடிவுக்குவந்துள்ளன.



போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை அடுத்து மகிழ்ச்சியில் பலஸ்தீன மக்கள்

# பயணியாக ஏறியவர் மாறினார் 'பைலட்'டாக

நடு வானில் பறந்த பயணிகள் விமானத்தில், விமானிக்கு திடீரென உடல் நலம் குன்றியது. அதிர்ஷ்டவசமாக பயணி ஒருவரின் உதவியுடன் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

அயர்லாந்திலிருந்து ஜேர்மன் நோக்கி 262 பயணிகளுடன் விமானம் பறந்து கொண்டிருந்தது.

திடீரென விமானிக்கு உடல்நலம் குன்றி பணியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

விமான ஊழியர்கள் உடனடியாக பயணிகளிடம், "மருத்துவர்கள் யாராவது இருக்கிறீர்களா?" என்று கேட்டனர்.

ஆனால் விமானத்தில் மருத்துவர்கள் எவரும் பயணிக்கவில்லை.

அதிர்ஷ்டவசமாக, அமெரிக்காவைச் சேர்ந்த விமானி ஒருவர் இந்த விமானத்தில் பயணித்தார். அவர் அனைத்து விமானங்களையும் ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றவர். இதையடுத்து, அவரை விமானிகள் அறைக்கு அழைத்துச் சென்று, விமானத்தை செலுத்தும்படி கேட்டுக் கொண்டனர். பயணியாக வந்தவர், மற்றைய விமானியின் உதவியுடன் டப்ளின் நகரில் விமானத்தை தரையிறக்கினார். அங்கு, மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு விமானம், ஜேர்மன், பிராங்பர்ட் நகர் நோக்கி புறப்பட்டது.

# வெடித்துச் சீறுகின்றது நியூஸிலாந்து எரிமலை

## நூறு வருட அமைதிக்குப் பின்



நியூஸிலாந்தில் கடந்த 100 ஆண்டுகளாக அமைதியாக இருந்த எரிமலை வெடித்துச் சீறத் தொடங்கியுள்ளது.

நியூஸிலாந்தின் வடக்கு தீவு பகுதியில் 1978 மீற்றர் நீளமுள்ள மௌண்ட் டோங்காரிரோ என்ற எரிமலை உள்ளது. கடந்த 100 ஆண்டுகளாக அமைதியாக இருந்த இந்த எரிமலை தற்போது வெடித்துச் சீறத் தொடங்கியுள்ளது.

இதில் இருந்து வெளிவரும் துகள்கள், புகை என்பன சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு பரவும் என்றும் தேசிய பூங்கா அமைந்துள்ள இப்பகுதிக்கு குழந்தைகளோ மற்றும் சுற்றுலா பயணிகளோ செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆனால் விமான போக்குவரத் துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஆப்கானில் 2 நாளில் 14 தூக்குத் தண்டனைகள்



ஆப்கனில் கடந்த 2 நாள்களில் மட்டும் 14 பேருக்கு தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கு மனித உரிமை அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆப்கனில் தலிபான்கள் ஆட்சிக்கு பின்னர் தூக்கு தண்டனை அதிகமாக நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் கடந்த 2 நாள்களில் மட்டும் 14 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் வன்புணர்வு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகள் போன்ற குற்றங்களின் ஈடுபட்டவர்கள் என்று ஆப்கன் அரசு தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு இன்னும் 250 தூக்குத் தண்டனை கைதிகள் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## வெளிப்புறம் இதயம் பிறந்த குழந்தைக்கு !

### வெற்றிகரமாக சத்திர சிச்சை

ஹூஸ்டன், நவ.23

உடலுக்கு வெளியே இதயம் தெரியும்படி பிறந்த பெண் குழந்தைக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஆஷ்லி. அவர் 16 வாரங்கள் கர்ப்பமாக இருந்த போது மருத்துவ பரிசோதனைக்குச் சென்றார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவரது வயிற்றில் உள்ள கருவின் இதயம் வெளியே இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

கருவைக் கலைத்தல், கருவிலேயே குழந்தையின் மார்பில் துளையிட்டு இதயம் வளர வழி வகுத்தல், இல்லை என்றால் குழந்தையின் இழப்பை ஏற்கத் தயாராகுதல் என்னும் 3 வழிகளை மருத்துவர்கள் கூறினர்.

ஆனால் ஆஷ்லி எந்த வழியையும் பின்பற்றாமல் குழந்தையைப் பெற்றார். வழக்கமாக இது போன்ற குறையுள்ள குழந்தைகள் இறந்தே பிறக்கும் அல்லது பிறந்தவுடன் இறக்கும். ஆனால் ஆஷ்லியின் குழந்தை ஆட்ரினா உயிரோடு பிறந்தாள். மேலும் அவளின் இதயத்துடிப்பும் நன்றாக இருந்தது.

இதையடுத்து ஹூஸ்டனில் உள்ள டெக்சாஸ் குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்கள் ஆட்ரினாவுக்கு அறுவை சிகிச்சை செய்து இதயத்தை உடலுக்குள் வைத்தனர். அறுவை சிகிச்சைக்குப் பின்னர் ஆட்ரினா நலமாக இருக்கிறாள்.

ஆனால் அவள் உடல் நலம் தேறிய பிறகு மேலும் பல அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியுள்ளது. அவளுக்கு வாழ்நாள் முழுவதும் இதய சிகிச்சை நிபுணர் ஒருவர் ஆலோசனை தேவைப்படும் என்று கூறப்படுகிறது.

## அமெ. தூதரகத்துள் ஆயுதங்களுடன் நுழைந்த மர்ம மனிதன்

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஆயுதங்களுடன் மர்ம மனிதர் ஒருவர் நுழைந்தார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அவரைத் தடுத்த பாதுகாவலர்களை கத்தி மற்றும் கோடரியால் அவர் தாக்கினார்.

இதில் பாதுகாவலர் ஒருவரின் காலில் காயம் ஏற்பட்டது.

அதையடுத்து, சக பாதுகாவலர்கள், அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். ஆனால் அவருக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லையென்று தூதரக செய்தி தொடர்பாளர் லூரா சமிர் தெரிவித்தார்.

பின்னர் தாக்குதல் நடத்தியவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த தூதரகப் பேச்சாளர்,

"தாக்குதல் நடத்தியவர் டெல் அவிவ் நகருக்கு சற்று தெற்கே அமைந்துள்ள பட் யாம் நகரத்தில் வசிப்பவர். அவர் தாக்குதல் நடத்த முயற்சித்தமைக்கான காரணம் தெரியவில்லை" என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலியில் நிலநடுக்கம்

சிலியின் மத்திய பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.1 ஆக பதிவாகி இருந்தது. இந்த நிலநடுக்கத்தில பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கட்டடங்களில் ஏற்பட்ட அதிர்வுகளால் மக்கள் பீதி அடைந்து தெருக்களில் ஓடினார்கள்.


சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள சிலியில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழமை . 2010ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 551 பேர் உயிரிழந்தனர்.

## பெண் பேராயர்களுக்கு இங்கிலாந்தில் எதிர்ப்பு

பல நாடுகளில் கிறிஸ்தவ திருச்சபைகளில் பெண்களை பேராயர்களாக நியமிப்பது இல்லை.

இங்கிலாந்தில் இப்படிப் பெண்களை பேராயர்களாக நியமிப்பது குறித்து 10 ஆண்டுகளாக விவாதங்கள் நடந்து வந்தன. பெண்களை பேராயர்களாக அபிஷேகம் செய்வது தொடர்பான சட்டம் குறித்தும் விவாதிக்கப்பட்டு வந்தது.

இதுவாக்கெடுப்புக்குவிடப்பட்டது. ஆனால் பெண்களை பேராயர்களாக நியமிக்கும் சட்டத்துக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பதிவாகவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.



நியூயோர்க் மாநகரில் பிரமாண்டமான கிறிஸ்மஸ் தாத்தா ஒன்றை உருவாக்கும் முயற்சியில் பணியாளர்கள்..


# மனித வெடிகுண்டு தாக்குதல்

## காபூலில் 3 பேர் உடல் சிதறிச் சாவு

காபூவில்,நவ.23

ஆப்கன் தலைநகர் காபூலில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றின்மீது தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தற்கொலைத் தாக்குதலை நடத்திய வருடன் 2 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை வெடிகுண்டுகளை உடலில் கட்டிக்கொண்டு அங்கே வந்த ஒருவர், அமெரிக்க இராணுவ முகாம் வளாகச் சுவரில் மோதி வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தார். இதில் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இராணுவத்தினரில் இரண்டு பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். தாக்குதல் நடத்தியவரும் உயி ரிழந்தார்.



இந்தத் தாக்குதலுக்கு தலி பான் தீவிரவாதிகள் பொறுப் பேற்றனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பாக தீவிர விசாரணை நடப்பதாக காபூலில் உள்ள அமெரிக்க தூதரகம் கூறியது.

குண்டுவெடிப்பு நடந்த பகுதியில்தான் அமெரிக்க தூதரகம், பிரிட்டன் தூதர கம், நேட்டோபடைகளின்பாதுகாப்பு உதவி படை அலு வலகம் போன்றவை அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மணமகனுக்கு எமனானது அவரின் மதுக் கிண்ணம்

## திருமண நாளன்று துயரம்

மதுக்கிண்ணம் குத்தியதில் மணநாளன்று மணமகன் உயிரிழந்தார்.

லண்டனைச் சேர்ந்த பேபியோ ஜெபர்சன் (வயது 33) என்பவருக்கு திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததும் விருந்து நிகழ்ச்சிகள் நடந்தன. அப்போது மணமகன் பேபியோ ஜெபர்சன் விருந்தினர்களுக்கு தானே மதுக்கிண்ணங்களைக் கொடுத்து உபசரித்தார். மதுக்கிண்ணம் ஒன்றைத் தனது காற்சட்டைப் பையில் வைத்திருந்தபடியே ஓடியாடித் திரிந்தார்.

அப்போது திடீரென அவர் தடுமாறி கீழே விழுந்தார். இதில் பையில் இருந்த மதுக் கிண்ணம் உடைந்து அவரது மேல் தொடைப் பகுதியில் குத்தியது. இதில் அவருக்கு படுகாயம் ஏற்பட்டது. தொடையில் உள்ள ரத்தக் குழாய் துண்டிக்கப்பட்டு அதில் இருந்து இரத்தம் சீறிப்பாய்ந்தது.

அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் அதிக அளவு இரத்தம் வெளியேறியதால் வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

# ஏமாற்றிய காதலியின் முகத்தை தாக்கிச் சிதைத்த காதலன் கைது

தன்னை ஏமாற்றிய காரணத்திற்காக காதலியை மிகக் கொடூரமாகத் தாக்கி, முகத்தைச் சிதைத்த காதலன் கைது செய்யப்பட்டார்.

பனாப்ஷெஹ்ற(வயது 36) என்ற பெண், உமத் ரம்தானி(வயது 45) என்பவரைச் காதலித்துள்ளார்.

பின்னர் வேறொரு நபரைத் திருமணம் செய்து கொண்டு, தன் குடும்பத்தினருடன் பெர்லின் நகரில் வசித்து வந்தார்.

இதனால் கடும் கோபமடைந்த உமத், அந்தப் பெண்ணை மிகக் கொடூரமான முறையில் தாக்கி முகத்தை சிதைத்துவிட்டார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த பனாப்ஷெஹ்ற உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஈரானுக்கு தப்பிச் செல்ல முயன்ற உமத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை தையல்நாயகி



சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை தையல் நாயகி செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற நேவி செல்லத்துரையின் அன்பு மனைவியும், கதிர்காமர் இராமநாதனின் சகோதரியும் சண்முகநாதன் (சிவகணேசன் ரெக்ஸ் ஊழியர்) துரைராசா (ஜேர்மனி), யோகேஸ்வரி ஆகியோரின் தாயும், பராசக்தி , ருசிராணி, காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் மாமியும், கிருபானந்தன் (ஜேர்மனி), சசியானந்தன் (ஜேர்மனி), சோபனா, அஞ்சனா, தனுசன், வசந்தகுமாரி (ஜேர்மனி), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், மனோஜன்,வைசாலி,பிரதீன்,டிலக்சா,நக்சிகா, டிலானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2012) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்குரு வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
பிள்ளைகள்.

(25699)(45.6.7)

## ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்



சத்திரந்தை, களபூமியைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவறஞ்சினி, சுபாசினி, கருணாகரன், சிவதர்சினி, பாஸ்கரன் ஆகி யோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன், யோகராசா ஆகியோரின் பாசமிகு மாமனும், சுஜமுகவாசுகி, ஹரிகரன், ஹம்ஷா, விபூஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2012) வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பிரமணியம் வீதி,
இடைப்பிட்டி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(25691)(45.6.7)

# மலிவு விற்பனை புதுவருடம் வரை

**SURE PHONE (CHINA)**
ரூபா 2250/=
(ஒரு வருட உத்தரவாதம்)
**EXCELLENT BATTERY**
ரூபா 400/=
ஒரு வருட உத்தரவாதம்
பெண் குழந்தைகளுக்கான உடுப்பு
ரூபா100/=
பெண்களுக்கான
**T.SHIRT - ரூபா400/=**
மற்றும் பல.
**6/34/1,STANLEY ROAD, JAFFNA.**
**· 0775024162, 0771749214**
வியாபாரிகளுக்கு விசேட கழிவு

(25704)(2.6.7)

## காணி விற்பனைக்கு

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய கிழக்கு வீதியில் பிரதான வீதிக்கு அண்மையில் 2½பரப்புக் காணி பிரத்தியேக 12 அடி அகல பாதையுடன் விற்பனைக்குண்டு.
இந்தக் காணி சம்பந்தமான தொடர்புகளுக்கு:
வி.தெய்வேந்திரஐயர்
செல்வச்சந்நிதி தொண்டமானாறு.

(25656) (6.7)

## அறைகள் வாடகைக்குண்டு

யாழ்.பிறவுண் வீதியில் A/C,Non A/C வசதி கொண்ட அறைகள் நாள்,கிழமைக்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 059 6430, 077 711 0762, 021 221 9690

(25700(6-7)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

அல்வாய் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலயத்துக்கு அருகில் உள்ள 7½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 226 0246,077 645 5264

(அ.1922)

## காணி விற்பனைக்கு

வைத்திய சாலை அருகில் கோப்பாய் மத்தி கோப்பாயில் 6 ½ பரப்பு காணி வீடு வளவுடன் உடன் விற்பனைக்குண்டு. [illegible]
தொடர்பு: 077 6051 245

(25688) (6.7)

# அறிவித்தல்

ஆதன இலக்கம் 197/6, சிங்கத்தின் கலட்டி வீதி, வட்டாரம் 07 இல் அமைந்துள்ள ஆதனம் வலி.தெற்கு. பிரதேசசபையின் உப அலுவலக ஆதனப்பதிவேட்டில் E. ஆறுமுகம், S. அம்பலவாணர், V. கார்த்திகேசு என்னும் பெயர்களில் பதியப்பட்டுள்ளது. இவ்வாதனத்தை உறுதி இலக்கம் 393, 2012.10.07ஆம் திகதிய உறுதியின் படி கார்த்திகேசு நன்னித்தம்பி கைம்பெண் கமலாம்பிகை என்பவர் நன்கொடை உறுதி முடித்து தனது ஆதனமாக பெயர்மாற்றம் செய்து தரும்படி கோரியுள்ளார்.

இவரது உறுதியில் குறிப்பிடப்பட்ட தாயுறுதிக்ளில் உறுதி இலக்கம் 1344, 1989.02.03 இது காணிப்பதிவகத்தில் பதியவிடப்படாமையாலும், உறுதி இலக்கம் 4293, 2000.11.27, இவ் உறுதி வெளிப்படுத்தல் உறுதியாக இருப்பதனாலும் மேற்படி ஆதனத்தை அவரது பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இன்றிலிருந்து 10 நாள்களிற்குள் வலி.தெற்கு. பிரதேசசபையின் உடுவில் உப அலு வலகத் தில் தொடர்புகொண்டு தங்கள் கருத்துக்களை தெரியப் படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சேபனைகள் தெரிவிக்காத பட்சத்தில் அவரது பெயரில் பெயர்மாற்றம் செய்துகொடுக்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்.

தி. பிரகாஷ்
தவிசாளர்
வலி. தெற்கு, பிரதேச சபை.

(25703) (45.6.7)

# 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 - 10 - 1927
இறப்பு 23 - 11 - 1990

யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகரும், முன்னாள் இணைப்பதிகாரியுமாகிய

## சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சமூக அபிவிருத்தி மன்றம்.

இன்று காலை நடைபெறும் நினைவு தின நிகழ்வில் அனைவரையும் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம்.

(25648)(5.6)

# வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அலுவலக நலன்புரி கூட்டுறவுச் சங்க அதிஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற அதிர்ஷ்ட லாப சீட்டுக்களின் விவரம் வருமாறு:

| பரிசு | தொகை | அதிர்ஷ்டலாபசீட்டு இல. |
|---|---|---|
| 01. முதலாம் பரிசு | 10,000.00/= | 11093 |
| 02. இரண்டாம் பரிசு | 8,000.00:/= | 04133 |
| 03. மூன்றாம் பரிசு | 5,000.00/= | 03024 |

ஆறுதல் பரிசுகள் ரூபா. 2000.00/ வீதம் அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு இலக்கங்கள்
11503, 11734, 11690,
12323, 11837.

மேற்படி திணைக்கள அலுவலகத்தில் வேலை நாள்களில், வெல்லப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டினை, அந்தச் சீட்டினை கொள்வனவு செய்தவரே கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், முதியோர் இல்ல வளாகம், கைதடி எனும் முகவரியில் நேரடியாக சமர்ப்பித்து அதற்கான பரிசுத் தொகையினை பெற்றுக்கொள்ளமுடியும்.

தலைவர்:
க.கணேசு

(25684)(45.6.7)

செயலாளர்
க.கிருஷ்ணராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(37)

இப்படிப்பட்டவர்கள் விரைவில் எல்லா நண்பர்களையும் இழந்து விட்டுப், புதிய நண்பர்கள் கிடைப்பார்களா என்று தேடுவார்கள். அடுத்தபடியாக மற்றொரு வகையினர்.

பொக்கெட்டில் கையை விடவே மாட்டார்கள். ஒரு சல்லிக் காசுகூட வெளியில் வராது. செலவு செய்யவே மாட்டார்கள். அழுத்தமான பேர்வழிகள் ''வெளியில் போனால் பணம் செலவாகும். ஆனால் எனக்கு செலவு செய்யப் பணம் இல்லை'' என்று ஒப்பாரி வைப் பார்கள்.



பிச்சைக்காரர்களைக் கண்டால் ஒதுங்குவார்கள். ஏதாவது நிதிக்கு உண்டியல் குலுக்கிக் கொண்டு நண்பர்கள் வந்தாலும், வேறு பக்கம் பார்ப்பார்கள். கொஞ்சமும் திரும்பிக் கவனிக்க மாட்டார்கள். நண்பர்கள் விடாப்பிடியாகப் பிடித்து விட்டாலும், சில்லறைக் காசுகளைப் பெரிதாக ஓசை வரும்படி உண்டியலில் போடுவார்கள். ஒரு ரூபாய் நோட்டுக்கூட வராது. அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர் ஒருவருக்குத் திருமணம். அவருக்குப் பரிசாகக் கொடுக்க ஒவ்வொருவரிடமும் 500 ரூபாய் வசூல் செய்கிறார்கள். '500 ரூபாயா? ரொம்பப் அதிகம்' என்று தட்டிக் கழித்து விடுவார்கள்.

இவர்களிடம் பணம் இருக்கும். ஆனால் கஞ்சத்தனமும் கூடவே இருக்கும். எப்போதும் தம்மிடம் பணம் இல்லை என்று கூறுவார்கள். ஏழைகள் போல் நடிப்பார்கள். இவர்கள் தமது நண்பர்களை மிக விரைவில் இழப்பார்கள்.

மூன்றாவது வகையினர் மிகவும் கண்டிப்பானவர்கள். எப்போதும் தவறே செய்யமாட்டார்கள். மற்றவர்கள் தவறு செய்வதையும் மன்னிக்க மாட்டார்கள். இயந்திரத்தைப் போன்றவர்கள்.

சிவப்பு விளக்கு எரியும் போது சாலையைக் கடக்க மாட்டார்கள். பச்சை விளக்கு வரவேண்டும். வாகனத்தில் விதியை மீறி ஒரு தடவை கூட படுவேகமாகப் போக மாட்டார்கள். எந்தக் காலத்திலும் பணத்தை அளவுக்கு மேல் செலவு செய்யமாட்டார்கள்.

மிகவும் நேர்மையாக நடந்து கொள்பவர்கள் தான்; சட்டத்தையோ விதியையோ மீறாதவர்கள் தான்; ஆனால் இயந்திரங்களைப் போல் செயற்படுவார்கள். நண்பர்களிடம் அரட்டை அடிக்கத் தெரியாதவர்கள். பணம் செலவழித்து ஒரு வேலையைச் செய்து முடிக்கத் தெரியாதவர்கள். எப்போதும் ஒரே மாதிரி இருப்பார்கள். இவர்களைச் சிடுமூஞ்சிகள் என்று இவர்களுடைய நண்பர்கள் அழைப்பதோடு, இவரைக் கண்டாலே ஓடி விடுவார்கள்.

நான்காவது வகையினர் அடிக்கடி கடன் வாங்குபவர்கள். இவர்கள் வரவுக்கு மேல் செலவு செய்வார்கள். ஆடம்பரமாக உடைகளை அணிவார்கள். அடிக்கடி நண்பர்களுக்கு சிகரெட்டும் மதுவும் வாங்கித் தருவார்கள். பெரிய ஹோட்டல்களுக்கு மற்றவர்களையும் அழைத்துச் சென்று விருந்து கொடுப்பார்கள்.

இவர்களுக்கு செலவுக்கு அடிக்கடி கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். நண்பர்களைக் கண்டால் கடன் கேட்பார்கள். அவர்களிடம் இருப்பதைப் பிடுங்கிக் கொள்வார்கள்.

வாங்கிய பணத்தைத் திருப்பித் தரமாட்டார்கள். மீண்டும் அவர்களைக் கண்டாலும், அவர்களிடம் வாங்கிய பணத்தைப் பற்றிப் பேசமாட்டார்கள்.

அளவுக்கு மேல் அதிகமாகப் பணம் செலவு செய்தால், கடினமாக உழைத்து, மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும். ஆனால் சம்பாதிக்கவும் மாட்டார்கள்.

பெரும் பணக்காரர்கள் பலர் கடன் அதிகமாகி விட்ட காரணத்தினால்தான் பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும், கடனை அடைக்க வேண்டும் என்று இலட்சியத்துடன் பணக்காரர்கள் ஆனதாகக் கூறுகிறார்கள்.

ஆனால் இவர்களோ, பணக்காரர்களாக இலட்சியத்துடன் வேலை செய்யமாட்டார்கள், திட்டமிட மாட்டார்கள். கடனில் மூழ்கி, இருப்பதையும் இழந்து, நண்பர்களையும் இழந்து தவிப்பார்கள்.

ஐந்தாவது வகையினர் ஒரு பெரும் பதவிக்கு மட்டுமே ஆசைப்படுவார்கள். மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று பாடுபடுகிறவர்களுக்கு பதவி தேடி வருகிறது. ஆனால் இவர்கள் பதவியை மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். மாறாக-

பதவியினால் பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும், உலகத்தையே கட்டி ஆளவேண்டும், மக்கள் தன்னைக் கண்டு நடுங்க வேண்டும் என்று எண்ணக்கூடாது.

தமிழ்வாணன் (தொடரும்)

# ஆசிரியரின் இயலளவு மட்டத்தை மேம்படுத்தாது கல்வி முறையை விருத்தி செய்ய முடியாது

## ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வில் உரை

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களில் எதிர்பார்க்கப்படும் இயலளவு மட்டத்துக்கும், தற்போதைய நிலைமைக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகின்றது. ஆசிரியர்களின் இயலளவை மேம்படுத்தாமல் தேசிய அல்லது மாகாணக் கல்வி முறையை விருத்தி செய்ய முடியாது என தேசிய கல்வியியற் கல்லூரியின் இணைப்பாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

பலாலி வீதியில் அமைந்துள்ள ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற 'ஆசிரியர்களுக்கான வலுவூட்டல்' செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் தேசியக் கல்வி முறையின் அபிவிருத்தி என்பது அளவுசார் மற்றும் பண்புசார் பரிமாணங்களில் ஒன்றுசேர உயர்வைக் காட்டுதல் வேண்டும். ஆனால் அளவுசார் ரீதியான பரிமாணங்களில் உயர்வாகவும், பண்புசார் பரிமாணங்களில் திருப்தியற்ற நிலையும் காட்டி நிற்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நிலைமையைத் தேசிய ஆணைக்குழுவும் கடுமையாக விமர்சித்துள்ளது.

தேசிய கல்வி முறையில் ஏற்படுத்தக்கூடிய எந்தவித தலையீடுகளும் வகுப்பறைச் செயன்முறையுடன் தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு உதவி தேவை. ஆனால் அந்த உதவி அவர்களுக்குக் கிடைக்காதா எனவும், தேசிய கல்வி ஆணைக்குழு கவலை தெரிவித்துள்ளது. இந்த நிலையை மாற்ற எமது கல்விப் பணிப்பாளர்களும், அதிபர்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். வெறுமனே எந்தவித உதவிகளோ, புரிந்துணர்வுகளோ இல்லாமல் மாணவர் அடைவு மட்டத்தை ஆசிரியர்களினால் மட்டும் உயர்த்த முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் இயவளவைக் கட்டியெழுப்பும் முயற்சியை மேற்கொள்ளும் போது ஆசிரியர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகின்றன. அவர்களை வலுப்படுத்த ஏதுவான உத்திகள் யாவை? அவர்களுக்கு வழங்கப்படும் குறுங்கால-சேவைக் காலப் பயிற்சிகளின் தரம் பேணப்படுகிறதா? போதுமானதா? பாடசாலை வகுப்பறையில் விரிவடைந்து செல்லும் புதுப்புது அறைகூவல்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு ஏதுவான பயிற்சிகள், களவேலைகள், களப்பயணங்கள் வழங்கப்பட வேண்டும் என சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

### பேச்சுக்கடைகளாக மாறியுள்ள வகுப்பறைகள்

தேசிய கல்வி ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வில் இலங்கையின் பெரும்பாலான பாடசாலை வகுப்பறைகள் இடைவினைகள் ஆக்கபூர்வமற்ற ஒரே தன்மையைக் கொண்டிருப்பதுடன் உயிரோட்டமில்லாத 'பேச்சுக் கடை'யாகக் காணப்படுகின்றன. செயற்பாடுகளைக் காண முடியவில்லை. கரும்பலகை கூட முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆசிரியர்கள் பாட நூல்களிலேயே பெரிதும் தங்கியுள்ளனர். கற்றலில் மாணவர்களை ஈடுபடுத்தும் செயற்பாடுகளைக் காண முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை எம் எதிர்காலவியல் நோக்கில் பாதகமான நிலையை ஏற்படுத்தப் போகின்றது.

இதனை நீக்கி எந்த ஒரு கல்வி முறையும் அதன் ஆசிரியர்களின் தரத்தைவிட மேம்பட்டுவிட முடியாது என்ற வகையில் பாடசாலை நிர்வாகத்தினர் ஆசிரியர்களுக்கான பொருத்தமற்ற வேலைகளை மாணவர்களுடன் சங்கமமாகி கற்பிக்கும் பொருத்தமான சூழ்நிலைகளைப் பாடசாலைகளில் ஏற்படுத்த வேண்டும். பொருத்தமற்ற வேலைகளால் ஆசிரியத் தொழில் வேலைப்பளு கொண்ட வினைத்திறனை வெளிப்படுத்தாத வாண்மையாக உள்ள நிலையை நவீன முகாமைத்துவ தந்திரோபாயங்கள் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் தாங்களே முனைந்து தம் தொழில்வாண்மை அமைப்புக்களை ஏற்படுத்தித் தம் தொழில்களை வாண்மைத் தொழிலாக்கியுள்ளனர். ஆனால் எம் நாட்டில் ஆசிரியர்களால் இதனைச் சாதிக்க முடியவில்லை-என்றார். (எ-29)



சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கைதடி இலங்கை வங்கியின் முகாமையாளர் சுரங்கனா, பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி தர்சினி, பிரதேசசபை உறுப்பினர் சங்கரன் தங்கராசா உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (எ 8)

# சைவபரிபாலன சபைக்கு புதிய தலைவர்

யாழ்ப்பாணம்,நவ.23

சைவபரிபாலன சபையின் புதிய தலைவராக சைவப்புலவர் முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.சைவபரிபாலன சபையின் தலைவராக இருந்த சிவநெறிப் புரவலர் தம்பியப்பா சண்முகலிங்கம் காலமானதை அடுத்து சைவ பரிபாலன சபைக்கான புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது.

கடந்த 18 ஆம் திகதி சபையின் நிர்வாக சபையினரால் புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-16)

# தற்போது அதி முக்கியத்துவம் பெறுகிறது ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையே

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,நவ.23

ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளை விடவும் தற்போதைய காலத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது என்று யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபர் வி.கணேசராசா தெரிவித்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் எழுபது புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை அதிபர் எஸ்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று புலமைப் பரிசில் பரீட்சையில் குறைந்தது நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவரையும் சித்தி பெற்றவர்களாகவே கருத வேண்டும்.

ஆனால் இதற்கென வெட்டுப் புள்ளியின் அடிப்படையிலேயே அவற்றின் சித்தி கணிக்கப்படுகின்றது.

உண்மையிலேயே இந்தப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களுடனே தமது கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதால் அநேகமான மாணவர்கள் சித்தியெய்தினர். ஏனைய மாணவர்கள் அந்த வெட்டுப் புள்ளிக்கு உட்பட்ட புள்ளிகளைப் பெற்றனர். இந்த மாணவர்கள் சித்திபெறவில்லை என்று கூற முடியாது. அவர்களும் ஒரு விதத்தில் சித்தியடைந்துள்ளனர்.

சித்திபெற்ற பெரும்பாலான மாணவர்கள் ஆறாம் ஆண்டைத் தொடர்வதற்கு, நகரத்தின் முக்கிய பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், அவர்களை இணைப்பதற்கும் கல்வி அமைச்சு இதற்கான வெட்டுப்புள்ளிகளை நிர்ணயித்துள்ளது.

இந்த வெட்டுப்புள்ளி எமக்கு இதுவரைக்கும் வந்து சேரவில்லை என்றார். (எ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா ஆலயம் முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகில்)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானாஸ்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்கிற்றிக்' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புச்சோலை' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுறா ட்ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மீண்டும் ஆரம்பமா?

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற சம்பவம் ஒன்று மீண்டும் யாழ். மக்களை ஒரு பயப்பீதிக்குள் தள்ளி இருக்கிறது. கடந்தகாலக் கசப்பான அனுபவங்களை அந்தச் சம்பவம் மீள நினைவுபடுத்துவதுடன் யாழ். மக்களின் குரல் வளைகளை நசுக்குவதற்கான ஒரு முன்னோட்டமா எனவும் சிந்திக்க வைக்கிறது.

கடந்த மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னர் குடாநாடு ஒரு அசாதாரண நிலைக்குள் சிக்கியிருந்தது. அந்த நிலைமையை மீண்டும் தோற்றுவிப்பதற்குச் சில தீயசக்திகள் இவ்வாறான செயல்களை அரங்கேற்றுகின்றனவா என்று எண்ணத் தோன்றுகிறது.

வேலணை, வங்களாவடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார். இது குறித்து அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அவரது வீட்டுக்கு அதிகாலையில் வந்த இனந்தெரியாதோர் அவரது பெயரைக் கூறி அழைத்துள்ளனர். வெளியே வந்த அவர் பின்னர் வீட்டுக்குள் செல்லவில்லை. அவர் கடத்தப்பட்டு விட்டார்.

இந்தச் சம்பவமே இப்போது முழுக் குடாநாடையும் மீண்டும் ஒருமுறை அதிர்ச்சிக்கும் பீதிக்கும் இட்டுச் சென்றிருக்கிறது.

'கடத்தல்' என்ற சொல் கடந்த மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமான ஒன்று. அந்தக் காலப்பகுதியில் தினமும் ஒன்றுக்கு மேற்பட்டோர் கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள். இன்னும் சிலர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். அரசுக்கு எதிராக கருத்து வெளியிடுவோரும், தமிழ்த் தேசியத்துக்குச் சார்பான கொள்கைகளைக் கொண்டிருந்தோரும், அரச பங்காளி குழுக்களை விமர்சிப்போரும் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டார்கள். நள்ளிரவிலும், அதிகாலையும், பட்டப் பகலிலும் இந்தக் கடத்தல் சம்பவங்கள் நன்கு திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வந்தன. அந்த நேரத்தில் வீதிகள் எங்கும் முழத்துக்கு முழம் சீருடையினர் வீற்றிருக்க அவர்கள் கண் முன்பாகவே பலர் கடத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர், காணாமல்போகச் செய்யப்பட்டனர். இவர்களில் பெருமளவானோர் இளைஞர்கள்.

2009 மே புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்தக் கடத்தல்கள் எல்லாம் படிப்படியாகக் குறைந்து போயின. இதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் கடத்தப்படும், கொல்லப்படும் சம்பவங்கள் இல்லாமல் போனதால் யாழ். மக்கள் குறிப்பாக இளைஞர்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். பயமின்றி தமது அலுவல்களைக் கவனிப்பதற்காக வீதிகளில் இறங்கிச் சுதந்திரமாக நடமாடக் கூடிய நிலை உருவானது. அதன் பின் இரவிலும் பயமின்றி உலாவக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டது. இடையே சிறிது காலம் 'கிறிஸ்' பூதம் யாழ். மக்களைப் பதற்றம் காண வைத்தது. பின்னர் அதுவும் ஒழிந்து போனது.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப்போது வேலணையில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவம் இதுவரை காலமும் நிம்மதியாக இருந்த யாழ். மக்களுக்கு மீண்டும் பயத்தை உண்டுபண்ணி உள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவமும் ஒரு அரசியல் பின்னணியுடனேயே இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அரச தரப்புடன் இணைந்து செயற்படும் ஒரு கட்சியே இந்தக் கடத்தலின் பின்னணியில் உள்ளதாகக் கடத்தப்பட்ட இளைஞருடன் இணைந்து செயற்பட்ட பலர் கூறுகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அரசியல் நோக்கு உள்ளது. அவரவர் தத்தமது விருப்பப்படி அந்த அரசியல் நோக்கில் செயற்படுவதற்கு உரிமை உள்ளது. அந்த உரிமையை யாரும் கட்டுப்படுத்த முடியாது. கருத்துக்களைக் கருத்துக்களால் மட்டுமே எதிர்கொள்ள வேண்டும் என மேடை மேடையாக பிதற்றித் திரிவோரும் இதனை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

மீண்டும் தலை தூக்கும் இந்தக் கடத்தலால் முழுக் குடாநாட்டின் அமைதியுமே சீர்குலையக்கூடிய சூழல் உருவாக்கப்படக் கூடாது என்பதையே பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளித்துக் கௌரவம் கொடுத்து செயற்படவேண்டிய தேவையும் அவசியமும் அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது. அவ்வாறு இல்லாமல் தொடர்ந்தும் அராஜக அரசியலையும் மிரட்டல், கடத்தல் போன்ற வன்முறைகளையும் புரிபவர்கள் நீண்ட காலம் மக்கள் மத்தியில் நிலைத்துநிற்க முடியாது. தக்க தருணம் பார்த்து அவர்களுக்கு மக்கள் சரியான பாடம் கற்பிப்பர் என்பதைப் புரிந்துகொண்டால் சரி.

# பொருளாதார அபிவிருத்திக்கு தடையாகும் குடும்ப ஆட்சி



கொழும்பு கடற்கரையோரங்களில் உள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகள் தொடக்கம், போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படும் புதிய உந்துருளிகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் வரையான பல்வேறு புதிய உற்பத்திப் பொருள்களின் பயன்பாடு, இலங்கை அறிவித்தது போன்று ஆசியாவின் தற்போதைய முன்னணிப் பொருளாதாரமாக மாறிவருவதைக் காண்பிக்கின்றது.

ஆனால் இலங்கையில் போர் முடிவடைந்த பின்னரும் கூட இங்கே தனியார் முதலீடுகள் போதியளவில் மேற்கொள்ளப்படவில்லை.

பொருளாதாரத் துறையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்ப உறுப்பினர்களும் கைக்கொண்டு வரும் இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையில் தனியார் முதலீடு என்பது போதியளவில் காணப்படவில்லை.

2009 இல் போர் முடிவடைந்ததிலிருந்து இலங்கையின் வெளிநாட்டுச் சந்தை முதலீடானது 17 வீதம் வளர்ச்சியடைந்துள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரம் எதிர்பார்த்தளவு வளர்ச்சியடையவில்லை. கடந்த ஆண்டில் இலங்கைக்குக் கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடானது ஒரு பில்லியன் டொலர் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ள போதிலும், இது அவ்வளவு போதுமானதல்ல என்பதை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கைக்குக் கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடானது 300 மில்லியன் டொலர் எனவும் 2005 இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடானது மிகக் குறைவானது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது இலங்கை அரசின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரம் தொடர்பான நம்பகத்தன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்களுக்கும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் இடையில் உண்மையான மீள் இணக்கப்பாட்டைக் கொண்டு வருவதில் இலங்கை ஜனாதிபதி பின்னிற்பதே பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களில் பிரதானமானது என விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முக்கிய அமைச்சுப் பதவிகளையும், திணைக்களங்களையும் ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன் வரவு செலவுத் திட்டத்தில் நிதி மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலாக 70 வீதம் ராஜபக்ஷ சகோதரர்களால் ஆளப்படும் அமைச்சுக்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதியின் மூத்த மகன் தேர்தல் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதுடன், மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கொண்டுள்ள தற்போதைய நாடாளுமன்றின் சபாநாயகராகவும் ஜனாதிபதியின் மூத்த சகோதரன் பதவி வகிக்கிறார்.

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களானது மிகச் சிலரின் கட்டுப்பாட்டில் காணப்படுகிறது' என இலங்கையின் பிரதான அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார விவகார பேச்சாளர் ஹர்ஷா டீ சில்வா தெரிவித்துள்ளார்.

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகளான போதிலும், சில பெரிய விடுதிகள் தவிர வேறெந்தப் பயனுள்ள முதலீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை' என ஹர்ஷா டீ சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். அமெரிக்கா தொடக்கம் இந்தியா வரை ஒவ்வொரு நாட்டிலும் குடும்ப அரசியல் காணப்படுகிறது. இதேபோன்று நாமும் ஐந்து உறவினர்களும் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றோம். இது குடும்ப அரசியலாகக் காணப்படுகின்ற போதிலும், மக்கள் எங்களை [illegible] ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவரான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேர்காணல் ஒன்றில் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மற்றைய நாடுகளில் ஆட்சியிலுள்ளவர்கள் தாமாகவே தீர்மானத்தை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் உடனடியாக வெற்றியைப் பெறுகின்றனர்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தளவில் தீர்மானங்கள் எடுப்பதானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தீர்மானம் இயற்றுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன' எனவும் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். நாட்டின் வர்த்தகத் துறையில் இலங்கை ஜனாதிபதியும் அவரது குடும்பத்தவர்களும் அதிக செல்வாக்கையும் அதிகாரத்தையும் கொண்டிருப்பதால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைவதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட அமைச்சுக்களில் பெரும்பாலானவற்றை ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் கட்டுப்படுத்துகின்றனர். இதுவே நாம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினையாகும்' என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துநெத்தி குறிப்பிட்டுள்ளார்.

கடன் வழங்குநர்கள் மற்றும் தனது நட்பு நாடான சீனா போன்றவற்றிடமிருந்து பெருமளவான கடன்களை இலங்கை ஜனாதிபதி பெற்றுக் கொள்கிறார். இதுவே தற்போதைய நேரடி வெளிநாட்டு முதலீடாகக் காணப்படுகிறது. ஆனால் இது நீண்ட கால அடிப்படையில் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியல்ல எனப் பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### மந்தம், மந்தம்

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் துரித கட்டுமான அபிவிருத்தியானது, ஏனைய போரின் பின் மீண்ட மூன்று நாடுகளை விட இலங்கை அபிவிருத்தியடைவதைக் காண்பிக்கின்ற போதிலும், உள்நாட்டில் இதன் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன.

தனியார் மற்றும் பொதுத்துறைகளின் நடவடிக்கைகளில் இலங்கை அரசானது குழப்பத்தை விளைவித்து நாட்டில் முதலாளித்துவத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இறங்கியிருப்பதையே தற்போதைய அறிகுறிகள் காண்பிப்பதாக Pathfinder Foundation என்ற பொருளியல் ஆய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நடவடிக்கையில் இராணுவத்தின் தலையீடு மற்றும் தனியார், பொதுத்துறையினரின் பங்களிப்பு தொடர்பில் தெளிவான வரையறை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது' என லக்ஷ்மன் சிறிவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் வாழும் இலங்கையில் வடக்கிலுள்ள யாழ்ப்பாணமானது இரண்டாவது பெரிய நகராகவும், பொருளாதார மையமாகவும் காணப்பட்டது. 1983இல் ஆரம்பமான ஆயுதப் போராட்டத்தை அடுத்து யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

இலங்கையில் நீண்ட காலம் தொடர்ந்த போரின் இறுதிக் கட்டத்தில் 40,000 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா அறிவித்துள்ளதும் தெரிந்ததே.

இலங்கையின் வடக்கில் வாழ்ந்த மக்கள் தென்பகுதிக்கு பிரயாணம் செய்வதற்கு இலங்கை இராணுவத்தினரின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது.

தற்போது மெதுமெதுவாக யாழ்ப்பாணம் வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது. தற்போது தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பஸ்கள் பயணிக்கின்றன. அத்துடன் விமானம் மூலமும் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். போரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பெருமளவான காணிகளை இலங்கை இராணுவம் சுவீகரித்துள்ளதாக இங்கு வாழும் மக்கள் முறையிட்டுள்ளனர். இங்குநடைபெறும் உள்ளூர்த் தேர்தல்கள் மற்றும் ஏனைய நாளாந்த நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தலையீடு செய்வதானது மீண்டும் இனக்குழப்பத்தை ஏற்படுத்தக் காலாக உள்ளதாகவும் உள்ளூரில் வாழும் தமிழ் மக்களும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கம் காண்பிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதலில் சேதமாக்கப்பட்ட தனது பெற்றோரின் வீட்டைத் திருத்தி அதில் வர்த்த நடவடிக்கையை ஆரம்பிக்கும் நோக்குடன் போரின் இறுதியில் இளம் தமிழ் வர்த்தகரான வி.கந்தப்பா பிரிட்டனிலிருந்து இலங்கைக்குத் திரும்பி வந்திருந்தார்.

### நிச்சயமற்ற நிலையில் தனியார் துறையினர்

இனிவரும் காலங்களில் என்ன நடக்கப் போகின்றது என்பது தொடர்பில் தனியார்துறையினர் நிச்சயமற்றுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது முதலீடுகளை மேற்கொள்வதில் மக்கள் அச்சங்கொள்கின்றனர் என கந்தப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தவர்கள் விடுதிகள் மற்றும் விமான நிலையங்கள் போன்றவற்றை நடத்துவதானது கொழும்பில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது. 43 மாடிகளைக் கொண்ட Hyatt Regency என்ற விடுதி பகுதியளவில் இலங்கை அரச காப்புறுதி நிறுவனத்தால் ஆளப்பட்டாலும் இதனை இலங்கை ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் காமினி செனரத்தே நடத்தி வருகிறார்.

இந்த விடுதி கட்டப்பட்டுள்ள நிலம் கடந்த ஆண்டு பஸில் ராஜபக்ஷ அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் காணி பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதாகும். நகர அபிவிருத்தி, பாதுகாப்பு அமைச்சின் செயலராக இலங்கை ஜனாதிபதியின் பிறிதொரு சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ பணிபுரிகிறார். இலங்கை இராணுவத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரமும் பாதுகாப்பு அமைச்சுக்கே உள்ளது.


ஜனாதிபதியின் பெயரைக் கொண்டுள்ள மிகின் லங்கா மற்றும் Helitours போன்ற விமான சேவைகளையும் இலங்கை அரசு நடத்துகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் விமானப்படைத் தளபதி ஆகிய இருவரும் இணைந்து மிகின் லங்கா சேவையை ஆரம்பிப்பதென திட்டமிட்டனர். இதேபோன்று சிறிலங்கன் எயார்லைன்ஸ் அரசுக்குச் சொந்தமானதாகும். தற்போது இதனை ராஜபக்ஷவின் மைத்துனர் நடத்தி வருகிறார். எரிபொருள் விலையேற்றம் மற்றும் போக்குவரத்துக் கட்டணம் குறைத்து அறவிடப்பட்டமை போன்ற காரணங்களால் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை கடந்த ஆண்டில் 14 மில்லியன் டொலர்களை இழந்ததாக மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்ததிலிருந்து நாட்டில் மேற்கொள்ளப்படும் மின்சக்தி, தொலைத்தொடர்பாடல், வீதிப் புனரமைப்புக்கள் போன்றன துரித அபிவிருத்தியடைந்துள்ளதாகவும், மகிந்த சிந்தனையின் வெற்றியே இந்த அபிவிருத்திப் பணிகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சில துறைகள் மக்களுக்கு முக்கியமானவையாகும் இவற்றை அரசு கட்டுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இவற்றின் அதிகாரங்களை அரசு எடுத்துக் கொள்ளாவிட்டால் எங்களால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாது' என பஸில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு செலுத்தி சேவை செய்தலை வலியுறுத்தியவர் பகவான் சத்திய சாயி பாபா



பகவான் சத்திய சாயி பாபாவின் 87 ஆவது அவதார தினம் இன்றாகும்.

வைத்தியகலாநிதி
இ.கணேசமூர்த்தி,
தலைவர், சத்தியசாயி பாபா நிலையம், வடபிராந்தியம்

தான் அன்பு பூண வேறு ஒன்றுமில்லையே என்றும், தன்னிடம் அன்பு பூண வேறெதுவும் இல்லையே என்றும் ஓர் எண்ணம் எழுந்ததும் ஆதி முதற் பொருள் தனது சக்தியைப் பெருக்கிப் பிரபஞ்சத்தைப் படைத்தது. மனிதன், இந்தப் படைப்பில் மிகவும் சிறிய துளியேயாயினும், அவனால்தான் இந்த மகா சக்தியை உணர முடியும். ஆதி சக்தி எல்லாம் வல்லது; எங்கும் நிறைந்தது; எல்லாம் அறிந்ததுமாகும். இதை ஓரளவுதான் மனிதனால் விளங்கவோ, உணரவோ முடியும். இதை வார்த்தைகளால் முழுமையாக வர்ணிக்க முடியாவிட்டாலும், இறைவன் பிரம்மம், சத்சித் ஆனந்தம், சத்தியம்- சிவம், சுந்தரம், ஈசுவரன், அல்லா, பரமபிதா, நிர்வாணம் என்றெல்லாம் இதை நாம் அழைக்கின்றோம். வெவ்வேறு தோற்றங்களாகத் தென்படுவதெல்லாம் ஒன்றே என்ற அத்வைதத்தையே பகவான் பாபா போதிக்கின்றார். எல்லா அறிவும் வேதத்திலே உள்ளதென்றும், எல்லா அறிவுக்கும் அதுவே ஆதாரமென்றும் கூறியுள்ளார்.

படைத்தவன் படைப்பு இவ்விரண்டைப் பற்றியும் இவற்றுக்கும், தனக்குமுள்ள தொடர்பைப் பற்றியும் மனிதன் ஆதிகாலம் தொட்டு சிந்தித்துள்ளான். இதன் விளைவே பலவித தத்துவக் கோட்பாடுகளும் தத்துவ ஞானங்களும் அவற்றைப் பின்பற்றும் பல மதங்களுமாகும்.

"நட்சத்திரங்கள் பலவானாலும் ஆகாயம் ஒன்றே. ஆபரணங்கள் பலவானாலும் தங்கம் ஒன்றேன. நதிகள் பலவானாலும் சமுத்திரம் ஒன்றே. நாமங்கள் பலவானாலும் இறைவன் ஒன்றே" என்ற தத்துவத்தையே பகவான் போதித்தார். பகவான் சத்தியசாயி பாபாவை சர்வமதப் பிரியர் என்றும் அழைப்பார்கள். எல்லாம் ஒன்றிலிருந்தே தோன்றின. எல்லாம் ஒன்றே என்பதைப் பகவான்

"ஒரே ஒரு சாதி. அது மானிடச்சாதி
ஒரே ஒரு மொழி. அது இதயமொழி
ஒரே ஒரு மதம். அது அன்பு மதம்
ஒரே ஒரு கடவுள். அவர் எங்கும் நிறைந்தவர்"

என்ற கூற்றில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். பன்மையில் ஒருமையைக் காண்பதே ஆன்மிகமாகும். ஆனால் மனிதனால் இப்படிச் சிந்தித்துச் செயற்பட முடியவில்லை.

மனிதன் உடல், மனம், ஆன்மா என்ற மூன்றாலும் ஆனவன். இம்மூன்றும் ஆன்மாவிலிருந்து தோன்றினாலும், மனம் ஆன்மாவை விட்டு விலகி உடலுடனும் உலகத்துடனும் சேர்ந்து செயற்படுகின்றது. உண்மையான நான் ஆன்மாவே. இதை மாயை மறைத்துவிடுகிறது. மனம் தோன்றியவுடன் எழுந்த முதல் 'நான்' என்ற எண்ணம், உடல் உலகத்துடன் தொடர்பு கொண்டு பொய்யான 'நானை' உருவாக்கிக் கொண்டது. இதற்குக் காரணம் மாயையேயாகும். மாயையே சத்தியமில்லாத தோற்றம் அனைத்துக்கும் காரணம் என்றே அத்வைத வேதக் கோட்பாடு கூறுகின்றது. பொய்நான் அகங்காரமானது. இது இருக்கும்வரை பிறப்பு, இறப்பு என்ற சூழல் சக்கரத்தில் சிக்கியுள்ள நிலையே ஏற்படும். சைவ சித்தாந்தமும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களுமே ஆன்மாவென்ற பசுவை சிவன் என்ற இறைவனிடமிருந்து பிரித்து விடுகிறது என்று விளக்குகின்றது.

மனிதன் தான் யார் என்பதை மூன்று விதமாக அடையாளம் கண்டு கொள்கிறான். தான் யார் என்று அவன் நினைப்பது உடலைச் சார்ந்தது. தான் யார் என்று மற்றவர்கள் நினைப்பது மனதைச் சார்ந்தது. தனது உண்மையான நிலை ஆன்மா என்பது மூன்றாவதாகும். இம்மூன்றும் ஒன்று சேர்வதே ஆன்மிக முன்னேற்றமாகும்.

"நீ உடம்பல்ல; நீ மனதுமல்ல; நீ ஆன்மாவேதான்" என்று பகவான் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். உடல் நீர்க் குமிழியைப் போன்று நிலையற்றது. பித்துப் பிடித்த குரங்கு போல அலைகின்ற மனமும் நிலையானதல்ல. ஆன்மாதான் நிலையானது என்றும் கூறியுள்ளார்.

உலகம் போகிற போக்கு நன்றாக இல்லை என்று எல்லோரும் கவலை கொள்கிறார்கள். எத்தனையோ அவதாரங்கள் நிகழ்ந்தாலும், உலகம் முழுமையாக மாறவில்லை. உலகத்தின் போக்குக்கு மனித குலமே காரணம். மனித குலத்தில் தன்னலம் ஓங்கியுள்ளது. மனித மேம்பாடுகள் நலிவடைந்துள்ளன. பணமே பலம் என்ற மனப்பாங்கும் மேலோங்கியுள்ளது. உலகத்தை திருத்த நாம் முயற்சிக்கத் தேவையில்லை.

முதலில் நாம் ஒவ்வொருவரும் எம்மைத் திருத்திக் கொள்ளலாம். இப்படிப் பலர் திருந்தினால் உலகம் தானாகத் திருந்திவிடும். மனிதன் திருந்துவதற்கு சங்கல்பம், அப்பியாசம் அல்லது விடாமுயற்சி தேவை. நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் ஆண்டவன் நூறடி முன்னெடுத்து வந்து அருள்புரிவார். பக்தர்கள் பல இடங்களில் ஒன்றுகூடி ஒரே நேரத்தில் வேத பிராயணம், நாம சங்கீர்த்தனம் செய்தால் சூழலில் மாசு நீங்கி உலகம் திருந்திவிடும். அடிப்படைத் தேவைகள் இல்லாது அல்லலுறும் மனிதர்களுக்கு ஏனையோர் உதவி செய்ய வேண்டும். இந்த மானிட சேவையை மகேசனின் சேவையென்று பகவானும் வலியுறுத்தி இதற்காகவே ஒரு நிறுவனத்தையும் (சத்தியசாயி சேவா நிறுவனம்) ஸ்தாபித்துள்ளார்.

இந்தக் கலியுகத்தில் மனிதனால் செய்யக் கூடிய சிறந்த ஆன்மிக சாதனை தொடர்ச்சியான நாமஸ்மரணையும் தாராள கொடையுமேயாகும். பகவான் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மகா சமாதியடைந்தாலும், பரவலாகவும் தீவிரமாகவும் எங்கும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். இதன் வெளிப்பாடே அவரது திருவுருவப் படங்களிலிருந்து விபூதி சொரிவதும், அமிர்தம் ஒழுகுவதுமாகும்.

அனைவரையும் நேசி; அனைவருக்கும் சேவை செய். எப்போதும் உதவி செய்; ஒருபோதும் தீங்கு செய்யாதே" என்ற பகவானின் போதனையை உள்வாங்கி எமது நாளாந்த வாழ்வில் செயற்படுத்துவோமாக.

---

கே.ஸ்ரீபாலசுந்தரம்,
பிரதி விவசாயப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

# நெல்வயல்களில் அதிகரித்துக் காணப்படும் கபிலநிறத் தண்டு தத்தி


அண்மையில் பெய்த பெருமழையின் பின்னர் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலுமுள்ள நெல் வயல்களில் கபில நிறத் தண்டு தத்தி என்னும் பீடையின் பெருக்கம் திடீரென அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் பெருக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடில் நெற் செய்கையாளர்கள் மோசமான இழப்பைச் சந்திக்க நேரிடும்.

இந்த மாவட்டத்திலுள்ள நெற்பயிர்கள் தற்போது அதிகூடிய மட்டம் பெயரும் பருவத்தில் காணப்படுவதாலும், இந்தப் பருவ வளர்ச்சியைத் தூண்டுவதற்குரிய இரண்டாம் கட்ட நைதரசன் பசளைகள் பாவிக்கப்பட்டுகூடிய சாற்றுத்தன்மையுடன் காணப்படுவதாலும் கபில நிறத் தண்டு தத்தியின் தாக்கம் மேலும் அதிகரிப்பதற்குரிய சாதகமான சூழலே நிலவுகின்றது.

கபில நிறத் தண்டுத் தத்தியானது 2-3 மில்லிமீற்றர் நீளமானது. இந்தப் பீடை நீர்மட்டத்தின் மேல் நெற்பயிர்களின் அடிப்பகுதியில் கூட்டமாக இருந்து பயிரின் சாற்றைக் குத்தி உறிஞ்சும். இளம் பருவத் தத்திகள் வெண்கபில நிறமானவை. முதிர் பருவம் கபில நிறமானது. இவற்றுக்கு அண்மையாக கைகளைக் கொண்டு செல்லும்போது இந்தப் பீடைகள் பக்க வாட்டில் அசைவதைக் காணலாம்.

இந்தப் பீடையின் தாக்கமுள்ள வயல்கள் ஆங்காங்கு தொட்டம் தொட்டமாக மஞ்சளாகி இறுதியில் பயிர்கள் எரிந்தது போன்று காணப்படும்.

மேலும் இப்பீடை காணப்படும் வயல்களின் மேல் தும்பிகள் தாழ்வாகப் பறந்து திரிவதை அவதானிக்கலாம். நீருள்ள வயல்களில் பயிர்களினை மேற்



முதிர் பூச்சி — இளம் பருவம் — தண்டுப் பகுதியில் தத்திகள்

கபில நிறத் தண்டு தத்தியின் கவசங்கள் உலர்ந்த தேங்காய்த் துருவல்கள் போன்று நீரின் மேற்பரப்பில் மிதப்பதைக் காணலாம்.

இப்பீடையைக் கட்டுப்படுத்துவதற்கு கீழ்க்காணும் பீடை நாசினிகளிலொன்றை விசிறுமாறு நெற் செய்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பீடை நாசினியின்
பொதுப் பெயர் - வர்த்தகப் பெயர்கள்
1. பற்றோனில் - நீஜென்ற்
2. பற்றொபெசின் - அப்லோட்
3. நவெலுறோன் - றீமோன்
4. இமிடாகுளோபிட் - அட்மயர், பறவாடோ, கொன்பிடோர், டாடாமிடா,ரலன்ற்
5. தியாமெதொக்சாம் - அக்ராறா
6. அசடாமிப்றிட் - மொர்பலான்
7. எரொபென்புறொக்ர் - றெபோன்
8. பெனோபியூறோகாப் - பீ.பீ. எம். சீ., பார்ஸா 50, பவர்ஸ்BPMC, கீடான், மொறிகாப், பெகாப்
9. காபோசல்பான் - மார்சல்
10. காபோபியூறான் - பியூறடான், குறேற்றர்

கபில நிறத் தண்டு தத்தியைக் கட்டுப்படுத்துவதற்குப் பீடை நாசினிகள் விசிறும்போது வயலின் வரம்புகளில் ஆரம்பித்து உட்புறம் நோக்கி முற்றுகைமுறையில் விசிற வேண்டும்.

தற்போது நிலவும் காலநிலை கபில நிறத் தண்டு தத்தியுடன் நெல் இலை மடிச்சுக்கட்டியின் பெருக்கத்திற்கும் சாதகமாக காணப்படுவதால் இரு பீடைகளின் தாக்கமும் அவதானிக்கப்பட்ட வயல்களுக்குக் கீழ்க் காணும் பீடை நாசினிகளிலொன்றை விசிற வேண்டும்.

பொதுப் பெயர் - வர்த்தகப் பெயர்கள்
1. பற்றோனில் - நீஜென்ற்
2. நவெலுறோன் - றீமோன்
3. காபோசல்பான் - மார்சல்
4. காபோபியூறான் - பியூறடான், குறேற்றர்

நெல் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் மட்டும் காணப்படுமாயின் விசிற வேண்டிய நாசினிகள்

பொதுப் பெயர் - வர்த்தகப் பெயர்கள்
1. பற்றோனில் - நீஜென்ற்
2. ரெபியூபெனோசைற் - மிமிக்
3. மெதொக்ஸிபெனோசைற் - றன்னர்
4. அசெபேற் - அசபேற்
5. குளோர்புளூசிறோன் - அற்றப்புறோன்
6. காபோபியூறான் - பியூறடான், குறேற்றர்

மேற் குறித்த பீடைத் தாக்கங்களுடன் நவாலி, அராலி, வட்டுக்கோட்டை, கைதடி, நாவற்குழி, கப்புது போன்ற கடல்நீரேரிகளுக்கு அண்மையாகவுள்ள வயல்களில் உள்ள நீரில் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக நெற்பயிர்களின் இலைகள் பழுப்படைந்து நுனியிலிருந்து கருகும்.

எனவே தாக்க அறிகுறிகள் குழப்பமாகக் காணப்படுமாயின் நெற்செய்கையாளர்கள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடனோ அல்லது மாவட்ட விவசாய அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியும்

நீ அளப்பரிய ஆற்றல் படைத்தவன்.

உன்னால் எந்தவொரு செயலையும் செய்யமுடியும்.

உன் ஆற்றலை உலக விடயங்களுக்காகவே அதிகமாகச் செலவழிக்கிறாய். உன்னால் கோடி கோடியாய்ப் பணம் சம்பாதிக்கமுடியும். நினைத்த பதவிகளையும் பட்டங்களையும் பெற முடியும். விண்வெளிக்குக் கூடப் பறந்து செல்ல முடியும். பலவிதமான இயந்திரங்களைக் கண்டுபிடிக்க முடியும்.

உன்னால் முடியும் என்ற நம்பிக்கையில் இவற்றை யெல்லாம் செய்கிறாய். இந்தத் தன்னம்பிக்கை உனக்கு அவசியமே.

ஆனால், உன் மீது வைத்துள்ள நம்பிக்கையில் எத்தனை சதவீதம் நீ இறைவன் மீது வைத்துள்ளாய்? தன்னம்பிக்கையுடன் இறை நம்பிக்கையும் கொண்டவனே முழு மனிதன்.

நீ செய்யும் செயல்கள் வெற்றியடைந்தால் அது இறைவனின் அனுமதி. அதனால் உனக்குண்டாகும் புகழ், அவன் தரும் வெகுமதி. தன்னம்பிக்கையால் மட்டும் நீ ஒரு செயலைச் செய்து வெற்றி பெற இயலாது என்பதை உணர்ந்து கொள்.

நீ இறைவனை நினைத்தாலும், நினைக்கவிட்டாலும் அவன் உனக்குத் தர வேண்டியவற்றைத் தந்து கொண்டே இருக்கிறான். உன் காரியம் ஒன்று வெற்றி பெற்றால், அது உன்னால் மட்டுமன்று. இறைவன் அருளாலும் தான்.

இருப்பினும் நீ தன்னம்பிக்கையையே பெரிதென எண்ணுகிறாய். உலகில் எதை எதையோ தேடி, எதை எதையோ சாதிக்கிறாய். ஆனால், இறைவனோடு ஒன்று கலக்கும் முயற்சியில் நீ ஈடுபடவில்லையே! ஆத்மாவைத் தேடு! ஆண்டவனைத் தேடு!

அது உன்னால் முடியும் என்று, உனக்கு நம்பிக்கை இல்லையா? இவ்வுலகில் மிகச்சிலரே இறைவனை அடையும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களே மகான்கள், ஞானிகள், ரிஷிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

அது உன்னாலும் முடியும் என்று எண்ணியதுண்டா? எவ்வளவோ அரியதான செயல்களை ஆற்றும் வல்லமை மனிதனுக்குண்டு.

இறைவனை அடையும் வல்லமையும் உனக்குண்டு. உன்னால் எதுவும் முடியும்! எதையும் கடினம் என்று எண்ணாத நீ இறைவனை அடைவது மட்டும் கடினம் என்று ஏன் நினைக்கிறாய்? உண்மையில் இறைவனை அடைவது மிகச் சுலபமே. இறைவன் உயிர்கள் மீது அளவற்ற கருணை கொண்டவன். அனைவருக்கும் அவன் அருளை வழங்கக் காத்திருக்கிறான். நீ அவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவன் உன்னை நோக்கி நூறடி எடுத்து வைக்கிறான்.

நீ இறைவனை உன் மனதில் குடியேற்று. அதற்கு நீ சிறிதளவாவது முயற்சி செய்தாயா? இறைவன் உனக்குப் புத்தியைத் தந்திருக்கிறான். அதனைக் கொண்டு மனதை அடக்கு.

தீய வழியில் மனம் செல்லாமல், நல்ல செயல்களில், இறை சிந்தனையில் அதைச் செலுத்து. பக்தியை உள்ளத்தில் பொங்கச் செய். உன்னால் முடியும். இறைவனை அடைய உன்னால் முடியும். இதனை நீ உறுதியாக நம்பு.

இதைத்தான் இறைவனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். மனம் ஒரு குரங்குதான். சஞ்சலம் மிக்கதுதான். ஆனால் இடைவிடாத பயிற்சியினாலும், வைராக்கியத்தாலும் அதை இழுத்து நிறுத்திவிடலாம்.

எவனால் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அவனுக்கு எதுவுமே கிடைக்காது. எவன் மனத்தை ஒழுங்குபடுத்தி, மிகவும் கவனமாக முயற்சி செய்கிறானோ, அவனுக்கு எல்லா போகமும் கிட்டும். இவை கீதையிலே கண்ணன் கூறியவை. நீ முயற்சியினாலும், பயிற்சியினாலும் மனதை அடக்கு. இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்பம் பெற முயற்சி செய்.

உலகில் எதை எதையோ முடியும் என்று எண்ணி, முயற்சி செய்கிறாயல்லவா? இறைவனை அடைவதற்கு ஏன் அவ்வாறு முயற்சி செய்வதில்லை. இதுவும் உன்னால் முடியும்.



முயன்றால் முடியாதது இல்லை என்ற வாக்கியம் உலக விடயங்களுக்கு மட்டுமன்று, ஆன்மிகத்திற்கும் பொருந்தும். மீண்டும் சொல்கிறேன். உன்னால் முடியும்!

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# ஊரை ஒன்று கூட்டி நிர்மாணிக்கப்பட்ட சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் ஆலயம்



**ஞானி**

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

சிவாம்ச மூர்த்தமாகிய வைரவரைக் காவல் தெய்வமாகவும்; கிராம பாலகர் என்ற வகையில் இல்லங்களிலும், ஊரின் மத்தியில் உள்ள வேப்பமரத்தின் கீழும் பிரதிஷ்டை செய்து வழிபடுவதைச் சாதாரணமாகக் கண்டு கொள்ளலாம். வைரவர் வழிபாடு வேதாகமவிதி முறைகளுக்கு உட்பட்ட வகையிலும் அதற்கு உள்ளடங்காத சாதாரண நடைமுறையிலும் மேற்கொள்ளப்படுவதுண்டு. இந்த வகையில் ஊரே கூடி பொங்கல் செய்வதும் மடை வைத்து வழிபடுவதோடு சில இடங்களில் ஆடு, கோழி என்பனவற்றைப் பலி கொடுத்தும் தமது நேர்த்தியை நிறைவு செய்து கொள்வர்.

ஊரையே ஒன்று கூட்டி, கோயில் அமைத்து குடமுழுக்கு செய்வித்த சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞான வைரவரின் அருள் வியாபகம் அற்புதமானது. அடியார்களை வசப்படுத்துவது. மலேசியாவில் இருந்து ஊருக்குத் திரும்பிய கார்த்திகேசு செல்லப்பு, வைரவரின் அருள்வியாபகத்தை கேட்டறிந்ததோடு நேரடியாகக் கண்டு வியந்தார். ஊரையே ஒன்றுகூட்டி ஆலோசித்து, ஆலயத் திருப்பணியை மேற்கொள்ள வைரவர் திருவருளால் சித்தம் கொண்டார்.

ஞானவைரவருக்கு அண்மையில் சிறு கோயில் அமைத்து வழிபாடு செய்து வந்த இ.வேலுப்பிள்ளையுடன் கலந்தாலோசித்து ஆலயத் திருப்பணியை மேற்கொள்வதற்கு ஆலயமுன்றிலில் ஒன்று கூடிய கூட்டத்தில் பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. பரிபாலன சபையின் தலைவராக க.செல்லப்புவும் உறுப்பினர்களாக இ.வேலுப்பிள்ளை, வ.சின்னையா, க.வல்லிபுரம், வே.கனகசபை, ச.இளையதம்பி, கு.இராசா, கு.சின்னத்துரை, க.தம்பிப்பிள்ளை, வ.தம்பிமுத்து ஆகியோர் பொது மக்களினால் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலய பரிபாலனசபை முன்னெடுக்க முற்பட்ட அனைத்து திருப்பணிகளுக்கும் ஊர் பொது மக்கள் தங்களால் இயன்றளவு நிதி உதவி வழங்கியதோடு உடல் உழைப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி உதவினர். கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பன கட்டி முடிக்கப்பட்டதோடு ஆலயத்தின் பாவனையில் இருந்த திருமஞ்சனக் கிணறுக்குப் பதிலாக புதிய திருமஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டது. பூர்வீகமாக வழிபட்டு வந்த ஸ்ரீ ஞான வைரவர் விக்கிரகம் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அத்துடன் புதிய ஆலயத்தின் உள்ளே வலப்பக்கத்தில் பிள்ளையார் விக்கிரகமும் இடது பக்கத்தில் முருகன் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1954 ஆம் ஆண்டு தைத்திங்கள் நான்காம் நாள் திங்கட்கிழமை அத்த நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது. 1986 ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேதாகம முறைப்படி உரிய காலப்பகுதியில் பாலஸ்தாபனம் [illegible] ப்புடன் தொடர்ந்து [illegible] கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007 ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு 2008 ஆம் ஆண்டு தை மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (10.07.2008) புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகத்துடன் நிறைவடைந்தது.

காலத்துக்குக் காலம் ஆலய பரிபாலனத்தைக் கண்காணித்துக் கொண்டு வரும் பரிபாலன சபையினரின் முயற்சியினாலும் ஊர் பொது மக்கள் மற்றும் புலம் பெயர் உறவுகளின் ஒத்துழைப்பினாலும் மடைப்பள்ளி, வசந்தமண்டபம், பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், மணிக்கூட்டுக் கோபுரம், நவக்கிரகங்களுக்கான ஆலயம், சிவன் ஆலயம், வாகனசாலை, ஆலயத்தைச் சுற்றி மதில், கிணறு, வெளிமண்டபம், தேர், தேர்முட்டி, உள் வீதி, மூடு மண்டபம், நீர்விநியோக இணைப்புகள் போன்ற திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தின் திருப்பணியிலும், ஊரோடு இணைந்த அபிவிருத்திப் பணியிலும் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரையும் இரண்டு மூத்த பிரஜைகள் தொடர்ந்து உழைத்து வருகின்றனர். 90 வயது நிரம்பிய நிலையிலும் ஊருக்காக உழைத்து வரும் ''சொத்தியப்பா'' என்று செல்லமாக அழைக்கப்படும் க.செல்லப்புவும் 'சைவப்பா' என்று செல்லமாக அழைக்கப்படும் தம்பு இராமநாதனும் பாராட்டப்படுகின்றனர்.

ஊரவர்களினால் சமகாலத்தில் பொது வைபவங்களில் நன்றியறிதலோடு இவ்விருவரும் கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களின் அறிவுரையையும் வழிப்படுத்தலையும் உரிய முறையில் ஏற்று இளைய தலைமுறையினர் இணைந்து செயற்படுகின்றனர்.

இது ஏனைய கிராமங்களுக்கு எடுத்துக் காட்டாகவும் முன்மாதிரியாகவும் கொள்ளப்படுகின்றது. இவர்களுக்கு அண்மையில் ஊரே ஒன்றுகூடி விழா எடுத்து பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது.

> **குழந்தைப் பேறு வேண்டிய தம்பதிகள் தொடர்ச்சியாக ஆறு தேய்பிறை அட்டமியில் சிவப்பு அலரிமாலை சாத்தி அர்ச்சனை பூசை வழிபாடு செய்தும், வியாழக்கிழமைகளில் சந்தணக்காப்பு செய்வித்தும், அன்னதானம் செய்தும் வழிபடுவார்கள்.**

வைரவருக்கு நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகளுடன், வருடாந்தம் பெருந்திருவிழாவும், வெள்ளிக்கிழமை, சித்திரை மாதப்பரணி, ஐப்பசிப் பரணி, கார்த்திகை மாத கால வைரவ அஸ்டமி, தைமாத செவ்வாய்க்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. வைகாசி பூரணையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 11 தினங்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெறும்.

குழந்தைப் பேறு வேண்டிய தம்பதிகள் தொடர்ச்சியாக ஆறு தேய்பிறை அட்டமியில், சிவப்பு அலரி மாலை சாத்தி அர்ச்சனை பூசை வழிபாடு செய்தும், வியாழக்கிழமைகளில் சந்தணக்காப்பு செய்வித்தும், அன்னதானம் செய்தும் வழிபடுவார்கள். வறுமை நீங்கி செல்வம் பெருக வெள்ளிக்கிழமைகளில் வில்வம் இலையால் அர்ச்சனை செய்து வழிபடுவர்.

இழந்த சொத்துக்களை மீளப்பெற மிளகைத் துணியில் முடிச்சுக்கட்டி சிட்டியில் வைத்து நல்லெண்ணையில் தீபமேற்றி நேர்த்தி செய்வர். திருமணம் விரைவில் நிறைவேற ஞாயிற்றுக்கிழமைகளில் ராகுகாலத்தில் மாலை நேரத்தில் உருத்தி அபிஷேகம் செய்து வடை மாலை சாத்தி வழிபாடு செய்வார்கள். ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மயிர்கொட்டி’ படையெடுப்பு; பாடசாலைக்கு விடுமுறை

## புனானை அ.த.க.மாணவர்கள் அசௌகரியம்

மட்டக்களப்பு,நவ.23

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட புனானை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்தினுள் ஆயிரக்கணக்கான மயிர்கொட்டிகள் பெருகியுள்ளன.



இந்த மயிர்கொட்டிகள் வகுப்பறைகளுக்குள்ளும் படையெடுத்துள்ளதால், அந்தப் பாடசாலை மூன்று நாள்களுக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மயிர்கொட்டியால் மூடப்பட்ட இந்தப் பாடசாலைக்கு மருந்து தெளிப்பதால் மூன்று நாள்களுக்கு பாடசாலையை மூடிவிடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலையைச் சுற்றிய வளாகத்தில் தேக்குமரங்கள் உள்ளன. அந்த மரங்களில் உள்ள மயிர்கொட்டிகள் இறங்கி பாடசாலைக்குள் நுழைந்துவிடுவதால் அவை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கின்றன.

மயிர்கொட்டிகள் மாணவர்களின் உடலில் விழுவதால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதனையடுத்தே பாடசாலையை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பாடசாலையில் மயிர்கொட்டிகள் பெருகியுள்ளதைத் தொடர்ந்து வாகரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அமிர்தாப் தலைமையிலான குழுவினர் பைபந்திரின் மருந்தைத் தெளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## ஓட்டோ உதிரிகள் திருட்டுக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கட்டுகஸ்தோட்டை,நவ.23

கட்டுகஸ்தோட்டையில் ஓட்டோவின் உதிரிப் பாகங்களைத் திருடிவந்த குற்றச்சாட்டின் பேரில் ஓட்டோ சாரதி ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டையில் நிறுத்திவைக்கப்படுகின்ற ஓட்டோக்களின் உதிரிப் பாகங்கள் திருட்டுப் போவதாக பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார்,சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அவரிடம் இருந்து இரண்டு ஓட்டோக்களில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர். (ச)

## குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு



திருகோணமலை,நவ.23

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பாலத்தின் வீதி திருத்த வேலைக்காக 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணிப் பாலத்தின் வீதி கடந்த மாதம் பெய்த அடைமழையைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட நிலையில், இந்த வீதியின் ஊடாக மக்கள் போக்குவரத்து செய்வதில் சிரமத்தை எதிர்நோக்கினர்.


இந்தநிலையில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறிஞ்சாக்கேணி பாலத்தின் வீதியை செப்பனிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் வீதி திருத்த வேலைக்காக கிண்ணியா நகரசபைத் தலைவர் எம்.எம்.ஹில்மி தனது முயற்சியின் பயனாக 5 லட்சம் ரூபா நிதியை கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜய விக்கிரமவிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். (ச)



கிண்ணியா நகர சபையில் சுகாதாரத் தொழிலாளிகளாகப் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் மழை அங்கி வழங்கப்பட்டது. மழைக்காலங்களில் வேலை செய்யும் போது ஏற்படும் சிரமத்தை கருத்தில்கொண்டு தடையின்றி வேலைகளை செய்வதற்காகவே மழை அங்கி வழங்கப்பட்டது. கிண்ணியா நகர சபைத் தலைவர் எம்.எம்.ஹில்மி ஊழியர்களுக்கு மழை அங்கிகளை வழங்கினார். (ச)

## பஸ் நடத்துநர் சில்லில் நசியுண்டு உயிரிழப்பு



ஒலுவில்,நவ.23

ஒலுவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் தனியார் பஸ்ஸின் நடத்துநர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்த நடத்துநர் மீது அதே பஸ்ஸின் சில்லு ஏறியதால் இந்த விபத்து இடம்பெற்றது.

அக்கரைப்பற்றைச் சொந்த இடமாகக் கொண்ட கணேஷமூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கி பயணிகளுடன் வந்த பஸ், ஒலுவில் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக தரிக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பெற்றெடுத்த 2 நாள் சிசுவை தவிக்கவிட்டு ஓடிய தாய்!

### கிண்ணியா ஆஸ்பத்திரியில் கொடுமை



திருகோணமலை, நவ.23

குழந்தையைப் பிரசவித்து இரண்டு நாள்கள் பாலூட்டி அரவணைத்த தாய், அதனை அநாதரவாகக் கைவிட்டு தலைமறைவான சம்பவமொன்று கிண்ணியா தள வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு நாளான சிசுவை வைத்தியசாலை கட்டிலிலேயே விட்டுவிட்டு குறித்த தாய் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது என்று கிண்ணியா தள வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த பெண் பிரசவத்துக்காக கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இவருக்கு பிரசவ வலி ஏற்பட்டு அன்று இரவு 9 மணிக்கு குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வீட்டுக்கு அனுப்புவதற்கு தீர்மானித்திருந்த வேளையிலேயே, கடமை நிறைவுறும் தாதிகள் மாற்றலாகும் நேரம் பார்த்து சிசுவைக் கட்டிலிலேயே விட்டுவிட்டு கம்பி நீட்டி விட்டார் அந்தத் தாய்.

இந்த வைத்தியசாலையில் குறித்த பெண் அனுமதிக்கப்படும்போது போலியான முகவரியே வழங்கியுள்ளார் என்று பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கஞ்சா விற்ற நபருக்கு சிறை

எருவில்,நவ.23

அக்கரைப்பற்று, மீராநகர் பிரதேசத்தில் 5 கிராம் கஞ்சாவை விற்பனை செய்த நபர் ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்தனர்.

இவரிடமிருந்து பொலிஸார் 360 கிராம் 18 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றினார்கள்.

கைது செய்யப்பட்ட நபர் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது, நீதிபதி ரி.சரவணராஜா எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை, பாலமுனை ஆகிய பிரதேசங்களில் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த மூன்று பேரைக் அக்கரைப்பற்று பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் மூவருக்கும் முறையே 7 ஆயிரம் ரூபா, 4ஆயிரம் ரூபா, 2ஆயிரம் ரூபா என அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ச-31)

## சிவில் பாதுகாப்புக் குழு மூதூரில் கூடி ஆராய்வு



திருகோணமலை,நவ.23

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் முன்னேற்ற மீளாய்வு சம்பந்தமான கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மூதூரில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் செயற்படும் சிவில் பாதுகாப்பு குழுக்களின் செயற்பாடு குறித்து ஆராயப்பட்டதோடு, சிறிய மற்றும் பெரிய குற்றங்களைத் தடுப்பதில் பாதுகாப்புக் குழுக்களின் பங்கு குறித்தும் கலந்துரையாடப்பட்டது

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி விஜேகுணவர்த்தன, பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்த்தன, சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ஐ.ஜயவர்த்தன, மூதூர் பிரதேச சபைத் தலைவர் ஏ.எம். ஹரீஸ், திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம். தௌபீக் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## மாகாண சபை உறுப்பினர் திடீர் பயணம்

மட்டக்களப்பு,நவ.23

மட்டக்களப்பு, காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் திடீர் பயணத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொண்டார்.

இந்த அலுவலகத்தில் அதிகாரிகள், மக்கள் எதிர்நோக்கும் வளப்பற்றாக்குறை மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அவர் திடீர் பயணத்தை மேற்கொண்டார்.

இந்த அலுவலகத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நசுருதீனிடம் அவர் கேட்டறிந்து கொண்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிட்டும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மிதுனம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். சகோதரர் பாசமழை பொழிவார். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**கடகம்:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். முன்கோபத்தால் பகை உண்டாகும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் அளவாகப் பழகுங்கள்.

**சிங்கம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமாக நிலைக் காணப்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

நாளை

கார்த்திகை -09 சனிக்கிழமை 24.11.2012
திதி: ஏகாதசி பி.ப 01.52 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி சித்தம் கா.07.13 வரை
சுபநேரம்: 03.12 - 04.42 வரை
ராகுகாலம்: 09.12- 10.42 வரை

**துலாம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. தாயின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. சகோதர வகையில் நன்மை கிட்டும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**கும்பம்:** பல வேலைகள் தடைப்பட்டு முடியும். சொந்தங்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**மீனம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. அரசு காரியங்கள் தடைப்பட்டு முடியும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரக்கூடும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 9 | | | | | | 3 |
| | | 2 | 9 | | | 5 | | 4 |
| 7 | | 5 | 3 | | | | 1 | |
| | | | 2 | 6 | | 7 | 4 | |
| 5 | | | 7 | | 3 | | | 9 |
| | 7 | 8 | | 1 | 9 | | | |
| | 8 | | | | 7 | 2 | | 1 |
| 6 | | 1 | | | 2 | 4 | | |
| 2 | | | | | | 6 | 5 | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 9 | 3 | 1 | 6 | 2 | 4 | 5 |
| 5 | 6 | 1 | 7 | 2 | 4 | 8 | 3 | 9 |
| 2 | 3 | 4 | 8 | 5 | 9 | 7 | 1 | 6 |
| 6 | 2 | 7 | 1 | 3 | 5 | 4 | 9 | 8 |
| 1 | 9 | 8 | 6 | 4 | 7 | 5 | 2 | 3 |
| 3 | 4 | 5 | 2 | 9 | 8 | 6 | 7 | 1 |
| 7 | 5 | 3 | 4 | 6 | 1 | 9 | 8 | 2 |
| 4 | 1 | 6 | 9 | 8 | 2 | 3 | 5 | 7 |
| 9 | 8 | 2 | 5 | 7 | 3 | 1 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## நீங்காத நினைவில் 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 12.05.1934

உதிர்வு 23.11.2010

மீசாலை மேற்கு

அமரர் நல்லதம்பி பேரம்பலம்

(இளைப்பாறிய அதிபர், அல்லாரை G.T.M.S பாடசாலை)

திதி: அபரபக்க துதியை – கார்த்திகை

ஊருக்கும் உறவுக்கும் அறிவூட்டி ஒளிகொடுத்த
பெருந்தகையே - இல்லத்துக்கு
ஒளியூட்ட நீ இங்கு இல்லையே

கார்த்திகேயர் வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(21598) (45.6.7)


## சுயதொழில் உதவி வந்து சேர்ந்தது

தென்மராட்சி,நவ.23

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சுயதொழில் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்த நுணாவில் சந்தியைச் சேர்ந்த துரைராஜா மேனுகா என்பவருக்கு உரிய உதவித் தொகையை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பியுள்ளனர்.

உணவுப் பொருள்கள் தயாரித்தல் சுயதொழில் உதவித் தொகையாக ரூபா 7 ஆயிரத்து 500 ரூபா அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு எதிர்வரும் 28 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும் பயனாளிகள் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆகியவற்றுடன் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)


www.uthayan.com 0215671111



## விண்ணக வாழ்வில் ஆறுவருடங்கள்

"காலையில் மலர்ந்து, மாலையில் உதிர்ந்த மலரைப் போல் என் வாழ்நாள்கள் மறைந்து போயின"



பிறந்தநாள் நினைவஞ்சலி

அன்னையிடம்: 23.11.1969 ஆண்டவரிடம்:02.05.2006

அமரர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)

(முன்னாள் சந்தைப்படுத்தல் முகாமையாளர், 'உதயன்' பத்திரிகை நிறுவனம்)

ஜெபம்

இரக்கமுள்ள இறைவா! உமது அடியார் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாசை உமது கரங்களில் ஒப்படைக்கின்றோம். எம்மோடு வாழ்ந்த காலத்தில், எம்மோடு மிகவும் பாசமாகவும், எமக்கு மிகவும் உதவியாகவும் இருந்த இவரை உம்மோடு வாழும்படியாக அழைத்திருக்கின்றீர்! நீர் அவருக்கும், அவர் வழியாக எமக்கும் செய்து வந்த அனைத்து நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர் உம்மோடு இன்னும் தொடர்ந்து வாழ்கின்றார் என்ற நம்பிக்கையை எம்மில் வளர்த்து உறுதிப்படுத்தியருளும் – ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, மட்டக்குளிய, பாம் வீதியிலமைந்துள்ள "கார்மேல் மாதா" கன்னியர்மட சிற்றாலயத்தில் இன்று காலை 6.45 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நாம் வாழும் காலம் முழுவதும் உங்கள் நினைவுகளுடனேயே வாழ்வோம். எம் அன்பு சுரேஷ்!

மனைவி - சுவேன் (Suven),
பிள்ளைகள் - அல்றின், சேஷா (Alrin & Saesha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம நீதியரசருக்காக பிரார்த்தனை...



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்காக, உயர்நீதிமன்ற ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கொழும்பு போதிராஜாராம விகாரையில் விசேட பிரார்த்தனை நிகழ்வு ஒன்றில் ஈடுபட்டனர்.

பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பான

# குற்றப் பிரேரணை தெரிவுக்குழு அமர்வு இன்று நடைபெறுமா?

### தலைவர் யாப்பாவுக்கு டெங்கு; நிமால் பின்னடிப்பு

கொழும்பு,நவ.23

குற்றப் பிரேரணை தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் இலங்கையின் பிரதம நீதியரசரை பிரசன்னமாகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அமர்வு இடம்பெறுமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக இருக்கும் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளமையால் அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் தெரிவுக் குழுவின் உறுப்பினராக உள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தமக்கு தலைமை பொறுப்பை ஏற்க முடியாது என்று அறிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறுபுறத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளமையால், அவர்களால் தெரிவுக்குழுவுக்குத் தலைமை வகிக்க முடியாது. ஆகையால் இன்றைய அமர்வின் போது பிரதம நீதியரசரும் பங்கேற்காமல் அவருடைய சட்டத்தரணியே பங்கேற்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே ஒரு மாத காலத்துக்குள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை முடிக்க வேண்டும் என்று அரசு காட்டும் முனைப்பு சாத்தியமாகாது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இஸ்ரேலுக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.23

பலஸ்தீனம், காஸா பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

கொழும்பு, கல்முனை, சம்மாந்துறை, கிண்ணியா, காத்தான்குடி மற்றும் ஏறாவூர் உள்ளிட்ட முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஜும்ஆ தொழுகையை அடுத்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முஸ்லிம் இயக்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டமொன்று கொழும்பு 2, தெவட்டஹக பள்ளிவாசலுக்கு முன்னால் இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை அடுத்து இடம்பெறவுள்ளது. (ச)

# பிரதம நீதியரசருக்கு எதிராக அல்ல அரசுக்கே குற்றப் பிரேரணை வேண்டும்

### அசாத் சாலி சொல்கிறார்

கொழும்பு,நவ.23

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உண்மையில், பிரதம நீதியரசருக்கு எதிராக அல்ல, இந்த அரசுக்கு எதிராகவே மக்கள் குற்றப் பிரேரணையை கொண்டு வர வேண்டும் என்று கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசுக்கு எதிரான ஊழல் மோசடிகள் குற்றச்சாட்டு ஆவணம் ஒரு கிலோ மீற்றரை விடவும் நீளமானதாக அமையும். ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவா பேசுகின்றார்கள்?

13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதாக நான் ஐக்கிய நாடுகள் அமைப்பு, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளேன் என ஏன் ஜனாதிபதியினால் கூற முடியவில்லை.

ஆளும் கட்சி அமைச்சர்கள் கோமாளிகளைப் போன்று கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றில் ஆளும் கட்சி அமைச்சர்கள் கூறி வரும் பொய்களை இயற்கையினாலேயே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.- என்றார். (ச)

> இந்த அரசுக்கு எதிரான ஊழல் மோசடிகள் குற்றச் சாட்டு ஆவணம் ஒரு கிலோ மீற்றரை விடவும் நீள மானதாக அமையும்.



## மலேரியா நோயினால் 22 பேர் சாவு

கொழும்பு,நவ.23

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்ட 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் சரத் தெணியகே தெரிவித்தார்.

வட பகுதியில் பல்வேறு தொழில்வாய்ப்புகளுக்காக சென்றுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இரத்த மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கு விருப்பம் தெரிவிப்பதில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதனால் மலேரியா நோய் குறித்து பரிசோதனை மேற்கொள்வதில் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் கூறினார்.

மலேரியா நோயினால் பீடிக்கப்பட்ட சில வெளி நாட்டவர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வெளிநாட்டு நாணயங்களுடன் சிக்கிய இந்தியர்கள் மூவர்



கொழும்பு,நவ.23

வெளிநாட்டு நாணயங்களுடன் மூன்று இந்திய நாட்டவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து சிங்கப்பூர் செல்வதற்கு இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய பிரசைகளிடம் இருந்து 150 லட்சம் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

## செயற்கைக்கோள் ஏவும் திட்டம் பிற்போடப்பட்டது

சீனாவின் சீ சாங் செயற்கைக்கோள் தளத்தில் இருந்து நேற்று வியாழக்கிழமை விண்ணுக்கு ஏவப்படவிருந்த இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு செயற்கைக் கோள் தொழில்நுட்பக் கோளாறு மற்றும் காலநிலை சீர்கேட்டால் பிற்போடப்பட்டுள்ளது என்று ஸ்பேஸ் சிஸ்டம்ஸ் பொறியியலாளர் ரோஹித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்யும் பணிகளில் சீன - இலங்கை பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

# அகதிகளுக்கு புதிய முகாம்; திறந்து வைத்துள்ளது ஆஸி.

கொழும்பு,நவ.23

ஆஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் கோரும் நோக்கில் படகுகள் மூலம் வரும் ஆயிரக்கணக்கானவர்களின் மனுக்கள் பரிசீலனை செய் யப்படும் வரை, அவர்களை ஆஸ்திரேலிய கரைக்கு அப்பால் தடுத்து வைக்கும் நோக்கில் மேலும் ஒரு தடுப்பு முகாமை அந்த நாட்டு அரசு திறந்துள்ளது.

தமது நாட்டில் தஞ்சம் கோருபவர்கள் தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு புதிய திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பாப்பூவா நியூ கினியா நாட்டுக்கு சொந்தமான தொலைதூரத் தீவான மானுஸ் தீவுக்கு ஒரு தொகுதி இலங்கையர்களை ஆஸ்திரேலிய அரசு அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே சிறு தீவு நாடான நவ்ரூவில் அகதித் தஞ்சம் கோருபவர்களை கூடாரங்களை அமைத்து ஆஸி அரசு தடுத்து வைத்துள்ளது. அங்குள்ள நிலைமைகள் மனித உரிமை அமைப்புகளின் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளன.

அகதித் தஞ்சம் கோரும் நோக்கில், கடந்த பத் தாண்டுகளில் ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் படகுகளில் சென்ற போது உயிரிழந்துள்ளனர்.

ஆனால் கடலில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்தின் ஒரு பகுதியாகவே தமது நடவடிக்கைகள் இருக்கின்றன என்று ஆஸ்திரேலிய அரசு கூறுகின்றது. (ச)

# செய்மதிக்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை; ஆனால் மஹிந்தவின் மகனுக்கு தொடர்பு

இலங்கையின் முதலாவது தொலைத்தொடர்பு செய்மதிக்கும் அரசுக்கும் தொடர்பில்லை என்று இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த செய்மதியை விண்வெளிக்கு ஏவுவதில் அரசு எவ்விதத்திலும் தொடர்புபடவில்லை. இந்த முயற்சி ஒரு தனியார் நிறுவனம் முன்னெடுத்ததாகும். ஆனால் அந்த நிறுவனம் இலங்கையிலுள்ள கம்பனிகளுக்கு செய்மதி சேவைகளை வழங்க அனுமதி கேட்டு தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ளது. ஆனால் நாம் இன்னும் இதற்கு அனுமதி வழங்கவில்லை.

தொலைத் தொடர்பு செய்திகளிலிருந்து தகவல்களை பெற்றுக்கொடுக்கும் இரண்டு நிலையங்கள் இலங்கையில் உள்ளன. ஆனால் இவற்றை பயன்படுத்துவதற்கான அனுமதி இந்தச் செய்மதி தொடர்பில் பெறப்படவில்லை- என்றார்.

இதுதொடர்பில் விஞ்ஞான விவகார சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் மகன் ரோஹிதவின் ஆதரவுடன் கூடிய இந்த தொலை தொடர்பாடல் செய்மதி ஒன்று விண்வெளிக்கு ஏவப்படவுள்ள போதும், இந்த விடயத்தில் அரசு தனது ஈடுபாட்டை விலக்கிக்கொண்டுள்ளது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பின் வீதியில் விசாலமான வரவேற்பறை, 3 அறைகள், சமையலறை, குளியலறை உட்பட சகல வசதியுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு - 0789138984 (25709)(6.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## புறொயிலர் விற்பனை

உள்ளூரில் வளர்க்கப்பட்ட 3 கிலோவுக்கு மேற்பட்ட புறொயிலர் கோழிகள் வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்.

**வீனஸ் பாம்**, கலாசாலை வீதி, முத்துத்தம்பி மகாவித்தியாலய வடக்கு வீதி, திருநெல்வேலி. (25708)(2.6.7)

**வீனஸ் பாம்**, விற்பனை நிலையம், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட இரசாயனவியல் துறையில் ஆய்வுகூட உதவியாளராகப் பணியாற்றும் க.சசிகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்

### தம்பு கந்தையா

அவர்கள் 22.11.2012 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விவசாய பீட நலன்புரி சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(25714)(2.6.7)

## மரண அறிவித்தல்கள்

### கபிரியேற்பிள்ளை செலஸ்ரீன் நீக்கிலஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேற்பிள்ளை செலஸ்ரீன் நீக்கிலஸ் (ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி) 19.11.2012 திங்கட்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - மாகிறேற் தம்பதியரின் அன்பு மருமகனும், கிறிஸ்ரீன் ஜெயமணியின் (டென்மார்க்) அன்புக் கணவரும், ஜோய் நீக்கிலஸ் (டென்மார்க்), றோய் நீக்கிலஸ் (ஜேர்மனி), ஜெகான் நீக்கிலஸ் (கனடா), றொஷான் நீக்கிலஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரீனா சத்தியதேவி, சாந்தி, கிறிஸ்ரீன், மரீனா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான, மேரியோசேப்பின் பேரின்பரெட்ணம், இராச மணிபிறிற்றோ, ஜெனறிக் மாசிலாமணி மற்றும் சவுரியம்மா சிவஞானம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மைத்துனரும், காலஞ் சென்றவர்களான ஷில்லிபற்றிக் மற்றும் இந்திராணி அருள்ரெட்ணம், புஸ்பராணி பாலேந்திரா, ஜெயராணி ரட்ணராஜா, சந்திராணி இராஜகுலேந்திரன் (லண்டன்), இராஜகுமார் சியாமளா ஆகியோரின் மைத்துனரும் மாமனும், மிலோ, டிலோ, நிக்கொலின், அன்ரியா, அன்ரியன், டனி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு ஆராதனை டென்மார்க்கில் நாளை (24.11.2012) சனிக்கிழமை நடைபெறும்.

HOLSTEBRO VEJ 55A,
7600, STRUER,
DENMARK,
T.P. 0045 97878 747

தகவல்:
குடும்பத்தினர்
12/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(25710) (45.6.7)

### பொன்னம்பலம் நாகலிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத பிரதம லிகிதர்)



பருத்தித்துறை, நாகலிங்க முதலியார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நாகலிங்கம் நேற்று (22.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சறோஜினி தேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், தவமணி, சிவலிங்கம் (ஓய்வுபெற்ற கட்டடத் திணைக்கள மேற்பார்வையாளர்), கெங்கேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நவமணி, தனலட்சுமி, ருக்குமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாதேவி (லண்டன்), Dr.ருக்மணிதேவி (லண்டன்), Dr.மயில்வாகனம் (லண்டன்) ரதிவதனா (லண்டன்), பாலகணேசன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான இராசையா, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2012) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும்ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**நா.மு.ஒழுங்கை, பருத்தித்துறை.** (சி/1934) (6.7) சி.பொன்னம்பலம் (பெறாமகன்)

## மரண அறிவித்தல்



### செல்லையா இராசதுரை

அரியாலை மேற்கு, நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசதுரை 20.11.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னன் - கதிரி தம்பதியரின் மருமகனும், இரத்தினகலா (கலா), மாலா, சிறீதரன் (பாபு), தயாகரன் (கோபு), ஜெலா, றஜிலா, ஸ்ரெலா (குட்டி), ஜஸ்மிலா (பவா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகசபாபதி, புஸ்பராசா (புஸ்பன்), றஞ்சினி, சங்கீதா, சுரேஸ்குமார், நித்தியசீலன், சுஜித், சுபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராசகிளி (பாமா), இராசரத்தினம் (சின்னராசு), இராசேஸ்வரி (இராசாத்தி) மற்றும் இராசலட்சுமி (ராசா), ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன். செல்லையா, வள்ளிப்பிள்ளை மற்றும் குஞ்சுப்பிள்ளை, அன்னம்மா, முத்துப்பிள்ளை (சரசு), சின்னத்தம்பி (முருகையா), சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.11.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கைதடி மேற்கு,கைதடி. (சி/1938) (2.6) **திருமதி சின்னப்பிள்ளை இராசதுரை (மனைவி)**

## துணுக்காய்,மல்லாவி,ஐயன்குளம், பொது சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி இறைச்சி கடைகளுக்கான

# குத்தகை கேள்வி அறிவித்தல் - 2013

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் | :- (அலுவலக நாள்களில் மு.ப8.30-பி.ப 3.00) |
| காலம் | :- 23.11.2012 -30.11.2012 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | :- 03.12.2012. முற்பகல் 10.00 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | :- 05.12.2012 |
| கேள்வி திறக்கும் இடம் | :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 16500.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 220000.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 16500.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 31350.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 2530550.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 232700.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10000.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயங்குளம் | 100000.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10000.00 | 1,500.00 | 500.00 |

பொதுசந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 22.000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 14.77550.00 | 1,500.00 | 500.00 |
| 03 | ஐயங்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயங்குளம் | 20.000.00 | 1,500.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்விப்படிவ கட்டணம்,கேள்வித்தொகை, மாதவாடகை,என்பவற்றிற்கு 12%பெறுமதி சேர் வரியும் 2%தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்
5. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
8. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

**வி.இராசரத்தினம் தவிசாளர்**
**பிரதேசசபை துணுக்காய்.** (சி/1930) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகூர முடியாமல் தவியாய்த் தவிக்கின்றனர்...

எகிப்திய அரசன் தூத்தன் கோமனின் கல்லறையையோ உடலையோ யாரும் தொந்தரவு செய்தால் அல்லது மாசுபடுத்தினால் முதலை, நைல் நதிக் குதிரை மற்றும் சிங்கத்துக்கு உணவாக்குவார்கள் என்று அவனது கல்லறை வாசலில் எழுதி பழங் கால எழுத்துக்களால் பொறிக்கப்பட் டுள்ளது. எழுதிப் போட்ட இந்த வாசகத் தையும் மீறி ஆராய்ச்சியாளர்கள் அந்தக் கல்லறைக்குள் நுழைந்து கிண்டிக் கிளறி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவு ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். இவை யாவும் சாபத் தால் ஏற்பட்ட மரணங்கள்தானா என்பது புரியாத புதிராக இருக்கிறது. முதலில் இறந்தவர் ஆராய்ச்சிக் குழுவினருக்கு நிதி உதவி செய்த லாட் கார்னல் போண். இவர் கொசு கடித்து இறந்ததாக நம்பப்படுகி றது. கன்னத்தில் கொசு கடித்த இடமும் தூத்தன் கோமனின் கன்னத்தில் இருந்த வடுவும் ஒரே மாதிரியாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதையடுத்து அவர் வளர்த்த நாய் காரணமின்றிச் சாகும் வரை குரைத்துவிட்டு உயிர்விட்டதாகக் கூறப்படுகிறது. ஆராய்ச்சிக் குழுவின் தலைவரான ஹாவட் காட்டன் வளர்த்த லக்கி போர்டு எனப்படும் பறவை நாகத்தால் விழுங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தை தூத்தன் கோமனின் தலையில் இருக்கும் கிரீடத்தின் நாகத்தோடு இணைத்துப் பேசுகிறார்கள். கல்லறை ஆய்வாளராக இருந்த ஆர்தர் மேஸ் எனப்படும் ஆராய்ச் சியாளர் சுயநினைவற்று சிறிது காலத்தில் இறந்தார். இப்படியாக எகிப்திய அரசனின் கல்லறையைக் கிளறியவர்களுக்கு நேர்ந்த கதி நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

ஈழத்தில் போராடி வீரமரணம் அடைந்த மாவீரர்களின் துயிலும் இடமாக மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்பட்டன. இந் தத் துயிலும் இல்லங்களில் பல ஆயிரம் மாவீரர்களின் கல்லறைகள் முளைத்தன. போர் முடிவடைந்ததும் அரசபடைகளால் அந்தக் கல்லறைகள் உருத் தெரியாத அளவில் சிதைக்கப்பட்டன. இதனால் நினைவுகூர முடியாமல் உறவினர்கள் தவிக்கின்றனர். அந்த இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. வெளிநாடுகளில் போரில் இறந்தவர்களின் கல்லறைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு இன்றும் நினைவுகூரப்படுகிறன. அங்கே போரில் இறந்தவர்களை நினைவுகூர, அந்தந்த நாடுகளின் அரசுகள் அனுமதி வழங்கியுள்ளன. எதிரியாக இருந்தால் என்ன போரில் ஈடுபட்டு இறந்தவன் என்ற ரீதியில் அவனுக்கு மரியாதை கொடுக்கின் றனர். ஆனால் எங்களுடைய மண்ணில் போரில் இறந்தவர்களை நினைவுகூர முடியாது உறவினர்கள் தவிக்கின்றனர்.

ஆர்ஜன்டீனாவின் மறைந்த தனது எஜமானின் கல்லறைக்கு அருகில் 6 வருடங்களாக நாயொன்று வாழ்ந்து வருகிறது. அந்த நாயின் பெயர் கெப்டன் ஆகும். ஆர்ஜன்டீனாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள வில்லகார்லொஸ் பாஸ் நகரில் வசித்து வந்த மிகுவெல் கஸ்மென் என்ற நபர் கடந்த 2006 ஆம் ஆண்டு உயிரிழந்தார். கஸ்மென் உயிரிழந்ததும் வளர்ப்பு நாயான கெப்டன் திடீரெனக் காணாமல் போயுள்ளது. கஸ்மென் இறந்து ஒரு வாரத்துக்குப் பின்னர் அவரது குடும்பத்தினர் அஞ்சலி செலுத்துவதற் காக கல்லறைக்குச் சென்றுள்ளனர். இதன்போது அவர்கள் வளர்த்த நாய் கல் லறைக்கு அருகில் கவலையுடன் படுத்தி ருப்பதைக் கண்டுள்ளனர். அன்று முதல் அந்த நாய் தனது எஜமானின் கல்லறை யிலிருந்து வெளியே வருவதைக் கண்டது மிகக் குறைவு என மிகுவெல் கஸ்மெனின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அவர்கள் கெப்டனைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வர முயற்சி செய்த போதும் அது வர மறுத்து விட்டது.

ஐந்து அறிவு ஜீவனான நாய் நினைவு கூருவதற்காக எஜமானின் கல்லறை அருகிலே தனது வாழ்நாளைக் கழித்து வருகிறது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனான அரச படையினர் போரில் இறந்தவர்களை உறவினர்கள் நினைவுகூர விடாது தடுக்கின்றனர். இது எந்த உலக நீதி? இளம் வயதில் இறந்த அவர்களின் கனவுகள் பற்றி உறவினர்களுக்குத்தான் தெரியும். அந்த வகையில் உறவினர்களின் மனதில் என்றைக்குமே போரில் இறந்த வர்களின் எண்ணங்கள் இழையோடிக் கொண்டிருக்கின்றன. அவர்களை விதைத்த இடத்தில் சென்று நினைவஞ் சலி செலுத்துவதற்கு அவர்களின் மனம் துடியாய் துடிக்கின்றது. இதனை அரச படைகள் உணர்வார்களா?

நேற்று முன்தினம் இரவு 7 மணியிருக் கும். இராசபாதையில் கோப்பாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். மாவீரர் நாள் தொடக்க நாளான அன்று இந்த வீதி மாவீரர்களின் நினைவில் வழிவிட்டது. ஆனால் இன்று அந்த இடத்தை இராணு வத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். கல்ல றைகள் சிதைக்கப்பட்டு பாரிய படை முகாம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

படை முகாம் வெளிச்சத்தில் முன்னைய நினைவுகள் தான் வருகிறது. தீபமாக ஒளிர்ந்து பிரகாசம் கொள்ளும் அந்தப் பிர தேசம். உறவினர்கள் கூடி நின்று நினைவு கூரும்போது விடுதலை கிடைத்ததான உணர்வில் எமக்கு ஓர் அதிகாரம் இருந்தது. மழையிலும் வானுயர்ந்து எரியும் தீபத்தில் எம்மை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்தி ருந்து தமிழ் கலாசாரப் பண்பாடு மேலோங்க பாதுகாப்புடன் இருந்தோம். ஒன்றாகக் கூடி கல்லறைக்குத் தீபம் ஏற்றும்போது கருமை கொண்ட கல்லறைகள் வெண்மை போன்று பிரகாசம் கொண்டதை இங்கே தான் பார்த்தோம்.

அன்றைய நினைவில் சென்றுகொண்டி ருந்தபோது பூச்சி ஒன்று எனது கண்ணுள் விழுந்துவிட்டது. ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி மோட்டார் சைக் கிள் கண்ணாடியைப் பார்த்து எனது கண் ணில் விழுந்த பூச்சியை எடுத்தேன். அப்பொழுது அந்த வழியில் வந்த இளைஞன் "பார்த்துப் போங்கோ அண்ணை" என்றான். என்னத்தைப் பார்க்கச் சொல்கிறான் என்று ஒன்றுமே புரியாத நான் "பார்க்காமல் போவனோ?" என்றேன். அவனோ "பார்க்காமல் போனதால் தானே இந்த விளைவு ஏற்பட்டது" என்றான். "எந்த விளைவு?" என்று அவனைக் கேட்டேன். அவனோ "நீங்கள் எந்த விளை வைச் சொல்லுகிறியள்?" என்றான். நானோ "மாவீரர் நாளைக் கொண்டாடாமல் விட்ட விளைவை" என்றேன். அதற்கு அவனோ சிறிது நேரம் யோசித்து தலையை ஆட்டிவிட்டு "அதுதான்" என்று சொல்லி

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

விட்டு என்னைத் தாண்டி நகர்ந்து சென்றான்.

மாவீரர் துயிலும் இல்லத்தைப் பார்க்கிறேன். இன்றும் பிரகாசத்துடன் இருக்கிறது. ஆனால் அங்கு நாங்கள் இல்லை. ஒரு நிமிடம் இந்த இடத்தில் அன்றைய நாள் நிற்கமுடியுமா? மாவீரர் துயிலும் இல்லத்திலெல்லோ நிற்போம்? இழந்தது மாவீரர்களை மட்டுமல்ல. தமிழர்களுடைய உரிமைகள், உணர்வுகள், பண்பாடுகளை. மாவீரர் நினைவு இல்லாது போனால் இதனை மீட்க முடியாது போய் விடும். அதனால் தமிழர் மனங்களில் குடி கொண்டிருக்கும் மாவீரர்களின் உருவங்களுக்கு தீபம் ஏற்றுவோம். எம்மை நாமே ஆள்வோம் என்று உறுதிபூணுவோம்.

அந்த இடத்தைவிட்டு நகர்ந்து கொண்டி ருக்கிறேன் மாவீரர் துயிலும் இல்லத் தைப் பார்த்தபடியே. தூரத் தூரப் போவதாக இருந்தாலும் எனது மனதில் குடிகொண் டிருக்கும் நினைவுகள் ஒருபோதும் தூரப் போக முடியாது.

## 22 ஆம் ஆண்டு நினைவுச் சங்கமம்

**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**

(சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், யாழ்.மாவட்ட சி.க.கூ.ச.சமாச முன்னாள் தலைவரும்)



அமரரின் இருபத்திரண்டாம் ஆண்டு நினைவு தினமாகிய இன்று அன்னாரின் சேவைகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

மண்மகிழ: 06.10.1927
கண் நெகிழ: 23.11.1990

கோப்பாய் பிரதேச சபை.

## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.10.1927
மறைவு
23.11.1990

அமரர்
**சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க சமாசம்)

சமாசத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 22 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

இல.637, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(4/1900)(2.6.7)

## வேலையாள் தேவை

கோழிப்பண்ணையில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலையாள் (ஆண்) தேவை. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்.
தொடர்பு
**வீனஸ் பாம்**
கலாசாலை வீதி,
முத்துத்தம்பி
மகாவித்தியாலய வடக்கு
வீதி, திருநெல்வேலி.
(29706)(2.6.7)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
12.11.1912
திருமதி
மறைவு
14.10.2012

**நாகலிங்கம் அன்னலக்சுமி**

100 வயது வாழ்ந்து கடந்த 14/10/2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய எமது அன்னையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23/11/2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11,மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
(25712)(6.7)

வாழ்க மதுரம் வளர்க அதன் பணி

இன்று (23-11-2012) டச்சு வீதி, இருபாலையில்
புதிய கட்டடத்தில் கால்பதிக்கும்

**மதுரம்**

சீரனிச் செந்தமிழ்ச் சைவப்புலவர் வீடாய்
செழுங்கலைக் கல்வியும் வளர்க்குமிடமாய்
பாரணிப் பைந்தமிழ் மாணவர் பயன் சுவைக்க
பயன்தரும் கற்பக விருட்சமாய் ஒளிபரப்ப
பேரறிவாசான்களுடன் வித்தியா தானமது
பொங்கு தே மதுரமாய்ப் பாய்ந்திட
கற்பகன் கிருபையை வேண்டி வாழ்த்தி நிற்கும்!



கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

வாழ்த்துவோர்:-
வெள்ளியங்கிரிநாதன் கோகுலன்

## மரண அறிவித்தல்



**நடராஜா பாலசுப்பிரமணியம் (மணியம்)**

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், தற்போது 16/24, 8ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி, வேப்பங் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (21.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (பொலிஸ் நடராஜா) -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உருத்திரசிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதிய ரின் அன்பு மருமகனும், மஞ்சுளா (ராஜி- ஆசிரியர் -வ/ இராஜேந்திரம்குளம் அ.த.க பாடசாலை), பிரகலாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதாசன் (ஆசிரியர் - வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கிசாத், நிருக்ஷி ஆகியோரின் அன்பு தாத்தாவும், விக்கினேஸ்வரமூர்த்தி, வடிவாம்பிகை, பூரணசந்திரன், சச்சிதானந்த சிவம், ஞானாம்பிகை, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16/24, 8 ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி, வேப்பங்குளத்தில் (25.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மன்னார் வீதி, 16/24, 8ஆம் ஒழுங்கை,
வவுனியா, தொ.பே. 024 222 5698
(24322)(45.6.7)
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100,000 நட்சத்திரங்களை 3டியில் காணும் வாய்ப்பு

அண்ட வெளிக்கு பயணித்து சூரியக்குடும்பத்துக்கு அப்பாலிருக்கும் 100,000 நட்சத்திரங்களைப் பார்வையிட அழைத்துச் செல்கின்றது கூகிளின் குரோம் உலாவி.

இவற்றை வீட்டிலிருந்தபடியே இணைய வசதியுடன் பார்க்க நீங்களும் சாத்தியமாக்கலாம். Chrome experiment மூலம் இணைய உலாவியில் அதிகமான புதிய அனுபவங்களை உங்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கும் கூகுளே இதையும் செயற்படுத்தியுள்ளது.

3டி தொழில்நுட்பத்தில் Milky Way இற்குச் சென்றுவர குரோம் உலாவியை நீங்கள் நிறுவியிருக்க வேண்டும். ஒவ்வொரு நட்சத்திர குடும்பமும் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது என்பதை விஷுவல் மூலம் குறிப்பிடுவது சிறப்பாகவுள்ளது. இணையத்தளமுகவரி http://workshop.-chromeexperiments.com/stars/



# ஜிமெயில் கணக்கை ஹேக்கர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு




எமது மின்னஞ்சல் கணக்கில் நாம் பல தகவல்களை வைத்திருப்போம்.

இந்தத் தகவல்களை யாரும் ஹேக் செய்யாமல் இருப்பதற்கு, பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் Alternative Log In id கொடுத்து வைக்கலாம். இதற்கு முதலில் உங்கள் ஜிமெயில் கணக்கில் நுழைந்து Account என்பதை கிளிக் செய்யுங்கள். வரும் பக்கத்தில் Security என்பதை கிளிக் செய்து, பின்னர் Account Recover Options என்பதை கிளிக் செய்யுங்கள்.

இப்போது வரும் பக்கத்தில் Alternate email address என்ற பகுதியில் தான், உங்களது மற்றொரு மின்னஞ்சல் கணக்கைக் கொடுக்க வேண்டும். (குறிப்பு - ஜிமெயில் கணக்கு தவிர மற்றவை) அதன் பின் Save என்பதை கிளிக் செய்து கொள்ளுங்கள்.

அடுத்து நீங்கள் கொடுத்த Alternative Email முகவரி கணக்கில் நுழைந்து, கூகுள் அனுப்பி உள்ள Email Verification மின்னஞ்சலை Accept செய்ய வேண்டும். இதை கிளிக் செய்த உடன் 'Associated Email Address Verified' என்று வந்துவிடும்.

இனி நீங்கள் உங்கள் ஜிமெயில் கணக்கில் நுழைய உங்களின் Alternative Email Address மற்றும் உங்கள் ஜிமெயில் கடவுச்சொல் கொடுத்து நுழையலாம்.

# Web Application-ஐ மேம்படுத்தி வெளியிட்டது Dropbox




இணையம் மூலமான சேமிப்பு வசதியை வழங்கிவரும் பிரபலமான நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் Drop-box ஆனது தனது பாவனையாளர்களின் செயற்பாடுகளை இலகுவாக்கும் நோக்கில் புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக மேப்படுத்தி தனது Web Application - ஐ வெளியிட்டுள்ளது.

JavaScript மற்றும் HTML ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட Dropbox Chooser எனப்படும் இப்புதிய வசதி மூலம் Dropbox தளத்தில் தரவேற்றப்பட்டுள்ளது.

# தரவிறக்கத்தில் சாதனை படைத்த விண்டோஸ் 8

மைக்ரோசொப்டின் விண்டோஸ் 8 வெளியான சில நாள்களிலேயே 40 லட்சம் Windows 8 License Download செய்யப்பட்டதாக மைக்ரோ சொப்ட் தலைமை அதிகாரி ஸ்டீவ் பால்மர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், இந்த எண்ணிக்கை தனி நபர்கள் தரவிறக்கம் செய்த உரிமங்களின் எண்ணிக்கை தான். நிறுவனங்கள் பல கோடிக்கணக்கான உரிமங்களைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஓராண்டுக்குள் 40 கோடி புதிய சாதனங்கள் விண்டோஸ் 8 சிஸ்டத்தில் இயங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே போன்று விண்டோஸ் 7, 2009ஆம் ஆண்டில் வெளியான பின்னர் 70 கோடி பதிப்புகள் விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

# Social Plus பேஸ்புக் அறிமுகப்படுத்தும் புத்தம் புதிய வசதி




பல்வேறு சமூக வலைத்தளங்களுக்கு மத்தியில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் பேஸ்புக் இணையத்தளமானது தனது பயனாளர்களுக்காக Social Plus எனும் புத்தம் புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதாவது Social Plus எனும் நீட்சியினை நிறுவிக்கொள்வதன் மூலம் பேஸ்புக் தளத்தின் தோற்ற அம்சங்களை விரும்பியவாறு மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

Google Chrome, Mozilla Firefox மற்றும் Safari உலாவிகளுக்காக வெளியிடப்பட்டுள்ள இந்நீட்சியின் உதவியுடன் அசைக்கக் கூடிய Chatting Window, Album slideshow, Picture preview, Dislike Button போன்ற பல்வேறு வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தவிர Profile Theme - ஐ மாற்றியமைக்கக் கூடிய வசதியும் காணப்படுகின்றது. இதற்காக 500 வரையான தீம்களும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இணையத்தள முகவரி http://www.socialplus.net

# கூகுள் குரோம் உலாவியிலேயே இசையமைப்பதற்கு



உலகின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள நண்பர்களுடன் இணைந்து கணினி மற்றும் இணைய வசதியுடன் இசையமைத்து மகிழலாம்.

ஆனால் இவற்றுக்கு எந்த இசைக்கருவியோ, மென்பொருள்களோ தேவையில்லை.

கூகுள் குரோம் உலாவி மட்டும் இருந்தால் போதும்.

குறித்த இணையத்திற்கு சென்று, நீங்கள் விரும்பும் இசைக்கருவியைத் தெரிவு செய்யவும்.

19 இசைக்கருவிகளை 8 இற்கும்மேற்பட்ட நண்பர்களுடன் இணைந்து வாசிக்கலாம்.

http://www.jamwithchrome.com

# Dual Sim வசதியுடன் அறிமுகமாகின்றது Galaxy Note II கைபேசி

கைபேசி உற்பத்தியில் புரட்சி செய்து வரும் Samsung நிறுவனமானது தற்போது Dual Sim வசதியுடன் கூடிய Galaxy Note II கைபேசிகளை அறிமுகப்படுத்தத் தயாராகின்றது.

நாளை சனிக்கிழமை முதன் முறையாக சீனாவில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இந்தக் கைப்பேசிகளில் Dual Sim வசதி புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் ஒன்று GSM வலையமைப்பைக் கொண்டதாகவும், மற்றையது CDMA வலையமைப்பைக் கொண்டதாகவும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுதல் விசேட அம்சமாகும்.

இவை தவிர 1280 து 720 Pixels Resolution உடையதும், 5.5 அங்குல அளவுடையதுமான Super AMOLED Multi&Touch தொழில்நுட்பத்தில் அமைந்த தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் 1.6 GHz வேகத்தில் செயலாற்றவல்ல Processor - இனையும் கொண்டுள்ளது.

மேலும் 8 Mexapixels உடைய பிரதான கமெரா மற்றும் 1.9 Mexapixels கொண்ட துணைக் கமரா ஆகியவற்றையும் கொண்டுள்ளன. இவை 16GB, 32GB மற்றும் 64GB சேமிப்புக் கொள்ளவுடைய பதிப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# உலகளாவிய ரீதியில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் வீழ்ச்சி

## ஐ.நா அறிக்கையில் தெரிவிப்பு

உலகின் பல்வேறு நாடுகளில் எய்ட்ஸ் நோயின் பாதிப்பு குறைந்து வருவதாக ஐ.நா .வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளைப் பாதிக்கும் நோயான எய்ட்ஸின் பாதிப்பு குறைந்து விட்டது. குறிப்பாக மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகளிலும் எய்ட்ஸ் நோயின் தாக்கம் குறைந்து விட்டது.

முக்கியமாக மலாவி (73 வீதம்), போஸ்வானா (71 வீதம்), நமீ பியா (68 வீதம்), ஸாம்பியா (58 வீதம்), சிம்பாவே (50 வீதம்), ஸ்வாஸிலாந்து (41 வீதம்), தென்னாபிரிக்கா (41 வீதம்) போன்ற நாடுகளில் எச்.ஐ.வி. நோய்த் தொற்று பாராட்டத்தக்க அளவில் குறைந்து விட்டது.

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகளைச் சாப்பிடும் நபர்களின் எண்ணிக்கை 63 வீதமாக உள்ளது-என்றுள்ளது. (வ)

# எழிலூருக்கு விளையாட்டு மைதானம்



கொழும்புத்துறை, நவ.23

கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு புதிய விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

துண்டிக்குடியேற்றத் திட்டத்தில் அமைந்துள்ள வேளாங்கன்னி மாதா ஆலயத்துக்கு அண்மையில் விளையாட்டு மைதானத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்த பகுதி கனரக வாகனத்தின் மூலம் சீர் செய்யப்பட்டு வருகின்றது.

எழிலூர் சனசமூக நிலைய நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை அடுத்து யாழ்.மாநகர சபை இவ்விடத்தை சீர் செய்து விளையாட்டுக் கழகத்துக்கு வழங்க முன்வந்துள்ளதாக நிலையத் தலைவர் எவ்.எக்ஸ். மயூரன் தெரிவித்தார். (ம-135)

# மனிதனாக வாழ

சகலபிறவியிலும் உயர்ந்த பிறவி இந்த மானிடப் பிறவி, ஏனெனில் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு உணர்வுகளைப் பரிமாறுவதற்கு பேசுகின்ற வாயை உனக்கு மட்டும்தான் கடவுள் கொடுத்திருக்கின்றார். அதை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டியது உன்னுடைய கடமை. மற்றையவை வாயில்லா ஜீவன்கள். மனித வாழ்வில் நீதி, நியாயம், நேர்மை, உண்மை, வாக்கு என்று எத்தனையோ இருக்கின்றது. அவற்றை நீ வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறாயா? சிந்தித்துப்பார்!

மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். 'குறிக்கோள் இல்லாது கெட்டேனே!' என்கிறார் அப்பரடிகள். ஆதலால் நமக்கென்று ஒரு கொள்கையும் குறிக்கோளையும் வைத்துக் கொண்டு வாழ்க்கையை நேரிய சீரிய பாதையில் இட்டுச் செல்லவேண்டும்.

முக்கியமாக எக்காரணம் கொண்டும் மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படக்கூடாது. நேர்மையினின்றும் இம்மியளவும் பிறழக் கூடாது. எவ்வளவுதான் துன்பம் வந்தாலும் எப்படித்தான் துயரம் வந்தாலும் நீதியை விட்டு விலகவே கூடாது; மனக்கட்டுப்பாடு மிகவும் முக்கியம்.

நன்றி: ஞானச்சுடர்

## புன்னாலைக்கட்டுவன் துர்க்கா ச.ச.நிலைய அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,நவ.23

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலைய அபிவிருத்தித் திட்டத்துக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் தனக்கு ஒதுக்கிய நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை மேம்பாடடையச் செய்யும் முகமாக சனசமூக நிலைய நிர்வாகிகள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்தநிதி வழங்கப்பட்டுள்ளது. (3-86)

## யாழ்.மாவட்டத்தில் 11ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு முருங்கைக் கன்றுகள்

வடமராட்சி, நவ.23

யாழ்.மாவட்டத்தில் 11 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு நல்லின முருங்கை மரக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், இந்த முருங்கை மரக்கன்றுகளை யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு வழங்கியிருந்தது.

பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 11 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு இந்த முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (3-8)

# லஞ்சம் வழங்காத இலங்கையரை கத்தியால் குத்திய குண்டர்கள்

லஞ்சம் கொடுக்க மறுத்த இலங்கைத் தமிழரைக் கத்தியால் குத்தியதுடன், அவர் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற முடியாமல் தடுத்து கத்தியால் மீண்டும் குத்தி விரட்டிய குண்டர்கள் இருவரைத்தமிழக ரயில்வே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இலங்கையரான பிரேம் திலகன் என்பவர் சென்னை மகாகவி பாரதி நகரில் வசித்துவருகின்றார். அவரது மகன் பிரியன் (வயது 42). அவர் வாடகைக்கு வான் செலுத்தி உழைப்பு நடத்துகிறார். பெரும்பாலும் மத்திய ரயில் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் ஓட்டோ செலுத்துவார்.

கடந்த 16 ஆம் திகதி மாலை மத்திய ரயில் நிலைய வாசலில் ஓட்டோவை நிறுத்தி சவாரிக்காகக் காத்திருந்தார். அப்போது புளியந்தோப்பை சேர்ந்த ராஜா (வயது 32), சம்பத்(வயது30), வினோத் (வயது25) உட்பட 5 பேர் அங்கு சென்றனர்.

இதில் ராஜா, புளியந் தோப்புப் பகுதியில் கஞ்சா வியாபாரியாக இருந்து கொல்லப்பட்ட ரமணியின் தம்பி. அவர் மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் உள்ளன. இவர்கள், மத்திய ரயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் ஓட்டோ செலுத்த எங்களுக்கு மாதம் 3000 ரூபா லஞ்சம் தர வேண் டும் என்று பிரியனை மிரட்டியுள்ளனர். அதற்கு அவர், நானே வாடகைக்கு ஓட்டோ செலுத்திப் பிழைக்கிறேன். ஒழுங்காகச் சவாரி கிடைப்பதில்லை. இதில் உங்களுக்கு லஞ்சம் எங்கே தருவது. என்னை விட்டுவிடுங்கள் என்று மன்றாடியுள்ளார்.

இதனால் கோபமடைந்த 5 பேரும், பிரியன் சட்டைப் பையில் இருந்த 500 ரூபாயை பிடுங்கிக் கொண்டு, மீதிப் பணத்தை நாளைக்குள் கொடுத்து விடவேண்டும் என்று மிரட்டியுள்ளனர். உடனே பிரியன் பொலிஸில் முறைப்பாடு கொடுப்பேன் என்று கூறியுள்ளார். இதனால் கோபமான 5 பேரும் அவரை விரட்டினர். மத்திய ரயில் வளாகத்துக்கு ஓடிய பிரியனை கத்தியால் குத்தியுள்ளனர்.

வயிற்றில் காயம் அடைந்த பிரியன், உடனடியாக அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கும் சென்ற குண்டர்கள் இங்கிருந்து ஓடிவிடு என்று கூறி அவரது விலா மற்றும் முதுகில் கத்தியால் கிழித்துள்ளனர்.

இதையடுத்து அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். தொடர் சிகிச்சை பெற வேண்டியிருந்ததால், மத்திய ரயில்வே பொலிஸில் 18 ஆம் திகதி முறைப்பாடு செய்தார். பொலிஸ் அதிகாரி அவரை உடனடியாக அரசு பொது வைத்தியசாலையில் சேர்த்தார். இதையடுத்து லஞ்சம் கேட்டு அவரைக் கொல்ல முயன்ற ராஜா, சம்பத் ஆகியோரைக் கடந்த திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்தனர். தலை மறைவான வினோத் உள்ளிட்ட 3 பேரைத் தேடி வருகின்றனர். (வ)

# கருவிலிருக்கும் சிசு கொட்டாவி விடுவதை 'ஸ்கான்' மூலம் வெளியிட்ட ஆய்வாளர்கள்

## 4டி ஸ்கானிங் மூலம் பிரிட்டனில் சாதனை

லண்டன், நவ. 23

கருவில் இருக்கும் சிசுவும் கூட கொட்டாவி விடும். இதனைக் காட்டும் படத்தை வெளியிட்டு மலைக்க வைத்துள்ளனர் பிரிட்டன் ஆய்வாளர்கள்.

சிசுவாக நாம் கருவில் இருக்கும் போது என்ன வெல்லாம் செய்வோம் என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் தற்போது கருவில் இருக்கும் சிசுவின் செயல்களை அவதானிக்க முடிகிறது என்கிறனர் ஆய்வாளர்கள்.

பிரிட்டனின் துர்ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் சுமார் 12 புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். அதில் கருவில் இருக்கும் சிசுவின் நகர்வுகள் குறித்த அட்டகாசமான விடயங்கள் சிறப்பாக வந்துள்ளன.



இதற்காக 15 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 4டி அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் செய்து பார்க்கப்பட்டது. கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு கட்டமாக மொத்தம் 4 முறை ஸ்கேன் செய்து பார்த்தனர். கடைசி ஸ்கேனிங் 36 ஆவது வாரத்தில் எடுக்கப்பட்டது.

குறித்த 15 பேருக்கும் எட்டு பெண் குழந்தைகள் மற்றும் 7ஆண் குழந்தைகள் பிறந்தன. இதில் ஒரு படத்தில் ஒரு சிசு கொட்டாவி விடுவது இடம் பெற்றுள்ளது. இதுகுறித்து ஆய்வாளர்கள் கூறுகையில், கருவில் இருக்கும் சிசுவானது, ஒரு மணி நேரத்துக்கு நான்கு முறை கொட்டாவி விடுவதாக தெரிவித்துள்ளனர். இவ்வாறு கொட்டாவி விடுவதன் மூலம் குழந்தையின் தாடைப் பகுதி நன்கு விரிய வாய்ப்பு கிடைப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சாதாரண 2டி ஸ்கேனிங் படத்தின் மூலம் துல்லியமாக இதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் 4டி ஸ்கானிங் மூலம் எடுத்த படங்களை பின்னர் காணொலியில் பதிவு செய்து பார்க்கும் போது [illegible] தெரிகின்றன இந்தக்கொட்டாவி விடும் காட்சிகள்.

குறித்த காணொலிக் காட்சிகளை ஒவ்வொரு பிரேமாக அலசி ஆராய்ந்து முடிவுகளை வெளியிட்டுள்ளனர் ஆய்வாளர்கள். குழந்தையின் வாய் அசைவைத்தான் முக்கியமாக ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர்.

குழந்தை கொட்டாவி விடுவது என்பது மூளை வளர்ச்சியைக் குறிப்பதாகவும் இவர்கள் கூறுகின்றனர். மூளையை சுறுசுறுப்பாக்கும் முயற்சியாகவும் இதை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும் சில ஆய்வாளர்கள் கூறுகையில், இதை கொட்டாவி என்று எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக, சிசுக்கள் தங்களது வாயைத் திறந்து மூடுவதாக எடுத்துக் கொள்ளலாம் என்கின்றனர்.

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் யூ. என். எச். சி. ஆர் கொடுப்பனவை பெறத்தவறியவர்கள் பெற்றுக்கொள்க

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் இதுவரை யூ. என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெறாதவர்களுக்கான கொடுப்பனவு இன்று வழங்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படுமென உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன் அறிவித்துள்ளார். இன்றைய தினம் இந்தப் பணத்தைப் பெறத்தவறுபவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது, புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், நண்பர், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வந்த அனைத்துக் குடும்பங்களும் தற்பொழுது 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மீள் குடியமர்த்தப்பட்ட பெரும்பாலான குடும்பங்களுக்கு யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. வழங்கப்படாதவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கான ஒழுங்குகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப்பணத்தைப் பெறாத ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 229 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் இன்று செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இப்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் அதற்குரிய ஆவணங்களுடன் கிராம உத்தியோகத்தரைச் சந்தித்து பெயர்ப்பட்டியலை உறுதிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் கிண்ணம் மாசேரி பாரதிக்கு



வரணி, நவ.23

தீபாவளி தினத்தை முன்னிட்டு மாசேரி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்திய 12 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை பாரதி விளையாட்டுக்கழகம் தனதாக்கிக்கொண்டது.

இந்த இறுதிப் போட்டியில் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இடைக்குறிச்சி இளைஞர் விளையாட்டுக்கழகம் களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இடைக்குறிச்சி இளைஞர் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய பாரதி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இடைக்குறிச்சி இளைஞர் கழகம் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இதனால் பாரதி விளையாட்டுக்கழகம் 24 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. பாரதி விளையாட்டுக்கழக் வீரர் க.ரவி சங்கசர் 29 ஓட்டங்களைப் பெற்றதுடன், எதிரணியின் ஒரு இலக்கையும் சாய்த்ததால் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ங-122)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.23

யாழ். உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**பி.ப 3.45 மணி**

வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்.

* * *

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட 11 பேர் பங்குபற்றும் கிரிகெட் சுற்றுப்போட்டி தொடர் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பி.ப 4 மணி**

பிரதம செயலர் கொத்தணி அணி எதிர் சுகாதார அமைச்சு அணி. (ங-23)

# நீச்சல் பயிற்சி முகாம் இன்று

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளுக்கு இடையிலான இலவச நீச்சல் பயிற்சி முகாம் இன்று மாலை 3 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் கே.எழில்வேந்தன் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த இலவச பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் இடம்பெறும் என்று கல்லூரி அதிபர் வே.எழில்வேந்தன் தெரிவித்துள்ளார். (ங-23)

தேசிய அணித் தெரிவுக்கான உதைபந்து

# யாழ்., மன்னார் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து நடத்தும் தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான 21 வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கொழும்பில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்ட அணிகள் முதல் சுற்றில் வெற்றி பெற்று, இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

களனி உதைபந்தாட்ட லீக் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்.மாவட்ட 21 வயதுப் பிரிவுத் தெரிவு அணியை எதிர்த்து அம்பாறை மாவட்ட 21 வயதுப் பிரிவுத் தெரிவு அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. யாழ்.அணியின் நிதர்சன் 'ஹட்ரிக்' கோல்களை அடித்து அணிக்கு பலம் சேர்த்தார். இதனால் 4:0 என்ற கோல்கணக்கில் அம்பாறை அணியை வெற்றிகொண்டு இரண்டாம் சுற்றுக்கு யாழ்.மாவட்ட அணி தகுதிபெற்றது.

இதேவேளை கொழும்பு ரொறிங்டன் மைதானத்தில் இடம்பெற்ற இன்னொரு ஆட்டத்தில் மன்னார் மாவட்ட 21 வயதுப்பிரிவுத் தெரிவு அணியை எதிர்த்து கம்பஹா மாவட்ட 21 வயதுத் தெரிவு அணி மோதிக்கொண்டது.

இதில் மன்னார் மாவட்ட அணி ஆரம்பத்திலிருந்தே களத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அடுத்தடுத்து கோல்களை அடித்து கம்பஹா அணிக்கு மன்னார் வீரர்கள் அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்கள். பதிலுக்குக் கோல் அடிக்க கம்பஹா அணி எடுத்த முயற்சிகள் மன்னார் வீரர்களிடம் பலிக்கவில்லை.

இதனால் 4:0 என்ற கோல் கணக்கில் கம்பஹா மாவட்ட அணியை வீழ்த்தி, மன்னார் மாவட்ட அணி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது.

கொழும்பு சிற்றி லீக் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட 21 வயதுத் தெரிவு அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட 21 வயதுத் தெரிவு அணி களமிறங்கியது. இரு அணிகளும் சமபலத்தோடு மோதிக்கொண்டதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. இதனால் இரு அணிகளினதும் பின் கள வீரர்கள் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிரணியின் கோல் பெறும் கனவுகளை தகர்த்தனர்.

இதனால் ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை. எனவே ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆயினும் ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் குருநாகல் மாவட்ட 21 வயதுத் தெரிவு அணி 4:1 என்ற கோல்கணக்கில் கிளிநொச்சி மாவட்ட 21 வயதுப் பிரிவு தெரிவு அணியை வெற்றிகொண்டது. இதனால் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் தகுதியை கிளிநொச்சி அணி இழந்து, சுற்றுத் தொடரில் இருந்து வெளியேறியது. (ங-23)

# யாழ்.இந்துவின் அபார பந்து வீச்சில் நிலைகுலைந்தது மானிப்பாய் இந்து



யாழ்ப்பாணம்,நவ.23

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ். இந்து, மானிப்பாய் இந்துவை வெற்றி கொண்டது.

நேற்றுமுன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 23.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங்களையே பெற்றது .

இதில் லக்ஸ்சானந் 19 ஓட்டங்களையும், திவாகரன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் சங்கீதன் 3 இலக்குகளையும், கலைச்செல்வன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

அதனையடுத்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியை வேட்டையாடினர் மானிப்பாய் இந்துவின் பந்துவீச்சாளர்கள். இதனால் நிலை குலைந்து போன யாழ்.இந்து அணி 24 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும்இழந்து 50 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

யாழ்.இந்து அணி சார்பில் விதுசன் 9 ஓட்டங்களையும், சங்கீதன் 6 ஓட்டங்களையும் பெற்றனர். இந்துவின் எந்தவொரு வீரரும் முதல் இன்னிங்ஸில் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற முடியவில்லை.

பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் திவாகரன் 6 இலக்குகளையும், சஜீதன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை பழிவாங்கும் விதமாக ஆக்ரோஷமாக பந்து வீசினர் யாழ்.இந்து அணியினர். இதனால் 20 .4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்ஸ்சானந் 17 ஓட்டங்களையும், அலன்ராஜ் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் கலைச் செல்வன் 5 இலக்குகளையும், சிறீராம் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஏற்கனவே முதல் இன்னிங்ஸில் 5 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த யாழ். இந்துக் கல்லூரிக்கு வெற்றியிலக்காக 57 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் முதல் இன்னிங்ஸில் விட்ட தவறுகளை சீர் செய்து, நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 20.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று, வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் விதுஷன் 12 ஓட்டங்களையும், கிரிதகணேஸ் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் தனது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பில் திவாகரன் 3 இலக்குகளையும், கஜீதரன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ங-23)

# வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான கலந்துரையாடல் நாளை



யாழ்ப்பாணம்,நவ.23


வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் தரம் 'ஏ', தரம் 'பி', தரம் 'சி' சித்தி பெற்றவர்களுக்கு வலைப்பந்தாட்டம் தொடர்பான புதிய விதிமுறைகள் பற்றிய விளக்க நிகழ்வும், 2013 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் வலைப்பந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பான கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொள்ளவரும் வலைப்பந்தாட்ட நடுவர்கள் முத்திரை அளவுடைய தமது புகைப்படத்தை கொண்டுவருமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் ஜ.சசிக்குமார் தெரிவித்துள்ளார். (ங-422-23)



கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்டக் கராத்தேப் போட்டியில் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண்களுக்கான மண்ணிறப் பட்டிக்கான சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்ற நிரோசன், 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தேப் போட்டியில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட நிக்சன் ஆகியோருடன் குறித்த போட்டியில் பங்குபற்றிய ஏனைய வீரர்களான மதுரன், சுகேந்திரன் ஆகியோரும் சிறுவர் கிராம இயக்குநர் அச்சுதன், பொறுப்பாசிரியர் உமேஸ் மற்றும் பயிற்றுநரும். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டோனிக்கு வக்காளத்து வாங்கும் சித்து

சுழல் ஆடுகளம் தொடர்பாக டோனிக்கு எதிர்ப்பு தெரிவித்த ஸ்டீவ் வோவிற்கு, இந்திய அணியின் முன்னாள் வீரர் நவ்ஜோத் சிங் சித்து பதிலடி கொடுத்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் குறித்து இந்திய அணி தலைவர் டோனி கூறுகையில், அஹமதாபாத் ஆடுகளம் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு ஏற்ற வகையில் அமையவில்லை. எதிர்வரும் போட்டியில் முதல் நாளில் இருந்தே சுழலுக்கு ஒத்துழைக்கும் வகையில் ஆடுகளம் அமைப்பார்கள் என்று நம்புகிறேன், என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் ஸ்டீவ் வோவ் கூறுகையில், டோனியின் கருத்து கிரிக்கெட்டுக்கு எதிர்மறையான விளைவை தரும். தங்களது வசதிக்கேற்ப ஆடுகளத்தை அமைக்குமாறு கேட்பது சரியல்ல, என்றார்.

இதற்கு பதிலடி கொடுத்து, நவ்ஜோத் சிங் சித்து கூறியதாவது:


இரு அணிகளும் ஒரே மாதிரியான ஆடுகளத்தில் தான் விளையாடுகின்றன. ஸ்டீவ் வோவ் கூறுவதைப் பார்த்தால், இங்கிலாந்து அணிக்கு டெஸ்ட் தொடரை பரிசாக தரச் சொல்வது போல உள்ளது. இந்திய அணி, ஆஸ்திரேலியா செல்லும் போது, வேகப்பந்து வீச்சாளர்களின் சொர்க்கபுரி என்றழைக்கப்படும், பேர்த் ஆடுகளத்தை சுழலுக்கு சாதகமாக மாற்றித் தருமாறு சொல்வாரா.

கடந்த ஆண்டு இந்திய அணி, இங்கிலாந்து சென்ற போது, சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தை அமைத்து தரவில்லையே. இந்தத் தொடரில் நாம் வெற்றி பெற வேண்டும். இதற்காக இங்கிலாந்துக்கு சாதகமான வசதிகள் எதுவும் அமைத்துக் கொடுக்கக் கூடாது. ஏனெனில், இந்தத் தொடர் வெற்றி மிகவும் முக்கியம்.

பந்துகளை 'ஸ்விங்' செய்வதும், சுழற்பந்து வீச்சும் தான் நமது பலம் என்று, முதலில் இருந்தே கூறிவருகிறேன். இதனால் அணியில் கூடுதல் சுழல் பந்து வீச்சாளர்கள் இடம் பெற வேண்டும். மும்பை டெஸ்டில் ஒருவேளை ஹர்பஜன் சிங் இடம் பெற்றால், அதுவே இங்கிலாந்து வீரர்களை மனரீதியாக சோர்வடையச் செய்துவிடும் - என்றார்.

(5)

# ஆஸி. அதிரடி



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றைய நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி பலமான நிலையில் காணப்படுகிறது.

அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முதலாவது இலக்குக்காக 43 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக இலக்குகளை இழந்த ஆஸ்திரேலிய அணி 3 இலக்குளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

ஆனால் 4 ஆவது இலக்குக்காக இணை சேர்ந்த டேவிட் வோணர் மற்றும் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆகியோர் அதிரடியாக ஆடினர். இருவரும் 24.2 பந்துப் பரிமாற்றங்களில் 155 ஓட்டங்களைக் குவித்தனர்.

அதன் பின்னர் மைக்கல் கிளார்க், மைக்கல் ஹசி இருவரும் 5 ஆவது இலக்குக்காக 48.1 பந்துப் பரிமாற்றங்களில் 272 ஓட்டங்களைக் குவித்து ஆஸ்திரேலிய அணியின் ஆதிக்கத்தை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 243 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 224 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 112 பந்துகளில் 119 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 137 பந்துகளில் 103 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் க்லிஸ், மோர்னி மோர்க்கல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஸ்ரெய்ன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

(5)

4 ஆவது இலக்குக்காக இணை சேர்ந்த டேவிட் வோணர் மற்றும் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆகியோர் அதிரடியாக ஆடினர். இருவரும் 24.2 பந்துப் பரிமாற்றங்களில் 155 ஓட்டங்களைக் குவித்தனர்.

# பெப்சியிடம் IPL அனுசரணை

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஐ.பி.எல். தொடருக்கான 'ரைட்டில் ஸ்பொன்சர்' உரிமையை பெப்சி நிறுவனம் தட்டிச் சென்றது. இதற்காக ரூ. 396.8 கோடி இந்திய ரூபாய் வழங்குகிறது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில், 'ரி-20' போட்டி, கடந்த ஐந்து ஆண்டுகளாக வெற்றிகரமாக நடந்தது. இதன் 'ரைட்டில் ஸ்பொன்சராக' டி.எல்.எப். (ரூ. 250 கோடி) நிறுவனம் இருந்தது. இதன் ஒப்பந்தத்தை புதுப்பிக்க, இந்திய கிரிக்கெட் சபை (ஐ.பி.எல்.) அதிக தொகை எதிர்பார்த்தது. இதனால், டி.எல்.எப். நிறுவனம் விலகியது. புதிய நிறுவனத்தை தேர்வு செய்ய ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதற்கான கடைசி நாளான நேற்று முன்தினம் ஏயார்டெல் (ரூ. 316 கோடி), பெப்சி என்று, இரு நிறுவனங்கள் மட்டும் உரிமை கோரின. இதில் அதிக தொகைக்கு (ரூ. 396.8 கோடி) ஏலம் கேட்ட பெப்சி, 2017 ஆம் ஆண்டு வரையிலான அனுசரணை உரிமையை பெற்றது.

**ஜனவரியில் வீரர்கள் ஏலம்**

ஆறாவது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் வரும் 2013, ஜனவரி 12 இல் சென்னை அல்லது 8 நாள்கள் கழித்து கொல்கத்தாவில் நடக்கலாம் எனத் தெரிகிறது. மும்பை பயங்கரவாத தாக்குதல் காரணமாக, முதல் (2008) ஐ.பி.எல்., தொடருக்குப் பின்னர், அடுத்த நான்கு ஆண்டுகள் பங்கேற்காத பாகிஸ்தான் வீரர்களுக்கு இம்முறை அனுமதி கிடைக்கலாம்.

(5)



# உமேஸ் யாதவ் காயம்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொரின் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ள நிலையிலேயே தற்போது இந்திய அணிக்கு இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஆட்டத்தில் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்த உமேஷ் யாதவ், அந்த ஆட்டத்தில் அதிக வேகமாகப் பந்துவீசிய பந்துவீச்சாளராகவும் காணப்பட்டார். முதல் இனிங்ஸில் 7 பந்துப் பரிமாற்றங்களை மாத்திரம் வீசி ஒரு இலக்கைக் கைப்பற்றிய அவர், இரண்டாவது இன்னிங்ஸில் மிகச்சிறப்பாகப் பந்துவீச 3 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

இந்த நிலையில் முதலாவது ஆட்டத்தை அடுத்து உமேஷ் யாதவிற்கு கீழ் முதுகுப் பகுதியில் உபாதை ஏற்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக இரண்டாவது ஆட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பாக உறுதியற்ற நிலை காணப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

உமேஷ் யாதவின் உபாதையை அடுத்து வேகப்பந்து வீச்சாளரான அஷோக் டின்டா அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இரண்டாவது ஆட்டம் இடம்பெறவுள்ள மும்பைக்குச் சென்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஷஷ் தொடர் அட்டவணை அறிவிப்பு

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஷ் தொடரில் அடுத்தாண்டுக்கான ஆஷஷ் தொடரின் போட்டி அட்டவணைகள் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ளன. அடுத்த வருடம் இடம்பெறவுள்ள இரண்டாவது ஆஷஷ் தொடர் தொடர் பான போட்டி அட்டவணையே வெளியிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டி ஜூலையில் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள




ஆஷஷ் தொடரை அடுத்து இடம்பெறவுள்ளன.

அடுத்த வருடத்திற்கான ஆஷஷ் தொடரின் முதலாவது தொடராக ஜூலை 10 ஆம் திகதி ஆரம்பித்து ஓகஸ்ட் 25 ஆம் திகதி வரை 5 டெஸ்ட் போட்டி இடம்பெறவுள்ளன. அந்தத் தொடர் பற்றிய விபரங்களை இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை இந்த ஆண்டு ஜூன் மாதத்தின் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் அடுத்தாண்டு நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இரண்டாவது ஆஷஷ் தொடர் நவம்பர் 21 ஆம் திகதி ஆரம்பித்து 2014 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

2010/11 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இறுதி ஆஷஷ் தொடரை ஆஸ்திரேலியாவில் வைத்து வெற்றி கொண்டு இங்கிலாந்து அணி தற்போதைய ஆஷஷ் கிண்ணத்தைத் தங்கள் வசம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தொடருக்கான முழுமையான போட்டி அட்டவணை:**

**நவம்பர் 21 - 29: முதலாவது டெஸ்ட் - பிறிஸ்பேர்ண்**

**டிசெம்பர் 5 - 9: இரண்டாவது டெஸ்ட் - அடிலெய்ட்**

**டிசெம்பர் 13 - 17: மூன்றாவது டெஸ்ட் - பேர்த்**

**டிசெம்பர் 26 - 30: நான்காவது டெஸ்ட் - மெல்பேர்ண்**

**ஜனவரி 3 - 7: ஐந்தாவது டெஸ்ட் - சிட்னி**

(5)

# பின் தொடர்ந்தும் உபாதையில்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்துக்கான அணியில் ஸ்டீவன் பின் இடம்பெற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட உடல் உபாதை காரணமாகவே அவர் பங்குபெற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி பங்குகொண்ட முதலாவது பயிற்சி ஆட்டத்தில் உபாதைக்குள்ளான ஸ்டீவன் பின், அதன் பின்னர் தொடர்ச்சியாகக் குணமடைந்து வந்ததோடு இரண்டாவது ஆட்டத்தில் பங்குகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர், தனது உடற்தகுதியை நிரூபிப்பதற்காக ஸ்டீவன் பின் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு வந்ததாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரது காலில் மீண்டும் உபாதையேற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே இரண்டாவது ஆட்டத்தில் அவர் பங்குகொள்ள மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டீவன் பின்னுக்கு ஏற்பட்ட உபாதை தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அன்டி பிளவர், அவருக்கான ஸ்கான் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார். ஸ்கான் பரிசோதனையின் பின்னர் இந்தத் தொடரில் அவர் பங்குபெறுவது பற்றிய முடிவு எடுக்கப்படும் என்று அன்டி பிளவர் மேலும் தெரிவித்தார்.

(5)



# பதிலடி கொடுக்குமா இங்கிலாந்து?




இந்தியா- இங்கிலாந்து அணிகளுகிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று மும்பையில் ஆரம்பமாகவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டியில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தைத் தோற்கடித்த உற்சாகத்தோடு இந்திய அணி களமிறங்கவுள்ளது. அத்தோடு மும்பை மைதானமும் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளதால், இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் ஓஜா- அஸ்வின் சுழல் கூட்டணி மூலம் இங்கிலாந்தை வீழ்த்த இந்தியா திட்டம் தீட்டியுள்ளது.

ஆயினும் ''இந்திய சுழல்பந்து வீச்சாளர்களை முதலாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் எங்களால் எதிர்கொள்ள முடியவில்லை. ஆனால் அதிலிருந்து இரண்டாவது இன்னிங்ஸில் மீண்டிருந்தோம். எனவே இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை அவர்களது மைதானத்தில் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று அனுபவ ரீதியாகக் கற்றுக்கொண்டு விட்டோம். ஆகவே இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா எங்களிடம் கடும் சவாலைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும்'' என்று அந்த அணியின் தலைவர் அலஸ்ரர் குக் தெரிவித்துள்ளார். ''இங்கிலாந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் கெவின் பீற்றர்சன் முதலாவது டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் ஏமாற்றியிருந்தார். அவர் மீண்டும் தன்னுடைய பழைய ஆட்டத் திறனை வெளிப்படுத்தினால் இங்கிலாந்து அணி மிகப் பெரிய இலக்கை இந்தியாவுக்கு நிர்ணயித்து நெருக்கடி ஏற்படுத்த முடியும்'' என்று இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் அன்டிபிளவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சியில்.. பிரித்தினியா நிறுவனத்தில் பிரித்தானிய சான்றிதழுடன் இலவசமாக கணனிக்கல்வி பயில விருப்பமா?

**இலவச கணனி பயிற்சி வகுப்பு**

வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபற்றலாம்

இலவச பாடக் குறிப்புகள்

பயிற்சி நெறியில் இணைய விரும்புவர்களுக்கான நேர்முகத் தேர்வு 29.11.2012 வியாழன் காலை 10.30 மணிக்கு நடைபெறும்

லிட்டில் ஏய்ட் இலவச கணனிப் பயிற்சிக் கல்லூரி கனகராசா வீதி, ஜெயந்தி நகர், கிளிநொச்சி மேலதிக விபரங்களுக்கு பதிவுகளுக்கும் - 0755062806

**VACANCY**

LAKELAND INTER - AMERICAN MONTESSORI & DAY CARE CENTRE

Teachers For Year-1 to 5 (female)

(Experience, trained teachers will be considered too.)

- Fluency in English.
- 2-3 year Experience.
- Attractive salary waits the right candidate.

Forward your application,along with your CV. Photograph and contact number to:

**Director:**
**No.154, Brown road,**
**Jaffna.**

T.P.No:021-2226242,021-2228700
E-mail:aerolankajaf@gmail.com
website:www.lakeland.edu.lk

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடையா, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9மணி முதல் மாலை 5மணி வரை)

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் தோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

**FRENCH LANGUAGE CENTRE**

FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

Speaking, Listening, Reading, writing தனித்தனி கவனம் செலுத்தப்படும்.

குறுகிய காலத்தில் சர்வதேச தரத்திலான சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| No.07, Palaly Road, Jaffna.<br>(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)<br>பிரிவு I Sat, Sun 10am (24.11.2012)<br>பிரிவு II Mon, Tue 11am (26.11.2012) | M.M.V வீதி, காளி கோயிலடி, நெல்லியடி.<br>பிரிவு I Mon 3.30pm<br>(26.11.2012) |

German, Swiss (Deutch) வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு : 0779789456

**செங்கல் விற்பனைக்கு**

தரமான செங்கல் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: பிரணவன் என்டர்பிரைசஸ். பருத்தித்துறை வீதி, (சங்கிலியன் சிலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். 0773818799

**கம்ப்யூட்டர் ருடே**

''கம்ப்யூட்டர் ருடே'' டிசம்பர் மாத இதழுக்கான ஆக்கங்கள், விளம்பரங்கள் கோரப்படுகின்றன. கிடைக்கவேண்டிய கடைசிநாள் இம்மாதம் 28 ஆம் திகதி.

தொடர்புகளுக்கு: ''கம்ப்யூட்டர் ருடே''
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : comtoday @ uthayan.com
Phone: 0215676700

(சி/1881)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.